தரம் 11

# நாடகமும் அரங்கியலும்

## ஆசிரியர் வழிகாட்டி

(2016 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்பெறும்)



அழகியற்கல்வித் துறை
தேசிய கல்வி நிறுவகம்
ஸ்ரீ லங்கா
Web: www.nie.lk
Email: info@nie.lk

# நாடகமும் அரங்கியலும்

## ஆசிரியர் வழிகாட்டி

## தரம் 11

**(2016 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்பெறும்)**

அழகியற்கல்வித் துறை,
மொழிகள், மானுடவியல் சமூக விஞ்ஞான பீடம்,
தேசிய கல்வி நிறுவகம்,
மஹரகம
**www.nie.lk**
**info@nie.lk**

நாடகமும் அரங்கியலும்.
ஆசிரியர் வழிகாட்டி,
தரம் - 11
பாடத்திட்டம் - 2016.

© தேசிய கல்வி நிறுவகம், மஹரகம.

ISBN

முதலாம் பதிப்பு : 2016
தேசிய கல்வி நிறுவகம்

அழகியற்கல்வித் துறை,
மொழிகள், மானுடவியல், சமூக விஞ்ஞான பீடம்,
தேசிய கல்வி நிறுவகம்.
மஹரகம.

இணையத்தளம் : **www.nie.lk**
மின்னஞ்சல் : **info@nie.lk**

பதிப்பு :
தேசிய கல்வி நிறுவகம்

## பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி

இலங்கையின் இடைநிலைக் கல்வியில் எட்டு ஆண்டுகளுக்கொருமுறை மேற்கொள்ளப் பெறும் கலைத்திட்ட மறுசீரமைப்பின் வழியாகப் புதிய தேர்ச்சி மையக் கலைத்திட்டத்தின் முதற் கட்டம் 2007 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பெற்றது. தேசிய கல்வி ஆணைக்குழு வின் விதப்புரைகளுக்கமையத் தேசிய மட்டத் தேர்ச்சிகளை அபிவிருத்தி செய்யும் நோக்கின் அடிப்படையில் அப்போது நடைமுறையிலிருந்த உள்ளடக்கம் சார்ந்த கல்வி முறைமை இதன் மூலம் மாற்றியமைக்கப்பட்டது.

தேர்ச்சி மையக் கலைத்திட்டத்தின் இரண்டாம் கட்ட மறுசீரமைப்பானது 2015ஆம் ஆண்டிலிருந்து தரம் 7, 11 ஆகிய வகுப்புக்களுக்கு அமுற்படுத்தப்பெற உள்ளது. இந் நோக்கத்தை அடையும் பொருட்டுத் தேசிய கல்வி நிறுவகம் ஆய்வை அடிப்படையாகக் கொண்ட பேறுகளையும் ஆர்வலர்களுடைய பல்வேறு ஆலோசனைகளையும் பலதரப்பட்டவர் களிடமிருந்தும் பெற்றுக்கொண்டது. அவற்றின் அடிப்படையில் நியாயப்படுத்தப்பட்டதொரு செயன்முறையை அறிமுகப்படுத்தியதுடன் அதற்கமைவான பாடத்திட்டங்களையும் மேற்படி தரங்களுக்காக விருத்தி செய்துள்ளது.

இந்த நியாயப்படுத்தற் செயன்முறையிற் கலைத்திட்ட மறுசீரமைப்பின்போது நிலைக்குத்தான ஒருங்கிணைப்பு முறை பயன்படுத்தப்பெற்று, கீழிருந்து மேல்நோக்கிய அணுகுமுறையில் அனைத்து பாடங்களுக்குமான தேர்ச்சி மட்டங்கள் முறைமையாக விருத்தி செய்யப்பட் டுள்ளன. மேலும், அடிப்படை விடயங்களிலிருந்து உயர் மட்டத்தை நோக்கிச் செல்லும் வகையில் அவை ஒழுங்குபடுத்தப்பட்டும் உள்ளன. பாட உள்ளடக்கத்திற் காணப்படும் கூறியது கூறல் மற்றும் பாட உள்ளடக்கச் சுமை என்பவற்றை இழிவு நிலைக்கு இட்டுச் செல்லவும் மாணவர் நேயமானதும் நடைமுறைக்கேற்றதுமான கலைத்திட்டமொன்றை உருவாக்கும் நோக்கிலும் கிடையான ஒருங்கிணைப்பானது பயன்படுத்தப்பட்டுள்ளது.

ஆசிரியர்களுக்குத் தேவையான வழிகாட்டல்களை வழங்கவும் பாடத்தைத் திட்டமிடவும் கற்பிக்கவும் செயற்பாடுகளை முன்னெடுக்கவும் அளவீடு மற்றும் மதிப்பீடுகளை மேற்கொள்ளவும் உதவுமுகமாக ஆசிரியர் வழிகாட்டியிற் புதிய வடிவமைப்பு அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது. இவ் வழிகாட்டல்கள், ஆசிரியர்கள் வகுப்பறையில் மென்மேலும் உற்பத்தித் திறனுள்ளதும் விளைதிறன் மிக்கதுமான வகையிற் துலங்குவதற்கு உதவும்.

புதிய ஆசிரியர் வழிகாட்டிகள் மாணவர்களது தேர்ச்சிகளை விருத்தி செய்யும் வகையிற் தர உள்ளீடுகளையும் மேலதிக செயற்பாடுகளையும் தெரிவு செய்வதில் ஆசிரியர்களுக்குச் சுதந்திரத்தை வழங்கியுள்ளது. இப்புதிய ஆசிரியர் வழிகாட்டிகள் பாட உள்ளடக்கச் சுமையை விடுத்து, விதந்துரைக்கப்பெற்ற பாடநூல்களின் மூலம் பாட உள்ளடக்கத்தைப் பூரணப்படுத்தியுள்ளது. ஆகவே, ஆசிரியர்கள் புதிய ஆசிரியர் வழிகாட்டிகளைப் பயன்படுத்தும் அதேவேளை கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினாற் தயாரிக்கப்பெற்ற பாடநூல்களையும் பொருத்தமான வகையிற் பயன்படுத்துதல் வேண்டும்.

ஆசிரியர் மையக் கல்வி முறைமையிலிருந்து மாணவர் மையக் கல்வி முறைமைக்குத் தளமாற்றம் செய்வதும் வேலையுலகிற்கு ஏற்ற வகையிற் பொருத்தமான மனித வளங்களை விருத்தி செய்வதும் தேவையான தேர்ச்சிகளையும் திறன்களையும் பாடசாலையிலிருந்து வெளியேறும் மாணவர்கள் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான செயற்பாடு சார்ந்த கல்வி முறைமையை விருத்தி செய்வதும் மேற்படி நியாயப்படுத்தப்பெற்ற பாடத்திட்டம் மற்றும் ஆசிரியர் வழிகாட்டியின் புதிய வடிவமைப்பு என்பவற்றின் அடிப்படை நோக்கங் களாகும்.

புதிய ஆசிரியர் வழிகாட்டியை உருவாக்குவதிற் பங்களிப்புச் செய்த தேசிய கல்வி நிறுவகத்தின் கல்விசார் அலுவல்கள் சபை மற்றும் பேரவை உறுப்பினர்களுக்கும் அனைத்து வளவாளர்களுக்கும் எனது நன்றிகள் உரித்தாகின்றன.

**பணிப்பாளர் நாயகம்,**
தேசிய கல்வி நிறுவகம்.

## பிரதிப் பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி

கற்றல் என்பது பரந்து விரிந்து செல்வதொன்றாகும். அது வாழ்க்கையை மேம்படுத்தவும் எளிமைப்படுத்தவும் வல்லது. மனிதன் கற்கும் ஆற்றலில் உச்ச நிலையில் உள்ளான். மனித, சமூக அபிவிருத்தியை மையமாகக் கொண்ட ஒரு நாடும் அதன் சமூகமும் அறிவாற்றலினால் இனங்கண்ட, நியமமற்றவற்றைக் களைவதற்கும். நல்லவற்றைப் பண்படுத்திப் புத்துலகைப் படைப்பதற்கும் கருவியாய் அமைவது கல்வியாகும்.

கற்றலுக்காகப் பெறுமதிமிக்கவை எவையோ அவையும், கற்றல் முறையியல்களும் வசதிகளும் கல்வியைச் சூழ உருவாதல் வேண்டும். கலைத்திட்டம், பாடத்திட்டம், வழிகாட்டிகள், வசதி செய்வோர் போன்றவையெல்லாம் இவ்வகையிலேயே கல்வித்துறையிற் சேர்ந்து கொள்கின்றன.

இலங்கை, நவீன செல்நெறிகளையும் பண்டைய அருஞ்செல்வங்களையும் கலக்கச் செய்து தமது கல்விக் கோலத்தை உருவாக்கிக் கொண்டுள்ளது. சமகாலத் தேவைகளுக் கமைய மறுசீரமைப்புகளினூடாக எட்டு ஆண்டுகளுக்கொருதடவை இற்றைப்படுத்தப்பெறும் கலைத்திட்டத்துக்குரிய ஒரு கற்றல் வளமாக இவ்வாசிரியர் வழிகாட்டிகள் தயாரிக்கப் பெறுகின்றன.

பாடக் குறிக்கோள்களின் ஒத்த தன்மையைத் தேசிய மட்டத்திற் பேணுவது அவசியமாகும். எனினும், ஆசிரியர் வழிகாட்டியிற் தரப்பட்டுள்ள கற்றல் முறையியல்கள் சற்றேனும் பிசகாது அச்சொட்டாகப் பயன்படுத்துவதற்குரிவையன்று. பாடத்திட்டத்தின் தேர்ச்சிகள், தேர்ச்சி மட்டங்களை அடையும் பொருட்டு, பாடவிடயங்களின் மூலம் கற்றற் பேறுகளை அண்மிப்பதற்காகக் கற்றல் முறையியல்களை ஆக்கபூர்வமானதாக மாற்றியமைத்துக் கொள்ளும் சுதந்திரம் வசதி செய்து கொடுப்போருக்கு உண்டு என்பதில் ஐயமில்லை. மாணவரது அடைவுச் சதவீதத்தை உயரிய மட்டத்திற்கு இட்டுச் செல்ல உதவும் மற்றும் அதற்கான வசதிகளைச் செய்து கொடுக்கும் ஆசிரியரது வகிபாகத்திற்கு உந்துதலளிப்பதற்காகத் தயாரிக்கப்பெற்றுள்ள ஆசிரியர் வழிகாட்டியை, ஆசிரியர்கள் மட்டுமன்றி மாணவரும் பெற்றோரும் கூட பயன்படுத்தலாம். குறித்த பாடத்தின் பாடநூலுக்குத் துணையாக அமையும் ஒரு சாதனமான இவ்வாசிரியர் வழிகாட்டி மற்றுமொரு பாடநூல் அன்று என்பதை அறிந்து பாடநூல், ஆசிரியர் வழிகாட்டி ஆகிய இரண்டையும் ஆசிரியர்கள் பயன்படுத்த வேண்டும்.

பாடநிறைவில், அந்தந்தப் பாடத்தின் அடைவு தொடர்பில் எதிர்பார்க்கப் பெறும் அடைவுகளை மாணவர்கள் அடைந்துள்ளனரா என்பது பற்றி, வகுப்பறையில் வசதி செய்து கொடுப்பவர்களால் மதிப்பிடப்பெறுதல் வேண்டும்.

மகிழ்வளிக்கத்தக்க செழுமையான பண்பாட்டைக் கட்டியெழுப்புவதற்கான ஒரு கருவியாக இவ்வாசிரியர் வழிகாட்டி அமைய வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

**பிரதிப் பணிப்பாளர் நாயகம்,**
மொழிகள், மானுடவியல், சமூக விஞ்ஞான பீடம்,
தேசிய கல்வி நிறுவகம்.

## கலைத்திட்டக் குழு

**ஆலோசனையும் வழிகாட்டலும்:** **கல்விசார் அலுவல்கள் சபை,**
தேசிய கல்வி நிறுவகம்.

**பாட நிபுணத்துவ ஆலோசனை:** **கலாநிதி ம. சண்முகலிங்கம்,**
விரிவுரையாளர் (ஓய்வு பெற்ற),
யாழ். பல்கலைக்கழகம்.

**பாட இணைப்பாக்கம்:** **திரு. செ. செல்வகுமார்,**
விரிவுரையாளர், அழகியற்கல்வித் துறை.
**திரு. கே. ஜி. அஜித் ரூபசேன,**
செயற்றிட்டத் தலைவர், அழகியற்கல்வித் துறை.

**எழுத்தாளர் குழு:**
**(வெளிவாரி)** **திரு. க. திலகநாதன்,**
விரிவுரையாளர்,
தேசிய கல்வியியற் கல்லூரி, யாழ்ப்பாணம்.
**திருமதி. செ. எ. வைதேகி,**
ஆசிரியர் சேவை, கிளி / பளை மத்திய கல்லூரி.
**திருமதி. கே. ஜீவாஜினி,**
ஆசிரியர் சேவை, யா/ கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி.
**திருமதி. ச. ஜெயந்தி,**
ஆசிரியர் சேவை,
யா/ கைதடி நாவற்குழி அ.த.க. பாடசாலை.
**திரு. யோ. யோன்சன் ராஜ்குமார்,**
ஆசிரியர் சேவை,
யா/ திருக்குடும்பக் கன்னியர் மடம்.

**(உள்வாரி):** **திரு. செ. செல்வகுமார்,**
விரிவுரையாளர், அழகியற்கல்வித் துறை.

**செவ்விதாக்கம்:** **திரு. செ. செல்வகுமார்,**
விரிவுரையாளர், அழகியற்கல்வித் துறை.

**கணினிப் பதிப்பு:** **திருமதி. எம்.என்.எப். றிஹானா**
தேசிய கல்வி நிறுவகம்.

## ஆசிரியர் வழிகாட்டியைப் பயன்படுத்துவதற்கான அறிவுறுத்தல்கள்

21 ஆம் நூற்றாண்டு என்பது அறிவுப் பொருளாதார யுகத்தைக் குறித்து நிற்பதாகும். உலகம் கிராமமாகச் சுருங்கியதைப் போலவே, அறிவுத் திரட்டையும் மிகமிகச் சுருக்கமான தாக்கித் தருவது இந்த நூற்றாண்டின் சவால் மிக்க பணியாகும். உலகளாவிய கல்விச் செயற்பாடுகள் அதனை நோக்கியே குவிக்கப் பெற்றுள்ளன. தொழிற்றுறை மனிதன் இயந்திரமல்லன். அவனை மனிதனாகவே வைத்திருக்கக் கலைகளே பயனுறு பங்காற்று கின்றன. ஆதலால் அன்பு, கருணை, படைப்பாற்றல், ஒற்றுமை, நல்லிணக்கம், பிணைப்பு, பற்றுதி போன்றவற்றை மனிதர்களிடத்திற் பிரவாகிக்கச் செய்வதற்கு அழகியற் பாடங்கள் துணை செய்கின்றன.

நாடகம் மனிதரைப் பற்றிப் பேசுகிறது. அவர்கள் தமக்குட் கொள்ளும் உறவை இரத்தமும் சதையுமாக வெளிப்படுத்துகிறது. அறிவுப் பொருளாதார யுகத்தில் மனிதருக்கு மிக வேண்டப்பெறுகின்ற தொடர்பாடற் திறன், ஆளுமைத் திறன், கூட்டுணர்வு சார் நடத்தைகள், துல்லியமான, தெளிவான பேச்சு போன்றவற்றை விருத்தியுறச் செய்வதற்கு நாடகம் மிகவும் தாக்கவன்மையான சாதனமாகும். ஆகவேதான் இலங்கையின் பொதுக் கல்வித் துறையில் தரம் 6 முதல் தரம் 13 வரை நாடகமும் அரங்கியலும் ஒரு விளைதிறன் மிக்க பாடமாக முன்னிறுத்தப் பெற்றுள்ளது.

குறிப்பாகத் தரம் 11இற் செய்முறையுடன் இணைந்த அறிமுறைசார் கற்றலுக்கு அதிக முக்கியத்துவம் வழங்கப்பெற்றுள்ளது. நாடகத் தயாரிப்பு, நாடக நெறியாள்கை, இசை மற்றும் ஒலி விதானிப்பு, ஒளி விதானிப்பு, மரபுவழி நாடகப் பயில்வு, பா நாடகப் பகுப்பாய்வும் நயப்பும் என மாணவரின் படைப்பாற்றல் மற்றும் கற்பனை விருத்தியுடன் தொடர்புடைய விடயங்கள் பாடத்திற் சேர்க்கப் பெற்றுள்ளன. அதேவேளை வகுப்பறைக் கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகள் தொடர்பிற் திட்டமிடுவதற்கு ஆசிரியருக்கு அதிக சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளதை இந்த ஆசிரியர் வழிகாட்டி சுட்டிக் காட்டுகிறது. ஒவ்வொரு பாடவிடய உள்ளடக்கம் தொடர்பிலும் கற்றல் - கற்பித்தற் செயலொழுங்கு இங்கு முன்வைக்கப் பெற்றுள்ளது. அவற்றை மாணவர்களுடன் தொடர்புறுத்துவதற்கான முறையியல் தொடர்பில், சில முன்மாதிரியான உதாரணங்கள் தரப்பெற்றுள்ளன. ஆசிரியர்கள் பாடவிடயம், வகுப்பறைச் சூழல், மாணவரின் நிலை, பாடவேளை போன்ற அம்சங்களைக் கருத்திற் கொண்டு பொருத்தமான முறையியலை வகுத்துக் கொள்ள முடியும். எவ்வாறெனினும், அவை மாணவரைச் செயற்படுபவராகவும் ஆசிரியரை வசதிசெய்யும் வகிபாகத்தைக் கொண்டிருப்பவராகவும் கொள்ளும் வகையில் அமைதல் வேண்டும் என்று எதிர்பார்க்கப் பெறுகின்றது.

2015 முதல் கற்றற் பேறுகளை அடிப்படையாகக் கொண்ட தேர்ச்சி மையக் கலைத் திட்டம் நடைமுறைக்கு வருகிறது. ஆசிரியர் வழிகாட்டியிற் சில அடிப்படையான கற்றற் பேறுகள் முன்வைக்கப் பெற்றுள்ளன. ஆசிரியர்கள் ஒவ்வொரு பாடவேளையையும் திட்டமிடும்போது, அக்கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகளின் நிறைவில் மாணவர்கள் எத்தகைய அடைவைக் காட்டுவார்கள் என்பதை எதிர்நோக்கிக் கற்றற் பேறுகளைகளைத் தாமாகவே தயாரித்துக் கொள்ள வேண்டும். கற்றல் - கற்பித்தற் செயன்முறையின் போது கணிப்பீடு மதிப்பீடுகளைச் செய்வதன் வழியாக எதிர்பார்க்கப் பெற்ற கற்றற் பேறுகளை மாணவர்கள் அடைந்துள்ளனரா என்பதை அவதானித்து, பரிகாரச் செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும்.

ஆசிரியர்களின் தேடலுக்கும், படைப்பூக்கத்திற்கும் வழிசமைக்கும் வகையிற் போதிய வாய்ப்புக்கள் ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. குறித்த தரத்திற் கற்கும் மாணவர்களின் வயது மற்றும் ஆளுமைப் பண்புகளுக்கு ஏற்ப, அமைக்கப் பெற்றுள்ள விடய உள்ளடக்கத் தினை எந்தளவிற்குக் கற்பிப்பது என்பதற்கான குறிப்புக்களாகப் பாடத் திட்டமிடலுக்கான அறிவுறுத்தல்கள் அமைந்துள்ளன.

புதிதாக அறிமுகஞ் செய்யப் பெற்றுள்ள மற்றும் தேடிப் பெறக் கடினமான உள்ளடக்கங்கள் தொடர்பில் மாத்திரம் சற்று விரிவான குறிப்புக்கள் தரப்பட்டுள்ளன. அவ்வகையிற் செய்முறை சார்ந்த கற்றல் - கற்பித்தற் செயலொழுங்கைக் கட்டியெழுப்புவதற்கு இவ்வழிகாட்டி ஆசிரியர்களுக்குப் பயனுறுதி வாய்ந்ததாய் அமையும் என்று நம்புகின்றோம்.

**செயற்றிட்டக் குழு**

# உள்ளுறையாக


- பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி iii
- பிரதிப் பணிப்பாளர் நாயகத்தின் செய்தி iv
- கல்வி வெளியீட்டுத் திணைக்கள ஆணையாளர் நாயகத்தின் செய்தி v
- கலைத்திட்டக் குழு vi
- ஆசிரியர் வழிகாட்டியைப் பயன்படுத்துவதற்கான அறிவுறுத்தல்கள் vii
- அறிமுகம் ix
- தேசிய இலக்குகள் xi
- அடிப்படைத் தேர்ச்சிகள் xii
- பாடக் குறிக்கோள்கள் xiv
- விரிவான பாடத்திட்டம் xv
- தவணை நிலைப்பட்ட பாடவிரிப்பு xxvii
- கற்றல் - கற்பித்தற் செயலொழுங்கிற்கான ஆலோசனைகள் 1- 100

# விரிவான பாடத்திட்டம்

# அறிமுகம்

இலங்கையின் கல்வி மறுசீரமைப்புக்கான செல்நெறி தொடர்பில் 2007 குறிப்பிடத்தக்கதொரு ஆண்டாகும். உலகப் பரப்பில் நிகழ்ந்து வருகின்ற உலகமயமாதற் போக்குகளுக்கேற்ப மேற்கிளம்பிய, புதிய மாதிரியிலான சவால்களுக்கு முகங்கொடுக்கும் வகையில் ஒரு பண்பு மாற்றம் அந்த வருடத்தில் தான் தொடங்கியது. புதிய சகாப்தத்திற்கான கல்வி மறுசீரமைப்பு எனத் தெரியவந்த தேர்ச்சி மையக் கலைத்திட்ட நோக்கே அது. இதுவரை காலக் கல்விப் போக்கில் அறிதல் ஆட்சிக்கு மாத்திரமே வழங்கப்பெற்றிருந்த முக்கியத்துவத்திற்கு அது முடிவுகட்ட முனைந்தது.

ஒன்றிணைந்த ஆளுமைப் பண்புகளான சிந்தனைத் திறன்கள், சமூகத் திறன்கள், சுயதிறன்கள் என்பவற்றை விருத்தி செய்யும் வகையிலான சிறந்த பொதுக் கல்வியை வழங்குவது முதலாவது கலைத்திட்ட மறுசீரமைப்பின் முக்கிய நோக்கமாக அமைந்திருந்தது.

2015ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்பெறும், புதிய சகாப்தத்தின் இரண்டாவது கலைத்திட்ட மறுசீரமைப்பானது, தேர்ச்சியை அடிப்படையாகக் கொண்ட மாணவர் மையக் கலைத்திட்டத்தை இன்னொரு தளத்திற்கு எடுத்துச் செல்லும் பயனுறுதி வாய்ந்த நடவடிக்கை ஆகும். ஏனெனில், அது அடுத்துவரும் இருபது ஆண்டுகளில் தேசிய, சர்வதேசிய ரீதியில் சந்திக்க நேரிடும் நோக்குகள், போக்குகள், மாறுதல்கள், சவால்கள் என்பவற்றிற்கான வருமுன் காக்கும் நடவடிக்கையாகும்.

உலகளாவிய விஞ்ஞான, தொழில்நுட்ப இலத்திரனியல் விருத்தி காரணமாக எமது அறிவுத் திரட்டில் பாரிய மாற்றம் ஏற்பட்டு வருகிறது. பழைய அறிவின் இடத்தில் புதிய அறிவு தோன்றியுள்ளது. இந்த அறிவுப் பிரவாகம் காரணமாக, கைத்தொழில் யுகத்திலிருந்து அறிவுப் பொருளாதார யுகத்திற்கான மாறுதல் ஒன்று நடைபெற்று வருகிறது. உலக மனிதன் என்கிற கருத்தாக்கம் விருத்தியுற்று வருகிறது. எனவே, எமது மாணவர் சமூகம் படைப்பாற்றலற்ற மனன கலாசாரத்திற்குள் இருக்க முடியாது. இந்த நிலைமைகளுக்குத் தாக்குப்பிடிக்கும் வல்லமையுடைய தலைமுறையை உருவாக்குவது என்பது நமது பொதுக் கல்வித்துறைக்கு விடப்பட்ட சவாலாகும். எனவே,

1. தாமாக முன்வந்து தொடங்கும் மனப்பாங்குள்ள
2. தீர்மானங்களை எடுக்கும் திறனுடைய
3. பிரச்சினை தீர்க்கும் வல்லமையுடைய
4. முரண்பாடுகளை முகாமை செய்யும் ஆற்றலுள்ள
5. மற்றவர்களுடன் தாக்கவன்மையான தொடர்பாடலை மேற்கொள்ளத்தக்க

6. குழுவாகப் பணியாற்றும் இயலுமையும், மனமும் உள்ள

7. தலைமைதாங்கும் பண்புடைய

8. மொழியறிவுடைய

புதிய பரம்பரையொன்றை எழுச்சிபெறச் செய்யும் தேவை பொதுக் கல்வித் துறைக்கு ஏற்பட்டிருக்கிறது.

இவ்வாறான, நிலைமைகள் சிந்தனைகளைக் கருத்துடன் உள்வாங்கிக் கொண்டுதான் நாடகமும் அரங்கியலும் புதிய பாடத்திட்டம் ஆக்கப் பெற்றுள்ளது. நாடகம் மனிதர்களுடன் இரத்தமும் சதையுமான தொடர்பைக் கொண்டிருக்கின்ற ஒரு அவைக்காற்றுக் கலை ஆகும். எனவே, நாடகம் மனிதரின் உணர்ச்சிகள், எண்ணங்கள், அபிலாஷகள், விழுமியங்கள், திறன்கள் மற்றும் பண்பாடு என்பவற்றுடன் ஊடாடுகின்ற கலை வடிவம் ஆகின்றது. இதன் மூலமாக நல்லிணக்கம், ஒற்றுமை, பிணைப்பு, பற்றுறுதி போன்ற பண்புகளுடன் கூடிய ஒன்றிணைந்த ஆளுமைத் திறன்களை விருத்தி செய்ய முடியும். ஆகவே, நாடகமும் அரங்கியலும் தேசிய இலக்குகளை அடைவதற்கான மிகநெருக்கமான பாடமாகவும் உள்ளது.

புதிய சகாப்தத்திற்கான இரண்டாவது கலைத்திட்ட மறுசீரமைப்பின் போது, கலைத்திட்டச் சட்டகத்தில் குறிப்பிடத்தக்க கட்டமைப்பு மாற்றங்கள் எவையும் செய்யப்பெறவில்லை. அதேவேளை, பாடத்திட்டத்தில் கற்றற் பேறுகள் என்கிற விடயம் இணைக்கப்பட்டுள்ளது. கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகளின் நிறைவில் மாணவரிடம் எதிர்பார்க்கப்பெறுகின்ற அடைவைச் சுட்டுவனவாக கற்றற் பேறுகள் அமைகின்றன. கணிப்பீடு மதிப்பீடுகள் மூலம் கற்றற் பேறுகளை அடையாளம் கண்டுகொள்ள முடியும். இந்த அடித்தளத்தில் நின்றே நாடகமும் அரங்கியலும் பாடத்திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

பொதுக் கல்வியானது மாணவர்களை வேலையுலகிற்குத் தயார்ப்படுத்துவதற்கான அடித்தளத்தை இடவேண்டும் என்கிற வகையில் நாடகமும் அரங்கியலும் பாடத்திட்டமானது எழுத்துருவாக்கம், ஒப்பனை, ஆடை வடிவமைப்பு, ஒலி விதானிப்பு, ஒளி விதானிப்பு, காட்சி விதானிப்பு போன்ற கலை நுட்ப விடயங்களையும் தன்னகத்தே கொண்டிருக்கின்றது, இதன் ஊடாகத் தொழிற் தேர்ச்சியும், படைப்பாக்க ஆளுமையும் உடையவர்களாக மாணவர்கள் உருவாக முடியும். அதனுடன் கூடவே நாடகக் கலைஞர்களாக , மானுட நேயமிக்கவர்களாக, அழகியல் நயப்புணர்வுடையவர்களாக அவர்கள் மிளிர முடியும் என்பது எமது நம்பிக்கையாகும்.

தவிர, பிரதான பாடங்களை இலகுவாகக் கற்பிப்பதற்கான முறையாகவும், அவதானம், கருத்தூன்றல், தர்க்க சிந்தனை என்பவற்றிற்கான அடிப்படைத் திறன்களை விருத்தி செய்யக் கூடிய துறையாகவும் நாடகம் வளர்ந்து வரும் பின்னணியில் நாடகமும் அரங்கியலும் பாடப் பயில்வு வழியாக மற்றப் பாடங்களையும் வினைத்திறனுடன் கற்க வசதி செய்ய முடியும் எனவும் எதிர்பார்க்கப் பெறுகின்றது.

அழகியற்கல்வித் துறை
தேசிய கல்வி நிறுவகம்.

# தேசிய இலக்குகள்

தேசிய கல்வி முறைமையானது தனிநபர்க்கும் சமூகத்திற்கும் பொருத்தமான பெரும்பாலான தேசிய இலக்குகளை அடைவதற்குத் தனிநபர்களுக்கும் குழுவினருக்கும் உதவி செய்தல் வேண்டும்.

கடந்த காலங்களில் இலங்கையின் பெரும்பாலான கல்வி அறிக்கைகளும் ஆவணங்களும் தனிநபர் தேவைகளையும் தேசிய தேவைகளையும் நிறைவு செய்வதற்காக இலக்குகளை நிர்ணயித்துள்ளன. சமகாலக் கல்வி அமைப்புகளிலும் செயன்முறைகளிலும் வெளிப்படையாகக் காணப்படும் பலவீனங்கள் காரணமாக நிலைபேறுடைய மனித விருத்தியின் எண்ணக்கருத் திட்ட வரம்பினுள் கல்வியினூடாக அடையக் கூடிய பின்வரும் இலக்குத் தொகுதியினைத் தேசிய கல்வி ஆணைக்குழு இனங்கண்டுள்ளது.

1. மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் எனும் எண்ணக்கருவிற்குள் தேசியப் பிணைப்பு, தேசிய முழுமை, தேசிய ஒற்றுமை, இணக்கம், சமாதானம் என்பவற்றை மேம்படுத்தல் மூலமும் இலங்கைப் பன்மைச் சமூகத்தின் கலாசார வேறுபாட்டினை அங்கீகரித்தல் மூலமும் தேசத்தைக் கட்டி எழுப்புதலும் இலங்கையர் எனும் அடையாளத்தை ஏற்படுத்தலும்.

2. மாற்றமுறும் உலகத்தின் சவால்களுக்குத் தக்கவாறு முகங்கொடுத்தலோடு தேசிய பாரம்பரியத்தின் அதி சிறந்த அம்சங்களை அங்கீகரித்தலும் பேணுதலும்.

3. மனித உரிமைகளுக்கு மதிப்பளித்தல், கடமைகள், கட்டுப்பாடுகள் பற்றிய விழிப்புணர்வு, ஒருவர் மீது ஒருவர் கொண்டுள்ள ஆழ்ந்த, இடையறாத அக்கறையுணர்வு, என்பவற்றை மேம்படுத்தும் சமூக நீதியும் ஜனநாயக வாழ்க்கைமுறை நியமங்களும் உள்ளடங்கிய சுற்றாடலை உருவாக்குதலும் ஆதரித்தலும்.

4. ஒருவரது உள, உடல் நலனையும் மனித விழுமியங்களுக்கு மதிப்பளிப்பதை அடிப்படையாகக் கொண்ட நிலைபேறுடைய வாழ்க்கைக் கோலத்தையும் மேம்படுத்தல்.

5. நன்கு ஒன்றிணைக்கப்பட்ட சமநிலை ஆளுமைக்குரிய ஆக்க சிந்தனை, தற்றுணிபு, ஆய்ந்து சிந்தித்தல், பொறுப்பு, வகைகூறல் மற்றும் உடன்பாடான அம்சங்களை விருத்தி செய்தல்.

6. தனிநபரதும் தேசத்தினதும் வாழ்க்கைத் தரத்தைப் போஷிக்கக் கூடியதும் இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிக்கக் கூடியதுமான ஆக்கப் பணிகளுக்கான கல்வியூட்டுவதன் மூலம் மனிதவள அபிவிருத்தியை ஏற்படுத்தல்.

7. தனிநபர்களின் மாற்றத்திற்கு ஏற்ப இணங்கி வாழவும், மாற்றத்தை முகாமை செய்யவும் தயார்ப்படுத்தவும் விரைவாக மாறிவரும் உலகில் சிக்கலானதும், எதிர்பாராததுமான நிலைமைகளைச் சமாளிக்கும் தகைமையை விருத்தி செய்தல்.

8. நீதி, சமத்துவம், பரஸ்பர மரியாதை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு சர்வதேச சமுதாயத்தில் கௌரவமானதோர் இடத்தைப் பெறுவதற்குப் பங்களிக்கக் கூடிய மனப்பாங்குகளையும் திறன்களையும் வளர்த்தல்.

*(தேசிய கல்வி ஆணைக்குழு அறிக்கை - 2003)*

# அடிப்படைப் பொதுத் தேர்ச்சிகள்

கல்வியினூடாக விருத்தி செய்யப்படும் பின்வரும் அடிப்படைத் தேர்ச்சிகள் மேற்குறித்த தேசிய இலக்குகளை அடைவதற்கு வழிவகுக்கும்.

## I. தொடர்பாடற் தேர்ச்சிகள்

தொடர்பாடல் பற்றிய தேர்ச்சிகள் நான்கு துணைத் தொகுதிகளை அடிப்படையாகக் கொண்டவை. எழுத்தறிவு, எண்ணறிவு, சித்திர அறிவு, தகவற் தொழினுட்பத் தகைமை.

எழுத்தறிவு : கவனமாகச் செவிமடுத்தல், தெளிவாகப் பேசுதல், கருத்தறிய வாசித்தல், சரியாகவும், செம்மையாகவும் எழுதுதல், பயன்தரு வகையான கருத்துப் பரிமாற்றம்.

எண்ணறிவு : பொருள், இடம், காலம் என்பவற்றுக்கு எண்களைப்பயன்படுத்தல், எண்ணுதல், கணித்தல், ஒழுங்கு முறையாக அளத்தல்.

சித்திர அறிவு: கோடு, உருவம் என்பவற்றின் கருத்தை அறிதல், விபரங்கள், அறிவுறுத்தல்கள்,எண்ணங்கள் ஆகியவற்றைக் கோடு, உருவம், வர்ணம் என்பவற்றால் வெளிப்படுத்தலும் பதிவு செய்தலும்.

தகவற் தொழினுட்பத் தகைமை: கணினி அறிவு, கற்றலில், தொழில் சுற்றாடலில், சொந்த வாழ்வில் தகவற் தொடர்பாடற் தொழினுட்பங்களைப் (ICT) பயன்படுத்தல்.

## II. ஆளுமை விருத்தி தொடர்பான தேர்ச்சிகள்

- ஆக்கம், விரிந்த சிந்தனை, தற்றுணிபு, தீர்மானம் எடுத்தல், பிரச்சினை விடுவித்தல், நுணுக்கமான மற்றும் பகுப்பாய்வுச் சிந்தனை, அணியினராகப் பணி செய்தல், தனியாள் இடைவினைத் தொடர்புகள், கண்டு பிடித்தலும் கண்டறிதலும் முதலான திறமைகள்.

- நேர்மை, சகிப்புத்தன்மை, மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் ஆகிய விழுமியங்கள்

- மன எழுச்சி, நுண்ணறிவு.

**III. # o y ; nj hl Hghd Nj Hr;r pf s;**

இத் தேர்ச்சிகள் சூழலோடு தொடர்புறுகின்றன. சமூகம், உயிரியல், பௌதிகம்

சமூகச் சூழல்: தேசிய பாரம்பரியம் பற்றிய விழிப்புணர்வு, பன்மைச் சமூகத்தின் அங்கத்தவர்கள் என்ற வகையிற் தொடர்புறும் நுண்ணுணர்வுத் திறன்களும், பகிர்ந்தளிக்கப்படும் நீதி, சமூகத் தொடர்புகள், தனிநபர் நடத்தைகள், பொதுவானதும் சட்டபூர்வமானதுமான சம்பிரதாயங்கள், உரிமைகள், பொறுப்புக்கள், கடமைகள், கடப்பாடுகள் என்பவற்றில் அக்கறையும்.

உயிரியற் சூழல்: வாழும் உலகு, மக்கள், உயிரியல், சூழற்றொகுதி - மரங்கள், காடுகள், கடல், நீர், வளி, உயிரின தாவரம், விலங்கு, மனித வாழ்வு.

பௌதிகச் சூழல்: இடம், சக்தி, எரிபொருள், சடப்பொருள், பொருள்கள் பற்றியும் அவை மனித வாழ்க்கை, உணவு, உடை, உறையுள், சுகாதாரம், சௌகரியம், சுவாசம், நித்திரை, இளைப்பாறுதல், ஓய்வு, கழிவுகள், உயிரின கழிவுப் பொருள்கள் ஆகியவற்றுடன் கொண்டுள்ள தொடர்பு பற்றிய விழிப்புணர்வும், நுண்ணுணர்வுத் திறன்களும். கற்றலுக்கும் வேலை செய்வதற்கும், வாழ்வதற்கும் கருவிகளையும் தொழினுட்பங்களையும் பயன்படுத்தும் திறன்களும் இங்கு உள்ளடக்கப்பட்டுள்ளன.

**IV. வேலை உலகத்திற்குத் தயார் செய்தல் தொடர்பான தேர்ச்சிகள்**

- அவர்களது சக்தியை உச்ச நிலைக்குக் கொண்டு வருவதற்கும் அவர்களது ஆற்றலைப் போஷிப்பதற்கும் வேண்டிய தொழில்சார் திறன்கள்.
- பொருளாதார விருத்திக்குப் பங்களித்தல்.
- அவர்களது தொழில் விருப்புக்களையும் உளச்சார்புகளையும் கண்டறிதல்.
- அவர்களது ஆற்றல்களுக்குப் பொருத்தமான வேலையைத் தெரிவு செய்தல்.
- பயனளிக்கக் கூடியதும் நிலைபேறுடையதுமான ஜீவனோபாயத்தில் ஈடுபடுதல்.

**V. சமயமும் ஒழுகலாறும் தொடர்பான தேர்ச்சிகள்**

அன்றாட வாழ்க்கையில் மிகப் பொருத்தமானவற்றைத் தெரிவு செய்யவும், நாளாந்த வாழ்க்கையில் ஒழுக்கநெறி, அறநெறி, சமயநெறி தொடர்பான நடத்தைகளைப் பொருத்தமுற மேற்கொள்ளவும் விழுமியங்களைத் தன்மயமாக்கிக் கொள்ளலும் உள்வாங்கலும்.

**VI. ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தல், விளையாட்டு பற்றிய தேர்ச்சிகள்**

அழகியற் கலைகள், இலக்கியம், விளையாட்டு, மெய்வல்லுநர் போட்டிகள், ஓய்வு நேரப் பொழுதுபோக்குகள் மற்றும் வாழ்வின் ஆக்கபூர்வச் செயற்பாடுகள் மூலம் வெளிப்படுத்தப்படும் இன்ப நுகர்ச்சி, மகிழ்ச்சி, மனவெழுச்சிகள் இவை போன்ற மனித அனுபவங்கள்.

**VII. "கற்றலுக்குக் கற்றல்" தொடர்பான தேர்ச்சிகள்**

விரைவாக மாறுகின்ற, சிக்கலான, ஒருவரில் ஒருவர் தங்கி நிற்கின்ற உலகொன்றில் ஒருவர் சுயாதீனமாகக் கற்பதற்கான வலிமையளித்தலும் மாற்றியமைக்கும் செயன்முறை ஊடாக மாற்றத்திற்கேற்ப இயங்கவும் அதனை முகாமை செய்யவும் வேண்டிய உணர்வையும் வெற்றியையும் பெறச் செய்தல்.

**(தேசிய கல்வி ஆணைக்குழு அறிக்கை, 2003)**

# பாடக் குறிக்கோள்கள்

- அரங்கக் கலைஞராக மிளிர்வதற்கான ஆளுமைப் பண்புகளை வளர்த்துக் கொள்ளுதல்.
- படைப்பாக்கத் திறனைப் பெறுதல்.
- அழகியல் நயப்புடையவராதல்.
- கலைஞர்களை மதிக்கும் உளப்பாங்கைக் கொண்டிருத்தல்.
- பண்பாட்டின் பாற் பற்றுறுதியையும் மரபைக் கையேற்கும் மனப்பாங்கையும் உடையவராதல்.
- தன்னாற்றலை இனங்கண்டு, செயல்முனைப்புடன் செயலாற்றுதல்.
- சமநிலை ஆளுமையை விருத்தி செய்து கொள்ளுதல்.
- தலைமைத்துவப் பண்பை உடையவராதல்.
- தன்னைச் சூழவுள்ள உலகைப் புரிந்துகொண்டு, சமூகமயமாகும் பண்பைக் கொண்டிருத்தல்.
- முரண்பாடுகளை முகாமை செய்தல்.
- மனித சுபாவங்களைப் புரிந்துகொள்வதன் மூலம் மானிடப் பண்புகளைப் பெறுதல்.
- தாம் எதிர்கொள்ளும் சவால்களுக்கு வெற்றிகரமாக முகம் கொடுக்கும் திறன் பெறுதல்.
- நேர்மனப்பாங்கினை விருத்தி செய்தல்.
- சிறந்த தொடர்பாடற் திறனைக் கொண்டவராதல்.
- தாமாக முன்வந்து செயலாற்றும் திறன் பெறுதல்.
- இயற்கையோடு இசைந்து வாழப் பழகுதல்.
- வளர்ந்துவரும் விஞ்ஞான தொழினுட்ப சாதனங்களை அரங்கிற் கையாளும் ஆற்றலைப் பெறுதல்.
- வாழ்தொழிலுக்கான அடிப்படைப் பயிற்சிகளைப் பெற்றுக்கொள்ளல்.
- உள ஆற்றுப்படுத்தலுக்கான அணுகுமுறையாக அமைதல்.
- ஏனைய பாடங்களை இலகுவாகக் கற்பதற்கான முறைமையாக அமைதல்.
- நுட்பங்களைக் கையாண்டு கைவினைக் கலைகளை ஆக்குதல்.
- பன்மைக் கலாசார சமூகத்துடன் சிறந்த ஆளிடைத் தொடர்பைப் பேணுதல்.

# நாடகமும் அரங்கியலும்
## விரிவான பாடத்திட்டம்
## தரம் 11

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|
| 1.0 நாடகமும் அரங்கக் கலைகளும் தொடர்பான கொள்நெறிகளை விளக்குவார். | 1.1 ஆற்றுகைக் கலைகள் என்பதனை அறிந்தவராவார் | • ஆற்றுகைக் கலைகளின் அடிப்படையான இயல்புகளை இனங்காணல்.<br>• ஆற்றுகைக் கலைகளுள் நாடகக் கலையின் சிறப்பு. | • ஆற்றுகைக் கலைகளை இனங்கண்டு அவற்றுள் நாடகக் கலையின் சிறப்பியல்புகளை முன்வைப்பார். | 01 |
| | 1.2 நெறியாள்கை பற்றி அறிந்தவராவார். | • நெறியாள்கை எனும் எண்ணக்கரு பற்றிய வரைவிலக்கணத்தை விளங்கிக் கொள்ளல்.<br>• நெறியாளர்.<br>• நெறியாளரின் கடமைகளும் பொறுப்புக்களும். | • நெறியாள்கையின் பண்புகளை விளங்கி நெறியாள்கை செய்வதில் ஆர்வம் காட்டுவார். | 01 |
| | 1.3 நாடகத் தயாரிப்புப் பற்றி அறிந்தவராவார். | • நாடகத் தயாரிப்பு பற்றி விளங்கிக்கொள்ளல்.<br>• நாடகத் தயாரிப்பாளர்.<br>• தயாரிப்புப் படிமுறைகள்.<br>• நாடகத் தயாரிப்பாளரின் கடமைகளும் பொறுப்புக் களும். | • நாடகத் தயாரிப்புப் படிமுறைகளை முன்வைப்பார். | 01 |
| | 1.4 அரங்கிற்கான காட்சி விதானிப்பு பற்றிய விளக்கத்தைப் பெற்றவராவார். | • காட்சி விதானிப்பு - அறிமுகம்.<br>• காட்சி விதானிப்பின் போது கவனிக்க வேண்டிய விடயங்கள். | • நாடகத்தில் காட்சி விதானிப்பின் வகிபாகம் பற்றிக் கருத்துரைப்பார். | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|
| | | • நாடகத்தில் காட்சி விதானிப்பின் பங்களிப்பு | | |
| | 1.5 அரங்கிற்கான இசை விதானிப்பு மற்றும் ஒலி விளைவுகள் பற்றி அறிந்தவராவார். | • இசை விதானிப்பு.<br>• ஒலி விளைவுகள்.<br>• நாடகத்தில் இசையின் முக்கியத்துவம்.<br>• ஒலி விளைவுகளின் முக்கியத்துவம். | • நாடகத்தில் இசை, ஒளி, ஒலி விளைவுகள், என்பவற்றின் பயன்பாட்டினை அறிந்து பிரயோகிப்பார். | 01 |
| | 1.6 அரங்கிற்கான அசை வியக்கங்களை வடிவாக்கம் செய்வது பற்றிப் பயின்றவராவார். | • அரங்க அசைவியக்க வடிவாக்கம்.<br>• அசைவியக்க வடிவாக்கத்தின் பயன்கள். | • அரங்கில் அசைவியக்கங்களை வடிவாக்கம் செய்வதன் அவசியத்தை அறிந்து பிரயோகிப்பார். | 02 |
| | 1.7 வேடஉடை விதானிப்பு என்பதை நுணுகி ஆராய்ந்தறிந்தவர் ஆவார். | • வேடஉடை விதானிப்பு - அறிமுகம்.<br>• வேடஉடையை வடிவமைக்கும் போது கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள்.<br>• நாடகத்தில் வேடஉடையின் பயன்பாடுகள்.<br>• நாடக மோடிகளுக்கேற்ப வேறுபடும் வேடஉடை விதானிப்புக்கள். | • நாடகத்திற்கான வேட உடைகளை வடிவமைப்பதில் விருப்புடன் ஈடுபடுவார். | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|
| | 1.8 நாடக ஒப்பனை பற்றிப் பயின்றவர் ஆவார். | • ஒப்பனைப் பொருள்களும் அவற்றின் பயன்பாடுகளும்.<br>• ஒப்பனையின் வகைகள்.<br>• ஒப்பனையின் அடிப்படை நுட்பமுறைகள்.<br>• நாடகத்தில் ஒப்பனையின் பயன்கள். | • நாடகத்திற்கான ஒப்பனை தொடர்பிலான அடிப்படையான நுட்பமுறைகளைப் பிரயோகிப்பார். | 02 |
| | 1.9 ஒளி விதானிப்பு என்பதை நுணுகி நோக்குவார். | • நாடகத்தில் ஒளி விதானிப்பின் பயன்கள்.<br>• ஒளியூட்டலின் வகைகளும் அவற்றின் இயல்புகளும்.<br>• ஒளி விதானிப்பிற்காகப் பயன்படுத்தப்பெறும் சாதனங்கள். | • நாடக ஒளியூட்டலின் வகைகளுக்கும் அவற்றின் இயல்புகளுக்கும் ஏற்ப ஒளி விதானிப்புக் கருவிகளைத் தெரிந்தெடுப்பார். | 02 |
| | 1.10 நாடகத்தில் பார்ப் போரின் முக்கியத்து வத்தை விளங்கிக் கொள்வார். | • நாடகத்திற் பார்ப்போர் - அறிமுகம்.<br>• ஆற்றுகை - ஆற்றுவோர் - பார்ப்போர் தொடர்பு. | • நாடகக் கலையை வலுப்படுத்துவதிற் பார்ப்போரின் முக்கியத்துவத்தை ஏற்றுக் கொள்வார். | 01 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|
| 2.0 கற்பனையை நெறிப்படுத்தி, சுற்றாடல் சார்ந்த அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு ஆக்கம் புரிவார். | 2.1 ஊமச் சித்திரிப்பில் ஈடுபடக் கூடியவராவார். | • ஊமம் பற்றிய விளக்கம்.<br>• ஊமம் மூலம் அனுபவங் களைச் சித்திரித்தல்.<br>• ஊமம் வழிப் பாத்திரச் சித்திரிப்பு. | • ஊமச் சித்திரிப்பினூடாகப் பாத்திரம் மற்றும் அனுபவங்களை வெளிப்படுத்துவார். | 02 |
| | 2.2 பாத்திரச் சித்திரிப்பில் ஈடுபடுபவர் ஆவார். | • நாடகத்தில் பாத்திரச் சித்திரிப்பு.<br>• பாத்திரச் சித்திரிப்பின்போது முக்கியம் பெறும் விடயங்கள்.<br>- போலச் செய்தல்.<br>- நால்வகைச் சித்திரிப்பு.<br>• பாத்திரச் சித்திரிப்பு<br>- மனிதன்.<br>- பிராணிகள்.<br>- பொருள்கள்.<br>- கற்பனைப் பாத்திரங்கள். | • பல்வேறு பாத்திரங்களையும், பொருள் களையும் சித்திரிக்கக் கூடியவராக இருப்பார். | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|
| | 2.3 நாடகத்திற்குப் பொருத்தமான சூழமைவுகளைப் படைப்பாக்கம் செய்யக்கூடியவர் ஆவார். | • சூழமைவுகள்.<br>• நாடகச் சூழமைவுகள்.<br>• சூழமைவுகளின் ஆக்கபூர்வமான முன்வைப்பு. | • பொருத்தமான சூழமைவுகளைத் தெரிவு செய்து புதிய அர்த்தப்பாடுகளுடன் நாட எழுத்துரு எழுதுவார். | 02 |
| | 2.4 நாடக எழுத்துருவை ஆக்கக் கூடியவர் ஆவார் | • நாடக எழுத்துரு நுட்பங்கள்<br>- கருப்பொருள்.<br>- பாத்திரம்.<br>- விடயப்பொருள்.<br>- மோதுகை.<br>- கதைப்பின்னல்.<br>- கட்டமைப்பு.<br>- சொல்லாடல்.<br>- மோடி.<br>- மேடைக்குறிப்பு.<br>- கட்புலனாகும் அம்சங்கள்.<br>• புதிய பொருள் விளக்கத்துடன் நாடக எழுத்துரு எழுதுதல் (வெவ்வேறு விடயப் பொருள்கள்). | • நாடக எழுத்துருவிற்கான நுட்பங்களுடன் புதிய பொருள் வெளிப்படும் வகையிலான எழுத்துருவை ஆக்குவார். | 03 |
| | 2.5 நெறியாள்கையின் செய்முறைகளை விளங்கிச் செயற்படக் கூடியவர் ஆவார். | • நெறியாள்கையைத் திட்டமிடுதல். | • எழுத்துருவை நாடகமாக்குவதற்காகத் திட்டமிடுவார். | 01 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|
| | 2.6 நடிகர் தெரிவை மேற்கொள்ளக் கூடியவர் ஆவார். | • நடிகர் தெரிவும் நடிபாக மளித்தலும். | • நடிகர்களைத் தெரிந்தெடுத்துப் பொருத்தமான பாத்திரங்களை வழங்குவார். | 02 |
| | 2.7 நாடகத்திற்கேற்பக் காட்சி விதானிப்பை மேற்கொள்ளக் கூடியவர் ஆவார். | • காட்சி விதானிப்புச் செய்தல். | • எழுத்துருவிற்கு அமைவாகக் காட்சி விதானிப்பைச் செய்வார். | 02 |
| | 2.8 மேடைப் பொருள் களைத் தயாரிக்கக் கூடியவர் ஆவார். | • மேடைப்பொருள்கள் தயாரித்தல். | • எழுத்துருவிற்கு ஏற்ப மேடைப் பொருள்களைத் திட்டமிட்டு உருவாக்குவார். | 02 |
| | 2.9 நாடகத்திற்கான இசை விதானிப்பை மேற்கொள்ளக் கூடியவர் ஆவார். | • இசை விதானிப்பைத் திட்டமிடுதல் (ஒலி விளைவுகள் உட்பட). | • எழுத்துருவின் மையப் பொருளை உணர்ந்து அதற்கான இசையை வடிவமைப்பார். | 01 |
| | 2.10 நாடகத்திற்கான அசைவியக்கங்களை வடிவாக்கம் செய்யக் கூடியவர் ஆவார். | • அசைவியக்கங்களை வடிவாக்கம் செய்தல். | • நாடக அசைவியக்கத்தின் முக்கியத்துவத்தை நிலை நிறுத்துவார். | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|
| | 2.11 நாடகத்திற்குப் பொருத்தமான வேட உடைகளின் மாதிரி உருக்களை வடிவமைக்கக் கூடியவர் ஆவார். | • வேடஉடைகளின் மாதிரி களைத் தயாரித்தல் | • வேட உடைகளின் வடிவத்தை மனங்கொண்டு பொருத்தமான வேட உடை மாதிரியை உருவாக்குவார். | 02 |
| | 2.12 நாடகத்திற்குப் பொருத் தமான ஒப்பனையை மேற்கொள்ளக்கூடிய வர் ஆவார். | • ஒப்பனையைத் திட்டமிடுதல் | • பாத்திரங்களுக்கு அமைக்க வேண்டிய ஒப்பனைத் திட்டத்தைத் தயாரிப்பார். | 02 |
| | 2.13 நாடகத்திற்குப் பொருத்தமானவாறு ஒளி விதானிப்பை மேற்கொள்ளக் கூடியவர் ஆவார். | • ஒளி விதானிப்பைத் திட்டமிடுதல் | • கிடைக்கக்கூடிய வளங்களைப் பயன்படுத்தி ஒளி விதானிப்புச் செய்வதற்கான திட்டத்தை முன்வைப்பார். | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|
| 3.0 நாடகமும் அரங்கக் கலைகளும் தொடர்பான கொள்நெறிகளை அனுசரித்துச் செய்முறைகளில் ஈடுபடுவார். | 3.1 நடிப்பிற்கான அரங்கப் பயிற்சிகளைப் பெற்றவர் ஆவார். | • அரங்கப் பயிற்சிகளின் முக்கியத்துவம்.<br>• நடிப்பிற்கான உடல் உளப் பயிற்சிகள்.<br>• நடிப்பு நுட்பங்கள்<br>- மெய் நிலைகள்.<br>- உணர்ச்சி பாவங்கள்.<br>- சமநிலை.<br>- மட்டங்கள்.<br>- பரப்புக்கள்.<br>- திசைகள். | • அரங்கப் பயிற்சிகளின் மூலம் சிறந்த நடிப் பாற்றலை வெளிப்படுத்துவார். | 07 |
| | 3.2 நாடக எழுத்துருவை நாடகப் பாங்குடன் வாசிக்கக் கூடியவர் ஆவார். | • வாசிப்பு அரங்கு (Readers Theatre) (புதியதொரு வீடு நாடக எழுத்துரு). | • எழுத்துருவை அர்த்தப்பாங்குடன் வாசித்து, அதிலுள்ள நாடகவியல் அம்சங்களைக் கூறுவார். | 05 |
| | 3.3 நாடக மோடிகளுக் கேற்பச் சொல்லாடல் களைப் பிரயோகிப்பார். | • நாடக மோடிக்கேற்பச் சொல்லாடுதல். | • மோடிகளுக்கேற்பச் சொல்லாடல், மொழிக் கையாளுகைகளைக் கடைப்பிடிப்பார். | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|
| | 3.4 பாத்திரங்களைப் படைப்பாக்கம் செய்யக்கூடியவர் ஆவார். | • பாத்திரப் படைப்பு (விதந்துரைக்கப் பெற்ற/ பிற நாடக எழுத்துருக் களைப் பயன்படுத்தி).<br>• மோடிகளுக்கமைவான பாத்திரப் படைப்பு. | • பாத்திரப் பண்புருவாக்கத்தில் சமூக, பண்பாட்டு, சூழற் காரணிகளின் செல்வாக்கை உணர்ந்திருப்பார். | 04 |
| | 3.5 பாத்திரப் பண்பு வெளிப் படுமாறு நாடகப் பாடல் களைப் பாடுவார். | • பாத்திரப் பண்பு வெளிப்படப் பாடுதல்<br>- மரபுவழி.<br>- நவீனம். | • மரபுவழி, நவீன நாடகப் பாடலுக்கூடாகப் பாத்திரப்பண்பை உணர்வுபூர்வமாக வெளிக் கொணர்வார். | 02 |
| 4.0 இலங்கையில் நாடக அரங்கக் கலைகளின் சமூக, பண்பாட்டு, வரலாற்றுப் பின்னணியை விளக்குவார். | 4.1 சுதேச நாடகக் கலை வரலாற்றுடன் தொடர் புடைய அரும்பு நிலைகளைப் பயின்று அவற்றின் அரங்காற்று கைப் பண்புகளை இனங்காணக்கூடியவர் ஆவார். | • சுதேச சடங்குப் பண்புடைய நாடகங்களின் அரங்காற்று கைப் பண்புகள்<br>- சூரன்போர்.<br>- பாஸ்கா.<br>- பாண்டவர் வனவாசம். | • சுதேச நாடகப் பண்புடைய சமயச் சடங்குகளை அறிந்து, அவற்றின் அரங்காற்றுகைப் பண்புகளை இனங்காணுவார். | 04 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|
| | 4.2 கூத்தின் மரபுவழித் தன்மையில் ஏற்பட்ட மாற்றங்களைக் கற்றவராவார். | • கூத்தின் மரபுவழித் தன்மைகள்.<br>• கூத்தின் மரபுவழித் தன்மையில் ஏற்பட்ட மாற்றங்கள்.<br>• கூத்துருவ நாடகங்களுடன் தொடர்புடைய ஆளுமையினர். | • கூத்தின் தனித்துவமான பண்புகளைக் கூறுவார்.<br>• கூத்தின் மரபுவழித் தன்மையில் ஏற்பட்ட மாற்றங்களையும் நவீன நாடக மரபின் பிரதான செல்நெறிகளையும் முன்வைப்பார்.<br>• கூத்தினை, எதிர்காலச் சந்ததியினருக்காகப் பேணிப் பாதுகாக்கும் மனப்பக்குவத்தைக் கொண்டிருப்பார்.<br>• கூத்தின் அம்சங்களை நவீன நாடக மரபினுள் உள்வாங்குவதில் ஆர்வம் காட்டுவார். | 05 |
| | 4.3 நவீன தமிழ் நாடக மரபின் பிரதான செல்நெறிகளைப் பயின்றவராவார். | • நவீன தமிழ் நாடக மரபின் பிரதான செல்நெறிகள்.<br>• செல்நெறிகளுடன் தொடர்புடைய நாடக ஆளுமையினர். | • நவீன தமிழ் நாடக மரபின் திசைவழியையும் அதனுடன் தொடர்புடைய ஆளுமையினரையும் எடுத்துரைப்பார். | 06 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளைகள் |
| --- | --- | --- | --- | --- |
| 5.0 நாடகத் தோற்றப் பாடுகளை அழகியல், ரீதியில் நயக்கும் மானுட நேய ராகச் சமூக மய மாகும் திறனை வெளிக்காட்டுவார். | 5.1 விதந்துரைக்கப் பெற்ற நாடக எழுத்துருவைக் கூட்டாக நயந்து கருத்துரைப்பார். | • மஹாகவி உருத்திர மூர்த்தியின் 'புதியதொருவீடு' நாடக எழுத்துரு பற்றிய கருத்துரைப்பு.<br>- கரு.<br>- கதை.<br>- கதைப்பின்னல்.<br>-உட்பொதிந்துள்ள அர்த்தம்.<br>• 'புதியதொரு வீடு' நாடக எழுத்துருவின் பின்வரும் அம்சங்களின்பாற் கவனஞ் செலுத்தி நயத்தல்.<br>• சொல்லாடல்கள்.<br>• மோடி.<br>• பாத்திரங்கள்.<br>• மோதுகைகள்.<br>• கரு.<br>• மேடைக் குறிப்புக்கள்.<br>• வியத்தகு தன்மை.<br>• கட்புலனாகும் அம்சங்கள்.<br>• குறிப்பால் உணர்த்தும் அம்சங்கள். | • பல்வேறு எழுத்துருக்களைத் தேடியறிந்து வாசித்து, எழுத்துருவின் அம்சங்களை முன் வைப்பார்.<br>• நாடகச் சம்பவங்கள், சூழமைவுகளைப் பகுத்தாராய்ந்து எழுத்துருவினூடு சமூகத்தை நோக்கும் மனப்பாங்கைப் பெற்றிருப்பார்.<br>• எழுத்துருப் பகுப்பாய்வு நுட்பங்களைத் தெரிந்து, எழுத்துரு எழுதுவதற்கான தூண்டலைப் பெற்றிருப்பார். | 08 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|
| | 5.2 விதந்துரைக்கப்பெற்ற அன்றேல் பிறிதொரு நாடகத்தை ஆற்றுகை நிலையில் நயப்பார். | • ஆற்றுகை நிலை நயப்பின் போதான கவனக்குவிப்புக்கள்<br>- நாடகமோடி.<br>- பாத்திரச் சித்திரிப்பு.<br>- நால்வகைச் சித்திரிப்புக் களின் பயன்பாடு. | • ஆற்றுகைகளைப் பார்க்கும் ஆர்வத்தைக் காட்டுவார். | 05 |
| | 5.3 படைப்பை முழுமை யாக நயத்தல் நிலையில் நின்று விமர்சிப்பார். | • நயத்தலும் விமர்சித்தலும். | • ஆற்றுகையின் வலிவு நலிவுகளுக்கான அரங்கக் கூறுகளின் பங்களிப்புப் பற்றி விமர்சன நோக்கில் அணுகுவார். | 02 |

# தவணை நிலைப்பட்ட பாடவிரிப்பு - தரம் 11

| தவணை 1 | | தவணை 2 | | தவணை 3 | | மொத்தப் பாடவேளைகள் |
|---|---|---|---|---|---|---|
| தேர்ச்சி மட்டங்கள் | பாட வேளைகள் | தேர்ச்சி மட்டங்கள் | பாட வேளைகள் | தேர்ச்சி மட்டங்கள் | பாட வேளைகள் | |
| 1.1<br>1.2<br>1.3 | 01<br>01<br>01 | 1.4<br>1.5<br>1.6 | 02<br>01<br>02 | 1.7<br>1.8<br>1.9<br>1.10 | 02<br>02<br>02<br>01 | 15 |
| 2.1<br>2.2<br>2.3<br>2.5<br>2.6 | 02<br>02<br>02<br>01<br>02 | 2.4<br>2.7<br>2.8<br>2.9 | 03<br>02<br>02<br>01 | 2.10<br>2.11<br>2.12<br>2.13 | 02<br>02<br>02<br>02 | 25 |
| 3.1<br>3.2 | 07<br>05 | 3.3<br>3.4 | 02<br>04 | 3.5 | 02 | 20 |
| 4.1 | 04 | 4.2 | 05 | 4.3 | 06 | 15 |
| - | - | 5.1 | 08 | 5.2<br>5.3 | 05<br>02 | 15 |
| | **28** | | **32** | | **30** | **90** |



xxvi

# கற்றல் - கற்பித்தற் செயலொழுங்கிற்கான ஆலோசனைகள்

| | | |
|---|---|---|
| தேர்ச்சி 1.0 | : | நாடகமும் அரங்கக் கலைகளும் தொடர்பான கொள்நெறிகளை விளக்குவார். |
| தேர்ச்சி மட்டம் 1.1 | : | ஆற்றுகைக் கலைகள் என்பதனை ஆராய்ந்தறிவார். |
| செயற்பாடு 1.1 | : | `ஆற்றுகைக் கலைகள் பற்றி அறிந்து கூறுவோம்'. |

**பாடவேளைகள்** : 01

**கற்றற் பேறுகள்** :

- ஆற்றுகைக் கலைகள் பற்றி அறிந்திருப்பார்.
- ஆற்றுகைக் கலைகளை இனங்காண்பார்.
- ஆற்றுகைக் கலைகளை நயப்பார்.
- ஆற்றுகைக் கலைகளில் ஒன்றான நாடகக் கலையின் சிறப்பியல்புகளைக் கூறுவார்.

**பாடத்திட்டமிடல் தொடர்பான அறிவுறுத்தல்கள் :**

கீழ்க்காணும் சிறப்பியல்புகளை அழுத்தும் வகையிற் கற்றல் - கற்பித்தற் செயற்பாட்டைத் திட்டமிடுங்கள். ஆற்றுகைக் கலையானது:-

- ஆற்றுவோர் - பார்ப்போர் நேரடித் தொடர்பைக் கொண்டிருக்கும்.
- இசை, நடனம், நாடகம் மட்டுமன்றி வில்லுப்பாட்டு, கதாப்பிரசங்கம் போன்ற கலைகளும் அவற்றுள் அடங்கும்.
- ஆற்றுகை வெளியானது ஆற்றுகையில் செல்வாக்குச் செலுத்தும்.
  - இசை என்னும் போது பாடல் வழி வருவதும் இசை வாத்தியங்களினடியாக வருவதும் ஆகும். நடனம் என்பது இசையை இசைக்கும் போது (வாத்தியம்/ மிடறு) அதற்கேற்ப உடலசைவுகளைக் கொண்டு வெளிப்படுத்தப்பெறுவது.
  - நுண்கலைகளுக்குட் சொல்லப்பெறாத வில்லுப்பாட்டு, கதாப்பிரசங்கம், சிலம்பம் போன்றனவும் ஆற்றுகைக் கலைகளே. இவை யாவும் கணப்பொழுதில் (கணப்பிரசன்ன நிலை) நடந்து முடிவன.
  - நாடகமென்பது கதை தழுவி வருவதாகும். நாடகாசிரியர் தொடக்கம் நெறியாளர் வரை ஒன்றிணைந்து செய்யப்பெறும் ஒரு செயற்பாடாகும்.
  - நடிகன் தனது உடலையும் குரலையும் பிரதான மூலகமாகக் கொண்டு உணர்வு வழியாகச் சித்திரிக்கும் கலையாகும்.
  - நாடகக் கதையைப் பொறுத்தவரை அக் கதையில் ஒரு கட்டமைப்புக் காணப்படும். அது பாத்திரங்களின் சம்பவங்கள் சூழமைவுகளால் கட்டப்பட்டிருக்கும்.
  - நாடகத்தின் பிரதான அம்சம் மோதுகையாகும்.
  - நாடக மோதுகை அவலமாக முடிவடையின் அது அவல நாடகமாகவும் மகிழ்வாக முடிவடையின் மகிழ்நெறி நாடகமாகவும் அமையும்.
  - நாடகம் என்பது கட்புல, செவிப்புலக் கலையாக அமையும்.
  - வாழும் கலை, உயிரோட்டமான கலை, இயங்கு கலை, கணப்பிரசன்னமான கலை, மீள உருவாக்க முடியாத கலை எனப் பலவாறு அது அழைக்கப்படுகிறது.
  - நாடகமல்லாத ஏனைய ஆற்றுகைக் கலைகளின் பகுதி ஒன்றை ஒளிநாடா வழியாகக் காட்டி, அது பற்றிக் கலந்துரையாடுங்கள்.
  - நாடகம் ஒன்றின் பகுதியையும் ஒளிநாடாவில் காண்பியுங்கள்.
  - இரண்டுக்கும் இடையிலான வேறுபாடுகளைக் கலந்துரையாடுங்கள்.
  - ஆற்றுகைக் கலைகளின் தன்மை, வேறுபாடுகள் பற்றிக் கலந்துரையாடுங்கள்.
  - நாடகத்தின் சிறப்புத்தன்மை பற்றிக் கலந்துரையாடுங்கள்.

- கலந்துரையாடலை அடிப்படையாகக் கொண்டு நாடகக் கலையின் சிறப்பியல்புகளைப் பட்டியற்படுத்த வழிப்படுத்துங்கள்.

## முதன்மைப் பதங்கள்

- ஆற்றுகைக் கலைகள்
- கட்புலக் கலைகள்
- இயங்கு கலைகள்.

## தரவிருத்தி உள்ளீடுகள்

- நாடகம் மற்றும் ஏனைய ஆற்றுகைக் கலைகளின் ஒளிப்படங்கள்.
- இறுவட்டுக்கள்.

## கணிப்பீடும் மதிப்பீடும் :

- ஆற்றுகைக் கலைகள் பற்றி அறிந்து கூறுவார்.
- ஆற்றுகைக் கலைகளை இனங்காண்பார்.
- ஆற்றுகைக் கலைகளை நயப்பார்.
- நாடகக் கலையின் சிறப்புப் பண்புகளை எடுத்துரைப்பார்.
- நாடகங்களை நயப்பார்.

## உசாத்துணைகள் :

- அரங்கு ஓர் அறிமுகம் பதிப்பு, 2014 - பேராசிரியர் கா. சிவத்தம்பி.<br>பேராசிரியர் சி. மௌனகுரு.<br>திரு. க. திலகநாதன்.
- அரங்கவியல் - முனைவர் சக்திப் பெருமாள்<br>முனைவர் வே. சரோஜா.
- நாடக வழக்கு - (தொகுப்பு) கந்தையா ஸ்ரீகணேசன்.
- அரங்கியல் - பேராசிரியர் சி. மௌனகுரு.
- அரங்க ஆட்டம் - அஷ்வகோஷ்.
- கற்கை நெறியாக அரங்கு - பேராசிரியர் கா. சிவத்தம்பி.



| | | | |
|---|---|---|---|
| தேர்ச்சி | 1.0 | : | நாடகமும் அரங்கக் கலைகளும் தொடர்பான கொள்நெறிகளை விளக்குவார். |
| தேர்ச்சி மட்டம் | 1.2 | : | நாடக நெறியாள்கை பற்றி அறிந்தவராவார். |
| செயற்பாடு | 1.2 | : | 'நெறியாள்கை பற்றி அறிந்து கூறுவோம்'. |

**பாடவேளைகள்** : 01

**கற்றற் பேறுகள்** :

- நாடக நெறியாள்கை என்னும் எண்ணக்கரு பற்றிய வரைவிலக்கணத்தைக் கூறுவார்.
- நெறியாள்கையின் பண்புகளை எடுத்துரைப்பார்.
- நெறியாளரை இனங்கண்டு கொள்வார்.
- நெறியாளரது பொறுப்புக்கள் கடமைகளை வேறுபிரித்தறிவார்.
- நெறியாள்கை செய்வதில் ஆர்வம் காட்டுவார்.
- நாடகத்தில் நெறியாள்கையின் முக்கியத்துவத்தை விளங்கிக் கொள்வார்.

**பாடத்திட்டமிடல் தொடர்பான அறிவுறுத்தல்கள் :**

- நெறியாள்கை தொடர்பான வரைவிலக்கணத்தை விளங்கிக் கொண்டு, நெறியாளரது கடமைகள், பொறுப்புக்களையும் நெறியாள்கையின் முக்கியத்துவத்தையும் அறிந்து கொள்வதே இங்கு வலியுறுத்தப் பெறுவதாகும்.
- மாணவரைத் திறந்தவெளியான இடத்திற்கு அழைத்துச் செல்லுங்கள்.
- இருவர் இருவராக இணைந்து நிற்குமாறு அறிவுறுத்துங்கள்.
- இருவரில் ஒருவரை Iron (இரும்பு) ஆகவும் மற்றவரை Magnet (காந்தம்) ஆகவும் கருதிக் கொள்ளுமாறு அறிவுறுத்துங்கள்.
- Iron ஆக இருப்பவரின் வழிப்படுத்தலுக்கேற்ப Magnet ஆக இருப்போர் இயங்க வேண்டும் என்பதைத் தெளிவுபடுத்துங்கள்.
- Iron ஆக இருப்பவரின் கைவிரலை Magnet பார்க்க வேண்டும். கை நகரும் திசையில் Magnetஉம் நகர வேண்டும்.
- இவ்வாறு Iron & Magnet விளையாட்டைச் சிறிது நேரம் விளையாட வழிப்படுத்துங்கள்.
- விரும்பின் ஒருவர் Iron ஆகவும் ஒரு குழு Magnet ஆகவும் தொழிற்பட முடியும்.
- விளையாட்டின் நிறைவில் அவர்கள் பெற்ற அனுபவம் தொடர்பாகக் கலந்துரையாடுங்கள்.
- அது போலவே நாடகம் ஒன்றை மேடையேற்றுவதற்கும் சில ஒழுங்குபடுத்தல்கள், வழிப்படுத்தல்கள் அவசியம் என்பதை வலியுறுத்துங்கள்.

பின்வரும் விடயங்களை வலியுறுத்திக் கலந்துரையாடலைக் கட்டியெழுப்புங்கள்.

- எந்த ஒரு செயற்பாட்டுக்கும் திட்டமிடல் அவசியம்
- நாடகம் ஒரு கூட்டுக்கலையாகையால் அதனை இணைப்பாக்கம் செய்து ஒழுங்குபடுத்துவதற்கு ஒருவர் அவசியம். அவரே நெறியாளராவார்.
- நெறியாளரால் மேற்கொள்ளப்பெறும் ஒழுங்குபடுத்தல்கள் நெறியாள்கை எனப்படும்.
- அதாவது, கருத்து நிலையிலுள்ள நாடகாசிரியரது சிந்தனைகளுக்கு நடிகனை ஊடகமாகக் கொண்டு, பார்வையாளர் முன்னிலையில் காட்சி வடிவம் கொடுக்கும் செயன்முறையே நெறியாள்கை எனலாம்.
- அருவ நிலையிலுள்ள எழுத்துருவிற்கு உயிர் கொடுத்து அரங்கில் உலவ விடுபவர் நெறியாளர் ஆவார்.

- நெறியாளரது பணிகளைப் பின்வரும் பிரதான தலைப்புக்களில் பகுத்து நோக்கலாம்.
  - * எழுத்துருப் பகுப்பாய்வும் திட்டமிடலும்.
  - * நடிகர் தெரிவும், நடிபாகமளித்தலும்.
  - * ஏனைய அரங்க மூலகங்களின் இணைப்பாக்கம்.

  இவற்றை ஓரளவிற்கு விரிவுபடுத்திக் கற்க வழி செய்யுங்கள்.
- நெறியாளர் தனது பணியைத் திறம்பட மேற்கொள்வதற்கு அவருக்குச் சில தகுதிகள், தகைமைகள் அவசியமாகும். அவையாவன:-
  - * விமர்சன நோக்கு.
  - * அழகியலுணர்வு.
  - * தலைமைத்துவப் பண்பு.
  - * முகாமைத்துவ அறிவு.
  - * கூட்டாக இயங்கும் பண்பு.
  - * படைப்பாக்கச் சிந்தனை.
  - * சமநிலை ஆளுமை.
  - * இலக்கிய அறிவு.
  - * நெகிழ்ச்சித் தன்மை.
- இது தொடர்பான மேலதிக விடயங்களைக் கலந்துரையாடி மேற்படி பட்டியலுடன் இணையுங்கள்.
- தேவையான இடத்துக் குறிப்பெடுத்துக் கொள்ள மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

## முதன்மைப் பதங்கள்

- நெறியாள்கை.
- நெறியாளர்.
- நெறியாளரின் கடமைகள்.
- நடிபாகமளித்தல்.
- இணைப்பாக்கம்.



## தரவிருத்தி உள்ளீடுகள்

- எழுதுதாள்.
- எழுதுகருவி.
- பொருத்தமான இசைக்கருவிகள்.

## கணிப்பீடும் மதிப்பீடும் :

- நெறியாள்கை என்பதன் வரைவிலக்கணத்தைக் கூறுவார்.
- நெறியாள்கையின் பண்புகளை விளக்குவார்.
- நெறியாளரது கடமைகளைப் பட்டியற்படுத்துவார்.
- நெறியாளருக்கு இருக்க வேண்டிய தகைமைகளை முன்வைப்பார்.
- நெறியாள்கை செய்வதில் ஆர்வம் கொள்வார்.

## உசாத்துணைகள் :

- ஸ்ரனிஸ்லவெஸ்கியின் பார்வையில் ஓர் நடிகனின் உருவாக்கம் - கணேசன் மேகநாதன்.
- தமிழ் அரங்கியல் மரபும் மாற்றங்களும் (தமிழ் அரங்கியற் கட்டுரைகளின் தொகுப்பு) - ப்ரசன்னா இராமசாமி.

### பின்தொடர் பயிற்சி:

நெறியாளரது கடமைகள், அவரது தகுதிகள் என்பவற்றை அட்டவணைப்படுத்தி, வகுப்பறையில் காட்சிப்படுத்துவதற்கு வழிப்படுத்துங்கள். ‘நெறியாள்கை’ என்னும் தலைப்பில் சஞ்சிகை ஒன்றை ஆக்குவதற்கு வழிப்படுத்துங்கள்.

| | | | |
|---|---|---|---|
| தேர்ச்சி | 1.0 | : | நாடகமும் அரங்கக் கலைகளும் தொடர்பான கொள்நெறிகளை விளக்குவார். |
| தேர்ச்சி மட்டம் | 1.3 | : | நாடகத் தயாரிப்புப் பற்றி அறிந்தவராவார். |
| செயற்பாடு | 1.3 | : | 'நாடகத் தயாரிப்புப் பற்றி அறிந்து கொள்வோம்'. |

**பாடவேளைகள்** : 01

**கற்றற் பேறுகள்** :

- நாடகத் தயாரிப்பு என்னும் எண்ணக்கருவை விளங்கியிருப்பார்.
- தயாரிப்பாளரின் பொறுப்புக்களை அறிந்திருப்பார்.
- நாடகத் தயாரிப்புப் படிமுறைகளை முன்வைப்பார்.
- நாடகத் தயாரிப்பில் ஈடுபட முன்வருவார்.

## பாடத்திட்டமிடல் தொடர்பான அறிவுறுத்தல்கள் :

- நாடகத் தயாரிப்பு என்பதன் எண்ணக்கருவை விளங்கிக் கொண்டு தயாரிப்பாளரின் பொறுப்புக்கள், தகைமைகளை அறிந்து கொள்வதே இங்கு கவனிக்க வேண்டியவையாகும்.
- நாடகாசிரியரின் பொறுப்புக்கள், நெறியாளரின் பொறுப்புக்கள், தயாரிப்பாளரின் பொறுப்புக்கள் என்பவற்றைத் தனித்தனியே ஒவ்வொரு அட்டையிலும் எழுதி ஒரு பெட்டிக்குள் போடுங்கள்.
- மாணவர்கள் ஒவ்வொருவரும் ஒரு அட்டையினைத் தெரிவு செய்து கொள்ள வழிப்படுத்துங்கள்.
- சொல்லட்டையில் உள்ள விடயம் யாருக்கு உரியது எனத் தெரிந்துகொள்ளச் சந்தர்ப்பம் அளியுங்கள்.
- கரும்பலகையில் காட்சிப்படுத்தப்பட்டிருக்கும் தலைப்பில் (நாடகாசிரியர், நெறியாளர், தயாரிப்பாளர்) தாம் தெரிந்தெடுத்த சொல்லட்டை எத்தலைப்பிற்குப் பொருந்துகிறதோ அவற்றின் கீழ் அதனை ஒட்டுதல் அன்றேல் பொருத்துதல் வேண்டும்.
- மாணவர்கள் அனைவரும் இச் செயற்பாட்டினைச் செய்த பின்னர், அனைவரும் அதனைப் பார்வையிட்டதும் அவை தொடர்பான கலந்துரையாடலை மேற் கொள்ளுங்கள்.
- நாடகத் தயாரிப்பு என்பது நாடகக் கலைப் படைப்பினை மேடையேற்றுவதற்கான அடிப்படைகளைத் தோற்றுவிப்பதுடன் கலைப் பெறுமானங்களுக்கான சூழல்களைத் திட்டமிடுவதுடன் கூடிய முகாமைத்துவச் செயற்பாடு எனலாம்.
- நாடகம் ஒன்றை மேடையேற்றுவதற்கு முன்னர் தயாரிப்பாளர் சில படிமுறைகளைச் செய்ய வேண்டியது அவசியம்.
- அதாவது, நாடகத்தினை நெறியாள்கை செய்வது யார், நடிகர் யார், பார்ப்போர் யார், எங்கே மேடையேற்றுவது, எப்போது மேடையேற்றுவது இதற்கான மனித, நிதி வளங்களை எவ்வாறு ஒழுங்குபடுத்துவது என்பன போன்றவற்றைத் திட்டமிடுதல் அவசியமானது.
- நாடகத் தயாரிப்பாளரின் பணிகளை நோக்கின்,
  * நாடகத்தின் கலைத்துவம் சாரா விடயங்களுக்குத் தலைமை தாங்குதல்.
  * நாடக எழுத்துரு, நெறியாளர் தெரிவு (நடைமுறையில் பெரும்பாலும் நெறியாளராலும் எழுத்துருத் தெரிவு செய்யப்படுவதுண்டு).
  * நடிகர்களை ஒழுங்குபடுத்திக் கொடுத்தல்.
  * நிதிக் கையாள்கை.
  * விளம்பரப்படுத்தல்.
  * நுழைவுச் சீட்டுக்களை வழங்குதல்.
  * ஏனைய கலைஞர்களை வழங்குதல் (துணைக் கலைஞர்கள்).

- மேலும், தயாரிப்பாளர் தனது பணிகளைத் திறம்பட மேற்கொள்வதற்கு அவருக்குச் சில தகைமைகள் அவசியமாகும். அவை,
  * தலைமைத்துவம்.
  * ஆலோசனை கூறும் திறன்.
  * வழிப்படுத்தும் ஆற்றல்.
  * நாடகம் பற்றிய அறிவு.
  * நிதி நிர்வாகத் திறன்.
  * தொடர்பாடற்றிறன்.
- மேற்படி விடயங்கள் பற்றிய கருத்துக்களை விளக்கத்துடன் கூறிய பின்னர் ஏற்கெனவே மாணவர்களால் காட்சிப்படுத்தப் பெற்ற சொல்லட்டைகளில் பொருத்தமின்மை இருப்பின் அவற்றினைப் பொருத்தமானவாறு ஒட்டுவதற்கு ஊக்கப்படுத்துங்கள்.
- சொல்லட்டைகள் பொருத்தமானவாறு அமைந்திருப்பின் அவற்றினைப் பிரதி செய்ய வழிப்படுத்துங்கள்.

## முதன்மைப் பதங்கள்

- தயாரிப்பாளர்.
- கடமைகள்.
- தகைமைகள்.
- தலைமைத்துவம்.

## தரவிருத்தி உள்ளீடுகள்

- சொல்லட்டைகள்.
- பக்கப்புரட்டி (ஒவ்வொருவரதும் பொறுப்புகள் அடங்கியது).

## கணிப்பீடும் மதிப்பீடும் :

- நாடகத் தயாரிப்பின் முக்கியத்துவத்தைக் கூறுவார்.
- நாடகத் தயாரிப்பாளரின் பொறுப்புக்களைப் பட்டியற்படுத்துவார்.
- நாடகத் தயாரிப்பாளரின் தகைமைகளைக் கூறுவார்.
- கூட்டாகச் செயற்பட ஆர்வம் காட்டுவதுடன் கருத்துக்களை வெளிப்படையாகவும் கூறுவார்.
- நாடகத் தயாரிப்பில் ஈடுபட விருப்பம் தெரிவிப்பார்.

## உசாத்துணைகள் :

- அரங்கு ஓர் அறிமுகம் (திருத்திய இரண்டாம் பதிப்பு) - பேராசிரியர் கா. சிவத்தம்பி. பேராசிரியர் சி. மௌனகுரு. திரு. க. திலகநாதன்.

| | | |
|---|---|---|
| தேர்ச்சி 1.0 | : | நாடகமும் அரங்கக் கலைகளும் தொடர்பான கொள்நெறிகளை விளக்குவார். |
| தேர்ச்சி மட்டம் 1.4 | : | அரங்கிற்கான காட்சி விதானிப்புப் பற்றிய விளக்கத்தைப் பெற்றவராவார். |
| செயற்பாடு 1.4 | : | "நாடகமொன்றிற்குக் காட்சி விதானிப்பது பற்றி அறிந்து கொள்வோம்" |

**பாடவேளைகள்** : 02

**கற்றற் பேறுகள்** :

- 'காட்சி விதானிப்பு' என்பதை விளக்குவார்.
- காட்சி விதானிப்பின் போது கவனிக்கப்பட வேண்டிய விடயங்களை முன்வைப்பார்.
- நாடகத்தில் காட்சி விதானிப்பின் பயன்பாடு பற்றி எடுத்துரைப்பார்.
- காட்சி விதானிப்பை அழகியலுணர்வுடன் மேற்கொள்வார்.

## பாடத்திட்டமிடல் தொடர்பான அறிவுறுத்தல்கள் :

காட்சி விதானிப்புப் பற்றியும், அதன் பயன்பாடுகள் பற்றியும் அறிந்து கொள்வதே இப் பாடத்தினூடாக எதிர்பார்க்கப் பெறுவதாகும்.

- காட்சி விதானிப்பு என்பது நடிகனின் நடிப்புக்குத் துணையாக அமையும் ஒரு கலையாகும்.
- கட்புல விளைவை ஏற்படுத்தும் காண்பிய மூலகங்களில் ஒன்றாகும்.
- நாடகத் தயாரிப்பின் போது, நடிகர் நடமாடும் பௌதிகச் சூழலை நிலை நிறுத்துவதாக அமையும்.
- அரங்கப் பொருள்கள் (திரைகள், பக்கத்திரைகள், வான்திரை, தட்டு முட்டுகள், கைப்பொருள்கள் எனப் பலவும்) இதற்குள் அடங்கும்.
- காட்சி விதானிப்பின் போது பயன்படுத்தப்பெறும் பொருள்கள் நாடகத்திற்குப் பொருத்தமானதாக அமைய வேண்டும்.
- காட்சி விதானிப்பு என்பது,
  * சூழலை, ஆற்றுவோருக்குப் படைக்கும்.
  * தயாரிப்பின் மோடியை உணர்த்தும்.
  * நடிப்பின் எல்லையை வரையறுக்கும்.
  * காலத்தைக் காட்டும்.
  * கதையைத் தெளிவுபடுத்தும்.
  * பிரதேசத்தை எடுத்துக்காட்டும்.
  * தயாரிப்பின் மனநிலையைத் தரும்.
  * ஆற்றுகை வெளியை உருமாற்றம் செய்யும்.
- காட்சி விதானிப்பானது நாடக மோடிகளுக்கமைவாக மாற்றமுறும்.
  உதாரணம்:

| | |
|---|---|
| யதார்த்த நாடகங்களில்<br>மனோரதிய நாடகங்களில் | உள்ளது உள்ளபடியே, காட்டுதல்.<br>ஆடம்பரமான, அழகான சீனறிகள், சிம்மாசனங்கள், விரிப்புக்கள் மற்றும் பிற. |
| யதார்த்த விரோத நாடகங்களில் | குறியீட்டுப் பாணியிலான காட்சி விதானிப்புக்கள். |

மேற்கூறிய விடயங்களைக் கருத்திற் கொண்டு கலந்துரையாடிச் செயற்பாடுகளில் ஈடுபடுத்துங்கள்.

மாணவர்களை, எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டு மூன்ற அன்றேல் ஆறு குழுக்களாகப் பிரியுங்கள், வேலைத்திட்டம் வழங்குங்கள்.

குழு 1, 3 - காட்சி விதானிப்பு என்றால் என்ன?

குழு 2, 4 - காட்சி விதானிப்பின் நோக்கங்கள், பயன்பாடுகள்.

குழு 5, 6 - மோடிக்கேற்ப வேறுபடும் காட்சி விதானிப்புக்கள்.

என்ற அடிப்படையில் செயற்பாட்டைக் கையளித்து, மேலதிக விளக்கங்களை வழங்கிக் கலந்துரையாடுங்கள். ஒவ்வொரு குழுவையும் ஒவ்வொரு மோடிக்கு ஏற்றவாறு காட்சியை விதானிக்கச் செய்யுங்கள் (தாள்கள் துணைக்கொண்டு காட்சி விதானிப்பின் பருமட்டான படத்தை வரைய வழிப்படுத்துங்கள்).

## முதன்மைப் பதங்கள்

- காட்சி விதானிப்பு.
- நாடக மோடி.
- சைக்கிளோராமா.

## தரவிருத்தி உள்ளீடுகள்

- பல்வேறு நாடகங்களில் பயன்படுத்தப்பெற்ற காட்சி விதானிப்பு தொடர்பான ஒளிப்படங்கள், காணொளிகள்.
- பல்வேறு மோடியிலமைந்த காட்சி விதானிப்புத் தொடர்பான படங்கள், காணொளிகள்.
- காட்சி விதானிப்பின் பயன்பாடுகள் தொடர்பாக எழுதப்பெற்ற அட்டவணை.
- தாள்கள், பென்சில், நிறப்பென்சில்கள் மற்றும் உபகரணங்கள்.
- இணையத்தளங்கள்.

## கணிப்பீடும் மதிப்பீடும் :

- காட்சி விதானிப்புப் பற்றி அறிந்து கூறுவார்.
- காட்சி விதானிப்பின் போது கவனிக்க வேண்டிய விடயங்களை எடுத்துரைப்பார்.
- நாடகக் காட்சி விதானிப்பின் பயன்பாடுகள் பற்றிப் பட்டியலிடுவார்.
- காட்சி விதானிப்பை நயப்புற மேற்கொள்வார்.
- மோடிக்கேற்பக் காட்சி விதானிக்கும் முறை பற்றிக் கலந்துரையாடுவார்.

## உசாத்துணைகள் :


- அரங்கு ஓர் அறிமுகம் - பேராசிரியர் கா. சிவத்தம்பி, பேராசிரியர் சி. மௌனகுரு, க. திலகநாதன்.
- அரங்கவியல் - முனைவர் சக்திப் பெருமாள், முனைவர் வே. சரோஜா
- அரங்க ஆட்டம் இயக்குதல் கோட்பாடு - அஷ்வகோஸ்.

| | | | |
|---|---|---|---|
| தேர்ச்சி | 1.0 | : | நாடகமும் அரங்கக் கலைகளும் தொடர்பான கொள்நெறிகளை விளக்குவார். |
| தேர்ச்சி மட்டம் | 1.5 | : | அரங்கிற்கான இசை விதானிப்பு மற்றும் ஒலி விளைவுகள் பற்றி அறிந்தவராவார். |
| செயற்பாடு | 1.5 | : | "அரங்கிற்கான இசை மற்றும் ஒலி விளைவுகள் பற்றி அறிந்து கொள்வோம்" |

**பாடவேளைகள்** : 01

**கற்றற் பேறுகள்** :

- நாடகத்தில் இசை, ஒலி விளைவுகள் என்பவற்றின் பயன்பாட்டினை அறிந்திருப்பார்.
- நாடகத்தில் இசை பயன்படுத்தப் பெறுவதற்கான நோக்கங்களை முன்வைப்பார்.
- இசைக் கருவிகளின் பயன்பாடு பற்றி அறிந்து அவற்றைப் பிரயோகிப்பார்.
- ஒலி விளைவுகள் பயன்படுத்தப் பெறுவதன் அவசியத்தை எடுத்துரைப்பார்.

## பாடத்திட்டமிடல் தொடர்பான அறிவுறுத்தல்கள் :

- அரங்கின் துணைக்கலைகளில் ஒன்றாகிய இசை பற்றியும் அரங்கில் இசையின் பயன்பாடு பற்றியும் அறியச் செய்வதுடன் இசையையும் ஒலி விளைவுகளையும் பயன்படுத்தக் கூடிய அறிவினையும் ஆற்றலையும் மாணவர் வளர்த்துக்கொள்ள வேண்டுமென எதிர்பார்க்கப்பெறுகின்றது.
- இறுவட்டு மூலமாகவோ அன்றேல் நேரடியாகவோ, நாடகத்தின் காட்சி ஒன்றினைப் பார்வையிடச் செய்யுங்கள் (பயன்படுத்தப்பெறும் காட்சி இசை முக்கியத்துவமுடையதாக இருத்தல் வேண்டும்).
- அக்காட்சியில் பயன்படுத்தப்பெற்ற இசை மற்றும் ஒலிகள் தொடர்பாகக் கலந்துரையாடுங்கள்.
- நாடகத்தில் இசையின் நோக்கங்களை முன்வைத்துக் கலந்துரையாடுங்கள்.
  - நாடகத்தின் கருவினை வெளிப்படுத்துதல்.
  - மனநிலையை வெளிப்படுத்துதல்.
  - பண்பாட்டின் அடித்தளமாக நின்று நிகழ்வுக்கான கனதியைத் தோற்றுவித்தல்.
  - சொல்லாடல்களுக்கு அழுத்தம் கொடுத்தல்
  - அசைவுகள், செயல்கள் என்பவற்றை அழுத்திக் காட்டுதல்.
  - சூழலையும் களத்தினையும் நிலைநிறுத்த உதவுதல்.
- இசையுடன் இணைந்த ஒலி, சத்த விளைவுகள் எவ்வாறு நாடக முழுமைக்குப் பங்காற்றுகின்றன என்பதனையும் கலந்துரையாடுங்கள்.
- ஒலியானது காலம், சமூக அந்தஸ்து, பொழுதுகள், மனநிலை, சூழ்நிலை போன்ற பலவற்றையும் வெளிப்படுத்துவதுடன் நடிகர்களின் மெய்ப்பாடுகளுக்கும் அழுத்தம் கொடுக்கின்றது என்பதனை வலியுறுத்துங்கள்.

  உதாரணம்:
  - மழை நேரம் - இடி, மின்னல் ஒலி.
  - விழாக்கள் - பட்டாசு ஒலி.
  - இரவுப் பொழுது - ஆந்தை அலறும் ஒலி
  - கிராமியச் சூழல் - மாட்டு வண்டியின் ஓசை, தெம்மாங்கு இசை.

- இசைப் பிரயோகத்துக்கான மூலங்கள் பற்றிக் கலந்துரையாடுங்கள்.
  * கருவி இசை (வாத்திய இசை).
  * வாய்ப்பாட்டிசை (மிடற்றிசை).
- இசைக் கருவிகள் பற்றியும் அவற்றின் பிரயோகப் பயன்பாடு பற்றியும் கலந்துரையாடுங்கள்.
  உதாரணம்:
  * துளைக் கருவிகள்/ காற்றுக் கருவிகள் - புல்லாங்குழல், நாதஸ்வரம், ஹார்மோனியம்.
  * தோற் கருவிகள் - மிருதங்கம், பறை, தபேலா, மத்தளம், உடுக்கு
  * நரம்புக் கருவிகள் - வீணை, வயலின், தம்புரா.
  * கஞ்சக் கருவிகள் - சல்லரி, சலங்கை.
  * இலத்திரனியற் கருவிகள் - கீபோட், ஒக்ரபாட்
- தேவையான உணர்வுகளுக்குப் பயன்படுத்தத் தக்க இசைக்கருவிகள் பற்றியும் விவாதியுங்கள்.
  உதாரணம்: சோகம் - வயலின், வீணை.
- ஒலி விளைவுகளைத் தோற்றுவிக்கக்கூடிய எளிமையான பொருள்களைப் பற்றியும் அறிமுகம் செய்யுங்கள்.
  உதாரணம்:- சிரட்டை - குதிரைக் குளம்பொலி.
  மெல்லிய தகரம் - இடி மின்னல்.
- சூழலில் கிடைக்கின்ற பொருள்களைப் பயன்படுத்திப் பல்வேறு ஒலி விளைவுகளையும் பிறப்பிக்க வழிப்படுத்துங்கள்.

## முதன்மைப் பதங்கள்

- கரு இசை.
- மிடற்றிசை.
- பின்னோக்கு இசை.
- ஒலி விளைவுகள்.

## தரவிருத்தி உள்ளீடுகள்

- நாடகக் காட்சி இறுவட்டு.
- இசைக் கருவிகள்.
- ஒலி எழுப்பும் கருவிகள்
- ஒலி விளைவுகள் தொடர்பான இறுவட்டுக்கள்.
- மற்றும் ஒலியெழுப்பும் நானாவித பொருள்கள்.

## கணிப்பீடும் மதிப்பீடும் :

- நாடகத்தில் இசை, ஒலி விளைவுகளின் பயன்பாட்டினை எடுத்துரைப்பார்.
- நாடகத்தின் மனநிலைக்குகந்த இசைக்கருவிகள் பாடல்களைத் தெரிவு செய்வார்.
- இசைக் கருவிகளின் வகைகளைக் கூறுவார்.
- ஒலி, சத்த விளைவுகளை உருவாக்குவார்.
- பார்க்கும் நாடகங்களில், இசையின் பிரயோகங்களையும் அவற்றின் சாதக, பாதகங்களையும் முன்வைப்பார்.

## உசாத்துணைகள் :


- அரங்கு ஓர் அறிமுகம் - பேராசிரியர் கா. சிவத்தம்பி, பேராசிரியர். சி. மௌனகுரு, திரு. க. திலகநாதன்
- அரங்கவியல் - முனைவர். சக்திப் பெருமாள், முனைவர் வே. சரோஜா.
- ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி - நாடகமும் அரங்கியலும்- தரம் 7 (2008), தேசிய கல்வி நிறுவகம்.

| | | |
|---|---|---|
| **தேர்ச்சி** | **1.0 :** | **நாடகமும் அரங்கக் கலைகளும் தொடர்பான கொள்நெறிகளை விளக்குவார்.** |
| **தேர்ச்சி மட்டம்** | **1.6 :** | **அரங்கிற்கான அசைவியக்கங்களை வடிவாக்கம் செய்வது பற்றிப் பயின்றவராவார்.** |
| **செயற்பாடு** | **1.6 :** | **“அரங்கிற்கான அசைவியக்கங்களை வடிவாக்கம் (Choregraphy) செய்வோம்”** |

**பாடவேளைகள்** : 02

**கற்றற் பேறுகள்** :

- நாடகத்தில் அசைவியக்கத்தின் பயன்பாட்டினை எடுத்துரைப்பார்.
- அசைவியக்கங்களின் காண்பியப் பரிமாணம் பற்றிப் புரிந்திருப்பார்.
- நாடகத்தில் அசைவியக்க வடிவாக்கத்தின் (Choregraphy) பங்களிப்பை விளங்கிப் பிரயோகிப்பார்.

## பாடத்திட்டமிடல் தொடர்பான அறிவுறுத்தல்கள் :

- அசைவுகள் நாடகத் தயாரிப்பில் உயிரோட்டமான விடயங்களாக அமைகின்றன. என்பதனை வலியுறுத்துவதுடன் அசைவுகள் வடிவாக்கம் செய்யப்பட்டு(Choreography) படிமம் ஒன்றினைத் தோற்றுவிக்கும் போது, அது கட்புல நிலையில் காத்திரமான விளைவினை உருவாக்கும் என்ற விடயத்தினை மாணவர்கள் புரிந்து கொள்ளும் வகையில் இந்தப் பாட அலகு கற்பிக்கப்பெற வேண்டுமென்று எதிர்பார்க்கப்பெறுகின்றது.
- மாணவர்களை இயங்கத்தக்க அரங்க வெளி ஒன்றுக்கு அழைத்துச் செல்லுங்கள். ஒவ்வொருவராக முன்வந்து, விரும்பிய ஒரு அசைவினைச் செய்யப் பணியுங்கள். இவ்வாறு, படிப்படியாக முழு மாணவர்களையும் வெளியில் வெவ்வேறு அசைவுகளைச் செய்யும் தொகுதியாக மாறச் செய்யுங்கள்.
- உருவாக்கப்பெற்ற அசைவுக்கோலம் தொடர்பில் மாணவர்களின் அனுபவத்தினையும் பெற்றுக் கொண்ட அறிவினையும் கலந்துரையாடித் திசைப்படுத்துங்கள்.
  * அசைவுகள் பார்ப்பதற்குத் தூண்டுவன.
  * பல அசைவுகள் உருவாகும் போது பிரமிப்பும் பெருங்காட்சிப் பண்பும் தோன்றும்.
  * அசைவுகள் கட்புல ரீதியாக உயிர்ப்பை ஏற்படுத்தும் அதேவேளை, பொருள் விளக்கத்தினையும் வழங்குகின்றன.
  * அகமன எழுச்சிகளையும் புற உலகின் வெளிப்பாடுகளையும் அசைவுகளினால் சித்திரிக்க முடியும்.
  * அசைவுடன் ஏனைய காண்பிய அம்சங்களான ஒளி, காட்சி, வேட உடை போன்றனவும் இசையும் இணையும் போது அசைவு மேலும் கவர்ச்சிகரமானதாக மாறுகின்றது.
  * அசைவுகள் ஏதேனும் குறித்த அர்த்தத்தினை ஏற்படுத்துவதாய் அமையும் போது அது ஆழமானதாக அமையும்.
- நாடகம் என்பது அசைவுகளின் தொகுதி என்ற ‘மரிஸ்பெயாட்டின்’ கூற்றினை முன்வைத்து அசைவுகளின் மூலமே நாடகம் நகருகின்றது என்பதனை விவரியுங்கள்.
- அசைவுகள் திட்டமிடப்பெற்று குறிப்பிட்ட திசை, தாளம், காலப்பிரமாணம், இசைக்கோலம் என்பவற்றுக்கேற்ப ஒழுங்கமைக்கப்பெறும் போதே வடிவாக்கம் தோற்றம் பெறுகின்றது என்பதனைக் கலந்துரையாடி உணர்த்துங்கள்.

- இரண்டாவது பாடவேளையில், மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து, விதந்துரைக்கப் பெற்ற நாடக எழுத்துருவாகிய புதியதொரு வீடு நாடகத்துடன் தொடர்புபடக்கூடிய,

  * மழை * கடல் அலைகள் * இடி மின்னல்
  * புயல் * தோணி வலித்தல் * கரை வலை இழுத்தல்

  தொடர்பான விடயங்களைக் குழுவுக்கொன்றாகக் கொடுத்து அசைவியக்க வடிவாக்கத்தினை (Choreography) மேற்கொள்ளச் செய்யுங்கள். அவர்களுக்கு உதவும் பொருட்டுப் பொருத்தமான இசை மற்றும் ஒலிகளை வழங்குங்கள்.
- செயற்பாட்டின் நிறைவில் ஒவ்வொரு குழுவினதும் அசைவியக்கம் பற்றி ஏனைய குழுக்களின் கருத்துக்களைப் பெற்று, ஆக்கபூர்வமான கலந்துரையாடலைத் தோற்றுவியுங்கள்.
- பின்வரும் விடயங்களை வலியுறுத்துங்கள்.
  * அசைவுகள் அரங்கின் பல நோக்கங்களை நிறைவு செய்யும்.
  * அசைவுகளின் நீட்சி நடனமாகவும் நடனக் கோலங்களாகவும் மாறுகின்றது.
  * அசைவுகள் திட்டமிடப்பெற்று வடிவாக்கம் செய்யப்பெறும் போது கவர்ச்சிகரமானதாகவும் கருத்துப் பரிமாற்றத்துக்குரிய வலிமையான நுட்பமாகவும் மாறுகின்றன.
  * அசைவியக்க வடிவாக்கமானது:
    - பாத்திரப் படைப்பு
    - சூழல் உருவாக்கம்
    - உணர்ச்சி/ மனநிலை வெளிப்பாடு
    - விசேட காண்பிய விளைவு
    - பெருங்காட்சிப் பண்பு
    - குறியீடாகத் தொழிற்படல்

    போன்ற பல்வேறு தேவைகளையும் நிறைவு செய்யக்கூடியவையாகக் காணப்பெறுகின்றது.
  * அசைவியக்க வடிவாக்கமானது (Choreography) பிரதான மோடிப்படுத்தல் உத்தியாகவும் காணப்பெறுகின்றது.
  * அசைவுகளின் வடிவாக்கங்களுக்கு மரபுவழி நடனக் கோலங்களையும் பயன்படுத்த முடியும். அவை பண்பாட்டு ரீதியான பெறுமானத்தினைத் தருவனவாகவும் அமைகின்றன.
- அசைவுகளை வடிவாக்கம் செய்யும் போது கவனிக்க வேண்டிய விடயங்களை முன்வையுங்கள்.
  * அசைவியக்கங்கள் லயத்தோடும், காலகதியோடும் பொருந்த அமைதல்.
  * மேடையின் பௌதிகத் தளம், அதன் சமநிலை என்பன பேணப்படுதல்.
  * மேடையின் களம், நிலைகள்.
  * ஏனைய காண்பிய மூலகங்கள், குறிப்பாக அரங்கப் பின்னணி ஒளியூட்டல்.
  * ஆற்றுகையின் நகர்வில் வலிந்து செருகப்பெறாத இயல்பான இணைவு காணப்பெற வேண்டும்.
  * கட்புலக் கவர்ச்சியைத் தரத்தக்க கற்பனாபூர்வமான சேர்மானத்துடன் காணப்பெறுதல் வேண்டும்.

## முதன்மைப் பதங்கள்

- அசைவியக்க வடிவாக்கம்.
- சூழல் உருவாக்கம்.
- நடனவாக்கம்.
- அரங்கச் சமநிலை.

## தரவிருத்தி உள்ளீடுகள்

- இசைக் கருவிகள்.
- புதியதொரு வீடு நாடக எழுத்துரு.
- பல்வேறு நடன வடிவங்கள் தொடர்பான இறுவட்டுக்கள்.

## கணிப்பீடும் மதிப்பீடும் :

- நாடகத்தில் அசைவுகளின் பயன்பாட்டினை எடுத்துரைப்பார்.
- அசைவியக்கங்களின் கண்பிய நிலைப் பரிமாணங்களை உணர்ந்து வெளிப்படுத்துவார்.
- விதந்துரைக்கப்பெற்ற நாடக எழுத்துருக்களுக்கான அசைவியக்கத்தினை வடிவாக்கம் செய்வார்.
- அசைவியக்கங்களை வடிவாக்கம் செய்யும் போது கவனிக்க வேண்டிய விடயங்களில் தெளிவுடன் ஈடுபடுவார்.
- இயற்கையில் காணப்பெறும் அசைவுகளை அவதானித்து வடிவாக்கம் செய்வார்.

## உசாத்துணைகள் :

- அரங்கு ஓர் அறிமுகம் - 2014, திருத்திய இரண்டாம் பதிப்பு.
- நாடக படைப்பாக்க அடித்தளங்கள் - பேராசிரியர் சே. இராமானுஜம்.
- ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி - தேசிய கல்வி நிறுவகம்.
  நாடகமும் அரங்கியலும்
  - தரம் 11(2008)

| | | | |
|---|---|---|---|
| தேர்ச்சி | 1.0 | : | நாடகமும் அரங்கக் கலைகளும் தொடர்பான கொள்நெறிகளை விளக்குவார். |
| தேர்ச்சி மட்டம் | 1.7 | : | வேட உடை விதானிப்பு என்பதனை நுணுகி ஆராய்ந்தவராவார். |
| செயற்பாடு | 1.7 | : | "நாடகமொன்றிற்கான வேட உடையைத் தயாரிப்போம்" |

**பாடவேளைகள்** : 02

**கற்றற்பேறுகள்** :

- வேட உடையை வடிவமைப்பது பற்றி அறிந்து கூறுவார்.
- நாடகத்தில் வேட உடையின் பயன்பாட்டை எடுத்துக் கூறுவார்.
- நாடக மோடிகளுக்கேற்ப வேட உடைகள் வேறுபடும் விதத்தை விளக்குவார்.

**பாடத்திட்டமிடல் தொடர்பான அறிவுறுத்தல்கள் :**

வேட உடை விதானிப்பு, வேட உடைகளின் பயன்பாடு, மோடிக்கேற்ப வேட உடைகள் மாறுபடும் விதம் என்பன பற்றிய பின்வரும் முக்கியமான விடயங்களைக் கலந்துரையாடுங்கள்.

- நடிகருக்கு வேண்டிய துணைக்கலைகளுள் வேட உடையும் ஒன்றாகும்.
- வேட உடைகள் நடிகரின் காண்பிய நிலையை வேண்டி நிற்கும்.
- வேட உடைகள் பாத்திரங்களின் உடல், உள, சமூக அந்தஸ்து நிலைமைகளுக்கு ஏற்ப வேறுபடும்.
- நாடகத்தின் கதை, கரு என்பவற்றை அடித்தளமாகக் கொண்டு பாத்திரத்தின் இயல்பிற்கு ஏற்ப வேட உடை வடிவமைக்கப்பெறல் வேண்டும்.
- வேட உடைகள் நாடகத்தின் நிகழ்காலம், களம், பாத்திர இயல்பு என்பவற்றிற்கு அப்பால் நாடகத்தின் மோடியையும் பார்ப்போருக்குத் தெரிவிக்கும்.
- வேட உடைகள் வாழ்வை ஒத்ததாக இருப்பின் அவற்றை யதார்த்த மோடி என்றும் மோடிமைப்படுத்தப் பெற்றதாக இருப்பின் யதார்த்த விரோத மோடி என்றும் பகட்டு ஆடம்பரமாகக் (மணிகள், முத்துக்கள் பதித்து) காணப்படின் அவை கற்பித, மனோரதிய நிலை அன்றேல் மிகைப்பாட்டு மோடி சார்ந்ததாகவும் காணப்பெறும்.
  (மரபுவழிக் கூத்து, இசை நாடகங்களில் கற்பித, மனோரதிய வேட உடைகளே பயன்படுத்தப் பெறுகின்றன).
- இதேவேளை கதகளி, சீன பீஜிங் ஒபேரா போன்ற அளிக்கை முறைமைகளில் ஆடைகளின் வர்ணங்களுக்குப் பாத்திரங்கள் தீர்மானிக்கப் பெறுகின்றன.
- குறியீட்டு வேட உடைகள் யதார்த்தமல்லாத நாடகங்களில் (குறிப்பாக ஒரே மாதிரியான உடைகளை அணிதல், உடைகள் ஒரே மாதிரியாக இருந்த போதிலும் நிறங்கள் வேறுபட்டுக் காணப்படுதல், உடைகளில் சில குறியீடுகளைப் பொருத்துதல்) பயன்படுத்தப்பெறும்.
- வேட உடைகளை வடிவமைக்கும் போது ஏனைய காட்சியமைப்பு, ஒப்பனை, ஒளி விதானிப்பு, இசை விதானிப்பு என்பவற்றுடன் பொருந்தி வரக்கூடியதாக அமைதல் வேண்டும்.
- மேடையில் நிற்கும் பாத்திரங்கள் மட்டுமன்றிக் கூத்து மற்றும் மோடியுற்ற நாடகங்களில் பாடகர்களும் பங்குபற்றுநர்களாக இருப்பதால் அவர்களுக்கும் வேட உடையை விதானிப்பது சிறந்த ஒன்றாகும். (அது நாடகத்துடன் பொருந்தி வரக்கூடிய ஒன்றாக இருக்க வேண்டும்).

- இவற்றுடன் 10ஆம் தரத்திலிருந்து தேர்ச்சி மட்டம் 3.6.2 ஐயும் கவனத்திற் கொண்டு கற்பிக்க வேண்டும்.
  மேற்படி விடயங்களை மனதிற்கொண்டு கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகளைக் கீழ்க் கண்டவாறோ வேறு முறையிலோ திட்டமிடுங்கள்.
- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரியுங்கள்
- ஒவ்வொரு குழுவுக்கும் ஒவ்வோர் நாடகப் பகுதிகளைக் கொடுத்து, அவற்றிற்கான வேட உடையைத் திட்டமிடுவது பற்றிக் கலந்துரையாடுங்கள்.
  குழு 1 - யதார்த்த நாடகப் பகுதி (உதாரணம்: எந்தையும் தாயும்).
  குழு 2 - கற்பித நாடகம் (செஞ்சோற்றுக்கடன் - அகளங்கன்).
  குழு 3 - மோடிமை தழுவிய யதார்த்தம் (ஆரொடு நோகேன்).
  குழு 4 - மோடிமை நாடகம் (நம்மைப் பிடித்த பிசாசுகள்).
- இப் பகுதிகளுக்கான வேட உடையை வடிவமைத்த பின்னர் அவற்றை அணிந்து நடிப்பதற்கு வாய்ப்பளியுங்கள்.
- மோடிக்கேற்ப வேட உடை வேறுபடுவதைச் சுட்டிக்காட்டுங்கள்.
- வேட உடையின் பயன்பாடுகள் பற்றிப் பட்டியலிடுமாறு கூறுங்கள்.

## முதன்மைப் பதங்கள்

- வேட உடை விதானிப்பு.
- மோடி.
- கற்பிதம் / மனோரதியம்.
- மோடிமை.

## தரவிருத்தி உள்ளீடுகள்

- வேட உடை தொடர்பான ஒளிப்படங்கள்.
- வேட உடைகள் (வாழ்வை ஒத்த, கற்பித, குறியீட்டு).
- வரைதாள்கள், வரைபொருள்கள்.
- ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி - 10 ஆம் தரம்.
- இலக்கிய நாடகங்கள் - அகளங்கன்.
- எந்தையம் தாயும் - ம. சண்முகலிங்கம்.
- நம்மைப் பிடித்த பிசாசுகள் - சி.மௌனகுரு.

## கணிப்பீடும் மதிப்பீடும் :

- வேட உடைகளின் முக்கியத்துவத்தை அறிந்து கூறுவார்.
- வேட உடைகளை விதானிப்பார்.
- வேட உடைகளின் பயன்பாடுகளைப் பட்டியலிடுவார்.
- பாத்திரங்களுக்கு ஏற்ப வேட உடைகளைத் திட்டமிடுவார்.
- நாடக மோடிகளுக்கு ஏற்ற வகையில் வேட உடைகளைத் திட்டமிட்டு வடிவமைப்பார்.

## உசாத்துணைகள் :


- அரங்கு ஓர் அறிமுகம் - பேராசிரியர் கா. சிவத்தம்பி.
  - பேராசிரியர் சி. மௌனகுரு.
  - திரு.க. திலகநாதன்.
- கற்கை நெறியாக அரங்கு - பேராசிரியர் கா. சிவத்தம்பி (தொகுப்பு).
- அரங்கவியல் - முனைவர் சக்திப் பெருமாள்.
  - முனைவர் வே. சரோஜா.
- அரங்கத் தயாரிப்பு - இ. குணசீலன்.
- மட்டக்களப்பு மரபுவழி நாடகங்கள் - கலாநிதி சி. மௌனகுரு.

| | | |
|---|---|---|
| தேர்ச்சி | 1.0 : | நாடகமும் அரங்கக் கலைகளும் தொடர்பான கொள்நெறிகளை விளக்குவார். |
| தேர்ச்சி மட்டம் | 1.8 : | நாடக ஒப்பனை பற்றிப் பயின்றவர் ஆவார். |
| செயற்பாடு | 1.8 : | "நாடகத்தில் ஒப்பனை என்பது பற்றி அறிந்து கொள்வோம்" |

**பாடவேளைகள்** : 02

**கற்றற் பேறுகள்** :

- ஒப்பனைப் பொருள்களை அறிந்திருப்பார்.
- ஒப்பனை செய்யும் படிமுறைகளை ஒழுங்குமுறைப்படி விவரிப்பார்.
- ஒப்பனை செய்யும் முறைகளைக் கூறுவார்.
- நாடகத்தில் ஒப்பனையின் முக்கியத்துவத்தைப் பற்றி அறிந்திருப்பார்.
- ஒப்பனை முறைகளில் புதிய தகவல்களைத் தேட முனைவார்.
- ஒப்பனையின் வகைகளை முன்வைப்பார்.

**பாடத்திட்டமிடல் தொடர்பான அறிவுறுத்தல்கள் :**

- நாடகம் ஒன்றின் ஒரு பகுதியைக் காணொளி மூலம் காட்சிப்படுத்துங்கள்.
- அதில் வரும் பாத்திரங்களை உற்று நோக்கச் செய்யுங்கள்.
- அப் பாத்திரங்களின் ஒப்பனை தொடர்பான சில கருத்துக்களைக் கேட்டறியுங்கள்.
- மேலும், ஒப்பனை என்பது உடலோடு தொடர்புடையது. முகம் மற்றும் உடைகளால் மறைக்கப்படாத உடற்பாகங்களுக்கு ஒப்பனை செய்யப்படும்.
- ஒப்பனையானது பூசுதல், ஒட்டுதல், அணிதல் என்ற முறைகளின் ஊடாகச் செய்யப் பெறுகின்றது.
- இம்முறைகளைப் பயன்படுத்தும் போது நடிகரின் முகத்திற்கும் புலன்களுக்கும் பாதிப்பு ஏற்படாதவாறு பொறுமையுடனும் கவனமாகவும் செயற்பட வேண்டும்.
- நடிகரின் தோலினை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். தோல்கள் வரட்சியான, உலர்ந்த, எண்ணெய்ப் பசையுடைய, வழுவழுப்பான, ஆரோக்கியமான, ஒவ்வாமையுடைய தோல் எனப் பலவகைப்பட்டவை. இவற்றைக் கருத்திற் கொண்டு பொருத்தமான ஒப்பனைப் பொருள்களைப் பயன்படுத்துதல் சிறப்பானது.
- இதற்கமைவாக ஒப்பனைக் கலைஞர் தமது கைகளைச் சுத்தமாகக் கழுவிய பின்னர் ஒப்பனையை மேற்கொள்ள ஆரம்பிக்க வேண்டும்.
- ஒப்பனையினை யதார்த்த ஒப்பனை, யதார்த்தம் அல்லாத ஒப்பனை (மோடிமை) என நோக்கலாம்.
- யதார்த்த ஒப்பனை என்பது வாழ்வை ஒத்த தன்மையதாக இருக்கும்.
- இது ஒரு வழமை சார்ந்ததாகவும் நடிப்பவருக்கும் - பார்ப்போருக்கும் இடையே வேறுபாட்டை உண்டாக்கிக் கொள்வதாகவும் அமையும்.
- இங்கு, இயல்பான பாத்திரத்திற்கேற்ப ஒப்பனை செய்யப்பெறுதல் வேண்டும்.
- மோடிமை ஒப்பனை என்பது ஒரு கருத்தைக் கற்பனை சார்ந்து குறியீடுகள் மூலம் உணர்த்துவது ஆகும்.
- ஒப்பனை செய்யப் பயன்படும் பொருள்களாகத் தூரிகை, பஞ்சு என்பவற்றைக் குறிப்பிடலாம்.

- ஒப்பனையின் பயன்களை நோக்கின்,
    * நடிகனின் முகத்தைத் தெளிவாகவும் பிரகாசமாகவும் காட்டுதல்.
    * பாத்திரங்களின் உணர்ச்சி வெளிப்பாட்டை வெளிக்கொணருதல்.
    * பாத்திரங்களை அடையாளம் கண்டு கொள்ளுதல்.
    * நாடகத்தின் மோடியை அறிதல்.
    * பாத்திரத்தின் வயது, அந்தஸ்த்தைத் தெரியச் செய்தல்.
- மேற்படி விடயங்களைக் கருத்திற் கொண்டு மாணவர்களைக் குழுக்களாக்கி அக் குழுவில் ஒருவருக்கு ஒப்பனையை மேற்கொள்ளும்படி கூறுங்கள்.
- ஒப்பனை செய்யப்பெற்ற விதம் தொடர்பாகக் கலந்துரையாடி, முக்கியமான விடயங்களைக் குழுநிலையில் அறிக்கைப்படுத்த வழிப்படுத்துங்கள்.

## முதன்மைப் பதங்கள்

- ஒப்பனை.
- தூரிகை.
- புலன்கள்.

## தரவிருத்தி உள்ளீடுகள்

- நாடக இறுவட்டு.
- ஒப்பனைப் பொருள்கள்.
- ஒப்பனை தொடர்பான ஒளிப்படங்கள்.

## கணிப்பீடும் மதிப்பீடும் :

- ஒப்பனைப் பொருள்களைப் பெயரிடுவார்.
- ஒப்பனை செய்யும் முறைகளை அறிந்து கூறுவார்.
- நாடகத்தில் ஒப்பனையின் பயன்பாடு பற்றி அறிக்கைப்படுத்துவார்.
- ஒப்பனையில் புதிய தகவல்களைத் தேடுவதில் ஆர்வம் காட்டுவார்.
- பாத்திரம் ஒன்றிற்கு ஒப்பனை செய்து காட்டுவார்.

## உசாத்துணைகள்

- அரங்கவியல் - முனைவர் சக்திப்பெருமாள்
  முனைவர் வே. சரோஜா.

| | | |
|---|---|---|
| தேர்ச்சி | 1.0 : | நாடகமும் அரங்கக் கலைகளும் தொடர்பான கொள்நெறிகளை விளக்குவார். |
| தேர்ச்சி மட்டம் | 1.9 : | ஒளி விதானிப்பு என்பதை நுணுகி நோக்குவார். |
| செயற்பாடு | 1.9 : | "அரங்க ஒளியூட்டம் பற்றி அறிந்து கொள்வோம்" |

**பாடவேளைகள்** : 02

**கற்றற் பேறுகள்** :

- அரங்க ஒளியூட்டம் என்பதன் செயற்பாட்டு ரீதியான அர்த்தத்தை விளங்கியிருப்பார்.
- அரங்க ஒளியூட்டலின் வகைகளைக் கூறுவார்.
- ஒளி விதானிப்பிற்காகப் பயன்படுத்தப்பெறும் சாதனங்களை அடையாளம் காண்பார்.
- நாடகத்தில் ஒளி விதானிப்பின் பயன்பாடுகளைப் பட்டியற்படுத்துவார்.

## பாடத்திட்டமிடல் தொடர்பான அறிவுறுத்தல்கள் :

- அரங்க ஒளியூட்டலின் வகைகளையும் ஒளி விதானிப்பிற்குப் பயன்படுத்தப்பெறும் சாதனங்களையும் அறிந்து, நாடகத்தில் ஒளி விதானிப்பின் பயன்களை விளங்கிக் கொள்ளலே இங்கு எதிர்பார்க்கப்பெறுவதாகும்.
- வகுப்பறை யன்னல், கதவுகளை மூடி இருளாக்கி விட்டு, பின்வரும் ஒளிமுதல்களை ஒவ்வொன்றாக ஏற்றுங்கள்.
  * மெழுகுதிரி அன்றேல் தீக்குச்சி.
  * மின்சூல்.
  * சுட்டிவிளக்கு.
  * குத்து விளக்கு அன்றேல கை விளக்கு.
  * தீப்பந்தம்.
  * நகர்வு ஒளிவிளக்கு (Running bulb).
  * பெற்றோமக்ஸ் மற்றும் பிற (வசதிக்கேற்ப).
- ஒவ்வொரு ஒளிமுதல்களின் ஒளியேற்றலுக்கிடையிலும் உணர்ந்து கொண்ட வேறுபாடுகள் தொடர்பில் கலந்துரையாடுங்கள்.
- மீண்டும் மின்சூல் ஒளிக்கு முன்னால் பல்வேறு ஒளி புகவிடும் வர்ணத்தாள்களை ஒவ்வொன்றாக வைத்து ஒளி பாய்ச்சுங்கள்.
- அவர்களுக்கு ஏற்பட்ட உணர்வுகள் தொடர்பாகக் கேட்டறியுங்கள்.
- பின்வரும் விடயங்களை வலியுறுத்திக் கலந்துரையாடுங்கள்.
  * ஒளி, தொட்டறியப்பெற முடியாத ஒன்றாகும்.
  * அது ஒரு தெறிக்கும் தளத்தில் படும்போது மட்டுமே கண்ணுக்குப் புலனாகின்றது.
  * ஒளி விதானிப்பின் போது இசைவு, சமநிலை, அளவுப்பிரமாணம், அழுத்தம், லயம் போன்ற விதானிப்புக் கோட்பாடுகளை அனுசரிப்பது அவசியமாகும்.
  * ஒளியானது வர்ணம், செறிவு, பிரகாசம் எனும் மூன்று அடிப்படைப் பண்புகளைக் கொண்டிருக்கும்.
  * மேலும், ஒளி வரும் திசையும் அதன் செறிவும் அரங்கில் பாரிய செல்வாக்குச் செலுத்துகின்றன.
  * தயாரிப்பின் கட்புல மூலகங்களான இயக்கம், காட்சிகள், வேட உடை, ஒப்பனை என்பவற்றை வலிமையுடையதாக்குவது ஒளி விதானிப்பாகும்.

* மேடை ஒளியமைப்பைக் கட்டுப்படுத்தக்கூடிய 4 காரணிகளாவன:-
    - செறிவு, பிரகாசம் - விநியோகம் (திசை)
    - வர்ணம் - அசைவு என்பனவாகும்.

- அரங்க ஒளியூட்டலுக்காகச் சில விளக்கு வகைகளும் ஒளி விதானிப்புச் சாதனங்களும் பயன்படுத்தப்பெறும்.
- பொட்டொளி, பரவல் விளக்கு (பெருக்கொளி), நிறச்சில்லு, மங்கலாக்கி என்பன அவற்றுள் பிரதானமானவையாகும்.
- மேற்படி சாதனங்களின் படங்களைக் காட்சிப்படுத்துவது நன்று.
- பொட்டொளி (Spot light) என்பது புள்ளிக்குவியமுடைய விளக்கு எனப்பெறுகிறது. இது பிரதானமாக இருவகைப்படும். அவையாவன:
  (1) அசையும் பொட்டொளி (2) நிலையான பொட்டொளி.
- மேடையின் குறுகிய பகுதிகளில் அடர்த்தியான ஒளிக்கற்றைகள் மூலம் வெளிச்சத்தை வழங்குவதற்கு இவை துணைபுரிகின்றன.
- பெருக்கொளி/ பரவல் ஒளி (Flood light) என்பது பரவிச் செல்லும் ஒளியைத் தருவது எனப் பொருள் பெறுகின்றது.
- இது நிரந்தரமான அகல்கோண ஒளியைத் தரும்.
- அரங்கப் பின்னணியையும் பொதுவாக முழு மேடை வெளியையும் ஒளியூட்டுவதற்கு இவ் விளக்குகள் பயன்படுத்தப்பெறும்.
- பொட்டொளி மற்றும் பெருக்கொளி வில்லையுடன் நிறச்சில்லையும் (Colour Wheel) பயன்படுத்துவதால் பல்வேறு வர்ண ஒளிகளை உருவாக்கிக் கொள்ளலாம்.
- மங்கலாக்கி/ தணிகருவி (Dimmer) என்பது ஒளியைக் குறைப்பதற்கும் அதிகரிப்பதற்கும் பயன்படுத்தப்பெறும் ஒரு கருவியாகும்.
- நாடகத்தில் ஒளியூட்டலின் பயன்பாடுகள் தொடர்பாகப் பின்வருவன மேற்கிளம்புமாறு கலந்துரையாடுங்கள்.
  * புரிந்து கொள்ளலுக்குத் துணை புரிவதும் நாடகத்தின் பெறுமானங்களை அன்றேல் விழுமியங்களை வெளிப்படுத்துவதும் ஒளியமைப்பின் பிரதான பணிகளாகும்.
  * நாடகத்தின் மனநிலை, மோடி, கரு, சூழ்வு, காலம், சூழல் என்பவற்றைச் சிருஷ்டிப்பதற்கு ஒளி உதவும்.
  * உணர்வு வெளிப்பாட்டுக்கு உதவும்.
  * காட்சி மாற்றத்துக்குப் பயன்படும்.

  மேலும் பொருத்தமான விடயங்களைக் கலந்துரையாடி இணைத்துக் கொள்ளுங்கள்.
- நிறைவில் ஒளி விதானிப்புச் சாதனங்களின் படங்கள், அவற்றின் பயன்பாடுகள் நாடகத்தில் ஒளியூட்டலின் பயன்பாடுகள் என்பவற்றை உள்ளடக்கி, ஒவ்வொருவரும் தனித்தனியாகப் பக்கப்புரட்டி ஒன்றினை ஆக்கி வருமாறு அறிவுறுத்துங்கள்.

## முதன்மைப் பதங்கள்

- அரங்க ஒளியூட்டல்.
- செறிவு.
- வர்ணம்.
- சமநிலை.
- பிரகாசம்.

## தரவிருத்தி உள்ளீடுகள்

- ஒளி விதானிப்புச் சாதனங்களின் படங்கள்
- கிடைக்கக்கூடிய ஒளிமுதல்கள் (மெழுகுதிரி, தீக்குச்சி, மின்சூல் மற்றும் பிற).

**கணிப்பீடும் மதிப்பீடும் :**

- அரங்க ஒளியூட்டல் என்பதன் விளக்கத்தைப் பெற்றுக் கொள்வார்.
- அரங்க ஒளியூட்டல் சாதனங்களை இனங்காண்பார்.
- அரங்கில் ஒளியூட்டலின் பயன்பாடுகளைக் கூறுவார்.
- அரங்க ஒளியூட்டலைக் கையாண்டு பார்ப்பார்.
- அரங்க ஒளியூட்டல் தொடர்பாகத் தேடியறிய முனைவார்.

**உசாத்துணைகள் :**

- அரங்கவியல் - முனைவர் சக்திப் பெருமாள்
  முனைவர் வே. சரோஜா.
- தமிழ் அரங்கியல் மரபும் மாற்றங்களும் - ப்ரசன்னா இராமசாமி.
  (தமிழ் அரங்கியற் கட்டுரைகளின் தொகுப்பு).
- அரங்கில் ஒளி - கா. சிவபாலன்
- ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி - தரம் 11, நாடகமும் அரங்கியலும் - 2008











| | | |
|---|---|---|
| **தேர்ச்சி 1.0 :** | | **நாடகமும் அரங்கக் கலைகளும் தொடர்பான கொள்நெறிகளை விளக்குவார்.** |
| **தேர்ச்சி மட்டம் 1.10 :** | | **நாடகத்தில் பார்ப்போரின் முக்கியத்துவத்தை விளங்கிக் கொள்வார்.** |
| **செயற்பாடு 1.10 :** | | **"நாடகத்தில் பார்ப்போரின் முக்கியத்துவத்தை அறிந்து கொள்வோம்".** |

**பாடவேளைகள்** : 01

**கற்றற் பேறுகள்** :

- நாடகம் ஒன்றின் தவிர்க்கவியலாத முக்கியத்துவம் உடையோராய்ப் பார்ப்போர் விளங்குகின்றனர் என்பதை உணர்ந்திருப்பார்.
- நாடகம் ஒன்றை நயப்போர் பார்ப்போரே என்பதை வலியுறுத்துவார்.
- நாடகக் கலையின் உந்து சக்தியாகத் திகழ்பவர் பார்ப்போர் என்பதை மனங்கொள்வார்.
- நாடகத்தினைப் பார்க்க விரும்புவார்.

## பாடத்திட்டமிடல் தொடர்பான அறிவுறுத்தல்கள் :

- பார்ப்போர் பற்றிக் கீழ்வரும் விடயங்களை வலியுறுத்திக் கலந்துரையாடுங்கள்.
- பார்வையாளர் என்பதும் பார்போர் என்பதும் பொருள் விளக்கத்தில் ஒன்றே என்பது.
- பார்வையாளர் எனும் போது, நாடகம் ஒன்றன் பார்வையை ஆள்வது அவர்கள் (பார்வையாளர்) அன்றி, நெறியாளரே என்பதாற்றான் பார்ப்போர் என்ற சொல் அறிமுகமாகியது என்பது.
- நடிகர் - வெளி - ஆற்றுகை - பார்ப்போர் என்ற நான்கு விடயங்களும் நாடகம் ஒன்றில் அவசியம். அதாவது,
  - * நடிகர் இல்லாது நாடகம் இல்லை (பொம்மைகளும் நடிகரே).
  - * அரங்க வெளியில்லாது நாடகம் இல்லை (வானொலி நாடகத்திலும் மனம் எனும் அரங்க வெளியில் நாடகம் நிகழ்கிறது).
  - * பார்ப்போர் இல்லாது நாடகம் இல்லை.

  ஆகவே, பார்ப்போர் என்பது மிகப் பிரதானம் என்பது
- நடிகர் நாடகத்தை நிகழ்த்தும் போது அதற்குரிய பதிற்குறிகளைத் (Response) தருபவர் பார்ப்போரே என்பது.
- நாடகம் ஒன்றின் வெற்றிக்கு (பார்ப்போரின் பரிசு) அன்றேல் தோல்விக்கு (பார்ப்போரின் பரிகசிப்பு) காரணம் பார்ப்போரே என்பது.
- கலைகளை இரசிப்பவன் இரசிகன், அந்தவகையில் நாடகத்தில் பார்ப்போரும் இரசிகரே என்பது.
- ஒவ்வொரு நாடகமும் பார்ப்போரின் மகிழ்விற்கு, அறிவுத் தூண்டலிற்கு, பொழுதுபோக்கிற்கு, செய்திப் பரிமாற்றத்திற்காகவே நிகழ்த்தப்பெறுகிறது என்பது.
- பார்ப்போரை மூன்ற வகை மாதிரியாகக் கொள்ளலாம்.
  1. பார்ப்போர் - Audience.
  2. பார்வை நடிகர் - Spect actors.
  3. பங்குபற்றுநர் - Participants என்பது.

- பார்ப்போர் என்போர் எமது சமூகமே என்பதும் அவர்களே நாடகத்தினை விமர்சிப்பவர்களும் ஆவார் என்பது.
- எல்லாப் பார்ப்போரும் விமர்சகர்கள் அல்லர் அவர்களிலும் அபிப்பிராயம் கூறுவோரும் உள்ளனர் என்பது.
- கிரேக்க, இந்திய, சீன நாடக மரபுகளில் பார்ப்போர் பற்றிய சிறப்புக் குறிப்புக்கள் உள்ளன.

  உதாரணம்:

  **கிரேக்கம்** - நடிப்பதைப் பார்த்துப் பார்ப்போருக்கு ஏற்படும் மனவெளிப்பாடு - கதாசிஸ்.

  **இந்தியா** - நடிப்பதைப் பார்த்துப் பார்ப்போருக்கு அந்தந்த நிலையில் ரச உணர்வுகள் தோன்றும் - ரச (பார்ப்போன் சகிர்தயன் என அழைக்கப்படுகிறார்)

  **யப்பான்** - நடிப்பதைப் பார்த்துப் பார்ப்போருக்கு ஏற்படும் மன உணர்வு - யூஜின்.
- நாடகம் ஒன்றினைக் காட்சிப்படுத்தி, அது பற்றிக் கலந்துரையாடுங்கள். நான்கு குழுக்களாக மாணவர்களைப் பிரித்து,
  1. பார்ப்போரின் முக்கியத்துவம்
  2. பார்போரின் துலங்கல்கள்
  3. பார்ப்போரின் விமர்சனம்
  4. பார்ப்போர் பற்றிய மனப்பதிவு

  பற்றிய ஒப்படைகளை உடன் தயாரிக்குமாறு வலியுறுத்துங்கள்.
- தயாரித்தவற்றை முன்வைத்துக் கருத்தாடுங்கள்.

## முதன்மைப் பதங்கள்
- பார்ப்போர்.
- பார்வை நடிகர்.
- பங்குபற்றுநர்.
- அபிப்பிராயம்.
- விமர்சனம்.

## தரவிருத்தி உள்ளீடுகள்
- காட்சிப்படுத்தத்தக்க நாடக இறுவட்டுக்கள்.
- பார்ப்போர் பற்றிய பல்வேறு படங்கள்.

## கணிப்பீடும் மதிப்பீடும் :
- நாடகத்தில் பார்ப்போர் முக்கியமானவர் என்பதைக் கூறுவார்.
- நாடகம் ஒன்றை நயப்போர் பார்ப்போர் என்பதை உணர்ந்திருப்பார்.
- நாடகம் ஒன்றின் விமர்சகர் பார்ப்போர் என்பதைத் தெரிந்திருப்பார்.
- பார்ப்போர் பற்றிய விளக்கத்தைக் கூறுவார்.
- நாடகங்களை விமர்சனப் பாங்கில் பார்ப்பார்.

## உசாத்துணைகள் :

- மண்சுமந்த மேனியர் - குழந்தை ம. சண்முகலிங்கம்.
- எந்தையும் தாயும் - குழந்தை ம. சண்முகலிங்கம்.
- சக்தி பிறக்குது - சி. மௌனகுரு.
- சிறுவர் அரங்கு - செயல்திறன் அரங்க இயக்கம்.
- நாடக வழக்கு - (தொகுப்பு) கந்தையா ஸ்ரீகணேசன்.
- இந்திய நாடகம் - மு. சேரன்.
- ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி - தரம் 13, நாடகமும் அரங்கியலும், 2010.

| | | | |
|---|---|---|---|
| தேர்ச்சி | 2.0 | : | கற்பனையை நெறிப்படுத்திச் சுற்றாடல் சார்ந்த அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு ஆக்கம் புரிவார். |
| தேர்ச்சி மட்டம் | 2.1 | : | ஊமச் சித்திரிப்பில் ஈடுபடக் கூடியவராவார். |
| செயற்பாடு | 2.1 | : | "ஊமச் சித்திரிப்பில் ஈடுபடுவோம்". |

**பாடவேளைகள்** : 02

**கற்றற் பேறுகள்** :

- ஊமம் (Mime) பற்றிக் கருத்துரைப்பார்.
- ஊமச் சித்திரிப்பில் ஈடுபடுவார்.
- நாடகங்களில் ஊமச் சித்திரிப்பைப் பயன்படுத்துவார்.
- ஊமச் சித்திரிப்பு நுட்பங்களைப் பிரயோகிப்பார்.

**பாடத்திட்டமிடல் தொடர்பான அறிவுறுத்தல்கள் :**

- ஊமச் சித்திரிப்புத் தொடர்பாகப் பின்வரும் விடயங்களைக் கலந்துரையாடுங்கள்.
- ஊமம் என்பது வாய்மொழியைப் பயன்படுத்தாது காண்பிய வழி, உணர்ச்சி வழி, உடல்மொழி என்பவற்றுள் உடல் மொழியை அதிகமாகப் பயன்படுத்திப் பார்ப்போருக்கு விளங்கும் வகையில் செய்யப்படும் ஒரு செயலாகும் என்பது.
- ஆகவே, உடல் மொழிப் பயன்பாடு: உடலின் நிலைகள், உடலின் அசைவுகள், சைகைகள், குறியீடுகள் என்பன இங்கு பிரதானமாக அமைகின்றன என்பது.
- ஊமம் மூலம் ஒரு செயலை (Mime Action), ஒரு நிகழ்வை (Mime incident), ஒரு நாடகத்தைச் செய்து காட்டலாம் என்பது.
- ஊமம் மூலம் ஒரு செயலைச் செய்யும் போது (உதாரணம்: தோடம்பழம் ஒன்றை உரித்துச் சாப்பிடுதல்) அதன் சைகைகள் பார்ப்போருக்கு நல்ல விளக்கம் கொடுக்கக் கூடியதாக இருக்க வேண்டும் என்பது.
  - * தோடம்பழத்தின் - அளவு
    - நிறை
    - சுவை
    - மணம்
    - நிறம் என்பனவும்
  - * பழத்தைப் பிடித்திருக்கும் முறை.
  - * ஒவ்வொரு தடவையும் உரிக்கும் போதும் அதன் வடிவம்.
  - * அதனுள்ளே உள்ள விதைகள்.
  - * சாப்பிடும் போது வரும் உணர்வு நிலை.
  - * நடிகரின் நிலை, முகபாவம்.
- ஒரு செயல் அன்றேல் பல செயல்கள் இணைந்ததே நாடகம். ஆகவே ஒவ்வொரு விடயத்திலும் மிக அவதானமாக இருக்க வேண்டும்.
  உதாரணம்:
  - * கதவைத் தட்டிவிட்டுக் கதவைத் திறக்காது உள்ளே போதல்.
  - * தேநீர் அருந்திவிட்டுத் தேநீர்க் கோப்பையை அவதானமின்றிக் கீழே போடுதல்.
  - * பொருள் ஒன்றைப் பாவித்துவிட்டு அடுத்த காட்சியில் அந்தப் பொருள் பற்றிய பிரக்ஞையின்றி நடந்து கொள்ளுதல் மற்றும் பிற.
- நேரடியாகச் சிறிய கைப்பொருள்களைப் பயன்படுத்தாது பெரிய மேசை போன்ற பொருள்களைப் பயன்படுத்தலாம்.

- இசையைத் தேவைக்கேற்றவாறு பயன்படுத்தலாம்.
- இவ் விடயங்களைக் கலந்துரையாடி உள்வாங்கிக் கொண்ட நிலையில் பின்வரும் செயற்பாடுகளைச் செய்யுங்கள்.
- ஏதாவது ஒரு ஊமச் செயற்பாட்டைச் செய்துகாட்டி மாணவர்களுக்கு விளக்கத்தைக் கொடுங்கள்.

  உதாரணம்:
  - * தேநீர் தயாரிப்பதற்கான ஆயத்தம்.
  - * தேநீர் தயாரித்தல்.
  - * தேநீர் பரிமாறுதல்.
  - * தேநீர் அருந்துதல்.
- மாணவர்களைக் குழுக்களாக்கிச் சிறிய பகுதி ஒன்றைக் கொடுங்கள். உதாரணமாக நான்கு குழுக்களாயின்,

  குழு 1 - சந்தை.

  குழு 2 - வகுப்பறை.

  குழு 3 - வைத்தியசாலை.

  குழு 4 - திருவிழா.
- ஒவ்வொரு குழுவும் தத்தமது ஊமச் சித்திரிப்பை மேற்கொள்ள உதவி செய்யுங்கள்.
- ஒரு குழு செய்தது பற்றி ஏனைய குழுக்களுடன் கலந்துரையாடச் சந்தர்ப்பமளியுங்கள்.
- கலந்துரையாடலின் போது விடப்பட்ட தவறுகளைச் சீர்செய்து மீண்டுமொருமுறை செய்வதற்குச் சந்தர்ப்பமளியுங்கள்.
- இம்முறை உங்கள் விளக்கத்தை முன்வையுங்கள்.
- பேசி நடிக்கும் நடிப்பிலிருந்து ஊமச் சித்திரிப்பு வேறுபடுவதை விளக்குங்கள்

## முதன்மைப் பதங்கள்
- பேசாப் பாவனை நாடகம்.
- உடல்நிலை.
- உடல் அசைவு.
- ஊமம்.

## தரவிருத்தி உள்ளீடுகள்
- ஊமச் சித்திரிப்புத் தொடர்பான காணொளி.
- ஊமச் சித்திரிப்புத் தொடர்பான இறுவட்டுக்கள்.
- ஊமச் சித்திரிப்புத் தொடர்பான ஒளிப்படங்கள்.

## கணிப்பீடும் மதிப்பீடும் :
- ஊமம் என்றால் என்ன என்பதை விளக்குவார்.
- ஏனைய செயற்பாடு ஒன்றில் அடங்கியிருக்கும் அம்சங்களை எடுத்துக் கூறுவார்.
- ஊமச் சித்திரிப்பு எவ்வாறு வேறு சித்திரிப்பு முறைகளிலிருந்து வேறுபடுகின்றது என்பதை விளக்குவார்.
- ஊமச் சித்திரிப்பில் ஈடுபடுவார்.
- ஊமச் சித்திரிப்பு நுட்பமுறைகளை நடிப்பில் பயன்படுத்துவார்.

## உசாத்துணைகள் :
- அரங்க ஆட்டம் இயங்குதல் கோட்பாடு - அஷ்வகோஸ்.
- அரங்கு - க. திலகநாதன்

| | | | |
|---|---|---|---|
| தேர்ச்சி | 2.0 | : | கற்பனையை நெறிப்படுத்திச் சுற்றாடல் சார்ந்த அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு ஆக்கம் புரிவார். |
| தேர்ச்சி மட்டம் | 2.2 | : | பாத்திரச் சித்திரிப்பில் ஈடுபடுபவராவார். |
| செயற்பாடு | 2.2 | : | "பாத்திரங்களைச் சித்திரிப்போம்". |

**பாடவேளைகள்** : 02

**கற்றற் பேறுகள்** :

- பாத்திரச் சித்திரிப்பின் முக்கியத்துவத்தினை உணர்ந்திருப்பார்.
- பாத்திரச் சித்திரிப்பு என்பதற்கு விளக்கமளிப்பார்.
- பாத்திரச் சித்திரிப்பில் ஈடுபடுவார்.
- தத்தமது வயது மட்டத்திற்கு அமையப் பாத்திரக் குணாதிசயங்களை அறிந்திருப்பார்.

## பாடத்திட்டமிடல் தொடர்பான அறிவுறுத்தல்கள் :

- மாணவர்கள் பாத்திரம் ஒன்றினைச் சித்திரிப்பதற்குரிய அடிப்படைகளை விளங்கிக் கொள்வதும் பாத்திரப் பண்புகளை அவதானித்துச் சித்திரிக்கப் பயில்வதும் இவ்வலகில் எதிர்பார்க்கப் பெறுகின்றது.
- முதற் பாடவேளையைப் 'பாத்திரப் பரிமாற்றம்' என்கிற அரங்கப் பயிற்சியுடன் ஆரம்பிக்கலாம்.
    * மாணவர்களைப் பொருத்தமான வெளிக்கு அழைத்துச் செல்லலாம்.
    * வட்டமாக அனைவரையும் நிற்கச் செய்யலாம்.
    * ஒருவர் கதாபாத்திரமொன்றின் வகிபாகங்களில் ஒன்றினைச் செய்தபடி வட்டத்தின் உள்ளே நகர வேண்டும்.
    * வட்டத்தில் நிற்கும் எவராயினும் ஒருவருக்குப் பக்கத்தில் வந்து நின்று, தான் செய்துவந்த பாத்திரத்தினை அவருக்கு வழங்குதல் வேண்டும்.
    * அவர், உடனே அப் பாத்திரத்தினைப் பின்பற்றி அதே வகிபாகத்தினைச் சித்திரித்தவாறு நகர்ந்து, பாதித் தூரத்தில் வேறொரு பாத்திரமாக அதனை மாற்றிச் சித்திரிக்க வேண்டும். பிறகு வேறொருவருக்குப் பக்கத்தில் வந்து நின்று, தான் மாற்றம் செய்த சித்திரிப்புடன் பரிமாற்றுதல் வேண்டும். அவர் அதனைத் தொடர்தல் வேண்டும்.
- அரங்கப் பயிற்சியின் நிறைவில் அதன் அனுபவங்களைக் கலந்துரையாடுங்கள்.
    * பாத்திரம் வளர்த்துச் செல்லப்பட்ட முறை
    * ஒரே பாத்திரத்தினை ஒவ்வொருவரும் ஒரே மாதிரியாகச் சித்திரித்தாலும் தனியாள் வேறுபாடுகளின் செல்வாக்கு காணப்பெறுதல் - ஒப்பீடு
    * பாத்திரச் சித்திரிப்பின் போது எதிர்கொள்ளும் சவால்கள்

  போன்ற விடயங்களைக் கலந்துரையாடுங்கள்.
- கலந்துரையாடிய விடயங்களை அடிப்படையாகக் கொண்டு பாத்திரச் சித்திரிப்பு என்றால் என்ன என்பதற்கான எண்ணக்கருவினை விரிவாக்கம் செய்யுங்கள்.
    * நாடக ஆசிரியரினால் எழுத்தில் உருவாக்கப்பெறும் பாத்திரத்தினை நடிகன் தனது உடல், குரல், உணர்ச்சி வெளிப்பாடுகளின் மூலம் நம்பும்படியாக, உயிருள்ள பாத்திரமாக அரங்கில் படைப்பாக்கம் செய்வதே பாத்திரச் சித்திரிப்பாகும்.
- பாத்திரச் சித்திரிப்புக்கான அடிப்படைகளை, முன்வைத்துக் கலந்துரையாடுங்கள்.

- பாத்திரப் பண்புகள் தொடர்பில் தரம் 10 இல் கற்றவற்றை நினைவுபடுத்துங்கள்.
- மேற்படி பாத்திரப் பண்புகளை அகவயப்படுத்துதல்.
  * கொடுக்கப்படும் சூழ்நிலை
  * அச் சூழலில் அந்தப் பாத்திரம் எப்படி இருக்கும் என்ற கற்பனை
  * வாழ்வியலோடு இணைத்து உற்றுநோக்கல்.
  * சொந்த மனவெழுச்சிகள், அனுபவங்களோடு இணைத்து நோக்குதல்.
  * மன இறுக்கமற்றுப் பாத்திரத்தினை வெளிப்படுத்துவதற்குத் தயாரான நிலை.
- பயிற்சிகளின் மூலம் சாத்தியப்பாடாக்குதல்.
  * பண்புகளை இயல்பாக வரச் செய்வதற்கான பயிற்சிகள்.
    உடல், குரல், உணர்வு எனப் படிப்படியாகப் பயிற்சிக் கூடாகப் பாத்திரத்தினை நம்பும்படியாகச் சித்திரித்தல்.
- இரண்டாவது பாடவேளையில் குறிப்பிட்ட பாத்திரங்களையும் அவற்றின் பண்புகளையும் மாணவர்களுக்கு வழங்குங்கள். அந்தப் பாத்திரங்களைச் சித்திரிப்பதற்குத் தூண்டுங்கள்.
  உதாரணம்:
  I. மனிதப் பாத்திரங்கள்
     * ராஜ்குமார் (ஆரொடு நோகேன்).
     * மாயன், மன்னவன் }
     * மாசிலன், மயிலி } புதியதொரு வீடு.
  II. பிராணிப் பாத்திரங்கள்
     * நாய், பூனை.
     * யானை, கரடி.
  III. பொருள்கள்
     * தபாற்பெட்டி, மரம்.
     * ஒலிவாங்கி, கோயில் மணி.
  IV. கற்பனைப் பாத்திரங்கள்
     * வேற்றுக்கிரகவாசி.
     * தேவதை.
- மாணவர்கள் பாத்திரங்களைச் சித்திரிப்பதற்குத் துணைசெய்யும் வகையில், கைப்பொருள், மேடைப்பொருள்கள் போன்றவற்றையும் பயன்படுத்தலாம் என்ற ஆலோசனையையும் வழங்குங்கள்.
  உதாரணம்: பெரியையா (எந்தையும் தாயும்) - கைத்தடி, மாசிலன் (புதியதொரு வீடு) - வலை.
- மாணவர்கள் சித்திரித்த பாத்திரங்கள் பற்றி ஏனைய மாணவர்களின் கருத்துக்களையும் பகிரச் செய்து கலந்துரையாடுங்கள். பாத்திரங்களின் பண்புகளுக்கேற்பச் சொல்லாடல்கள் பேசப்பெறும் முறை
  * செயல்கள் அசைவுகள்
  * உணர்ச்சி பாவங்கள்
  * ஏற்றதான எதிர்வினை வெளிப்பாடுகள்
  * நம்பும்படி அமையும் தன்மை
  * தொடர்ச்சி பேணப்பட்டுக் கட்டி எழுப்பப்படும் பாங்கு

  என்பவற்றை விமர்சியுங்கள்.
- போலச் செய்தல், நால்வகைச் சித்திரிப்புக்கள் என்பன, பாத்திரச் சித்திரிப்பில் முக்கியத்துவம் பெறுவதனை முன்வையுங்கள்.
- வாழ்வில் காணப்பெறும் பாத்திரங்களையும் தனியாள் வேறுபாடுகளையும் அவதானிக்கத் தூண்டுங்கள்.

### முதன்மைப் பதங்கள்
- பாத்திரப் படைப்பு.
- அகவயப்படுத்துதல்.
- நால்வகை அபிநயம்.
- போலச் செய்தல்.

### தரவிருத்தி உள்ளீடுகள்
- நாடக எழுத்துருக்கள்.
- தெரிந்தெடுக்கப்படும், பாத்திரங்களும் அவற்றுக்கான சொல்லாடற் பகுதியும்.
- தேவைப்படும் கைப்பொருள்கள்.

### கணிப்பீடும் மதிப்பீடும் :
- பாத்திரச் சித்திரிப்பு என்ற எண்ணக்கருவை விவரிப்பார்.
- பாத்திரச் சித்திரிப்பின் முக்கியத்துவத்தினை எடுத்துரைப்பார்.
- பாத்திரச் சித்திரிப்பின் நுட்பங்களை விளங்கி, வழங்கப்பெறும் பாத்திரத்தினைச் சித்திரிப்பார்.
- வாழ்வில் வெவ்வேறு பண்புடைய, தனிமனித வேறுபாடுகளையும் இயல்புகளையும் அவதானிக்க முயல்வார்.

### உசாத்துணைகள் :
- அரங்க ஆட்டம் - அ. அஷ்வகோஷ்.
- நாடக வழக்கு - (தொகுப்பு) கந்தையா ஸ்ரீகணேசன்.



| | | | |
|---|---|---|---|
| தேர்ச்சி | 2.0 | : | கற்பனையை நெறிப்படுத்திச் சுற்றாடல் சார்ந்த அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு ஆக்கம் புரிவார். |
| தேர்ச்சி மட்டம் | 2.3 | : | நாடகத்திற்குப் பொருத்தமான சூழமைவுகளைப் படைப்பாக்கம் செய்யக்கூடியவராவார். |
| செயற்பாடு | 2.3 | : | "சூழமைவுகளைப் படைப்பாக்கம் செய்வோம்". |

**பாடவேளைகள்** : 02

**கற்றற் பேறுகள்** :

- சமூகத்தில் பல்வகைச் சூழமைவுகள் நிலவுவதைக் கண்டு கொள்வார்.
- நாடகத்திற்குப் பொருத்தமான சூழமைவுகளைத் தெரிவு செய்வார்.
- சூழமைவுகளை ஆக்கபூர்வமாக முன்வைப்பார்.
- பிரச்சினைகளைச் சம்பவமாகக் கூறுவார்.

## பாடத்திட்டமிடல் தொடர்பான அறிவுறுத்தல்கள் :

- பாடப்பிரவேசம் செய்யும் பொருட்டு, ஒரு சிறிய கதையினைச் சுவாரசியமாகக் கூறுங்கள் அன்றேல் ஒலிப்பேழையில் கேட்க விடுங்கள் (குறைந்தது 3 - 5 நிமிடங்கள்).
- மாணவர்களைக் குழுக்கள் ஆக்குங்கள்.
- குழுக்கள் ஒவ்வொன்றும் தாம் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை அட்டவணைப்படுத்த வழிப்படுத்துங்கள்.
- அட்டவணைப்படுத்தியவற்றில் இருந்து முன்னுரிமை அடிப்படையில் இரண்டு அன்றேல் மூன்று விடயங்களைத் தெரிவுசெய்ய வழிப்படுத்துங்கள்.
- தெரிவுசெய்த பிரச்சினைகளின் சம்பவங்களை முன்மொழியச் செய்யுங்கள்.
- சம்பவங்களைச் சூழவுள்ள விடயங்களை மனதில் நிறுத்தி முன்வைக்கச் செய்யுங்கள்.
- மாணவர்களால் முன்மொழியப்பெற்ற சூழமைவுகளில் இருந்து குழுவிற்கு ஒன்றாகத் தெரிவு செய்ய வழிப்படுத்துங்கள்.
- தெரிவு செய்யப்பெறும் சூழமைவுகளில் பின்வரும் விடயங்களை அவதானியுங்கள்.
    - * சூழமைவுகளில் வெளித்தெரியும் பாத்திரங்கள்.
    - * அவற்றின் இயல்புகள்.
    - * பாத்திரங்களின் மொழிப்பிரயோகம்.
    - * பாத்திரங்களின் எதிர்வினைகள், எதிர்பார்ப்புகள்.
    - * மோதுகை, செயலியக்கம்.
- குழுக்களினால் தெரிவு செய்யப்பெற்ற சூழமைவுகளைப் படைப்பாக்கம் செய்வதற்கு வழிப்படுத்துங்கள்.
- ஒவ்வொரு குழுவின் படைப்பாக்கத்தினையும் ஏனையோர் பார்ப்பதற்குச் சந்தர்ப்பம் அளியுங்கள்.
- தாம் வாழும் சூழலிற் காணப்பெறும் இவ்வாறான சூழமைவுகளைத் தேடியறிவதற்கும் அதனைச் செய்து பார்ப்பதற்கும் ஊக்கமளியுங்கள்.
- சூழமைவுச் சித்திரிப்பு, நடிகர்களுக்குச் சிறந்த பயிற்சியை வழங்கும் என்பதை வலியுறுத்துங்கள்.

## முதன்மைப் பதங்கள்

- படைப்பாக்கம்.
- சூழமைவுகள்.

## தரவிருத்தி உள்ளீடுகள்

- பொருத்தமான இசைக்கருவிகள்.
- மாக்கர்.
- எழுதுதாள்.

## கணிப்பீடும் மதிப்பீடும் :

- சமூகத்தில் தாம் எதிர்கொள்ளும் பிரச்சினைகளைக் கூறுவார்.
- பிரச்சினைகளைச் சம்பவமாகக் கூறுவார்.
- சூழமைவுகளைப் படைப்பாக்கம் செய்வார்.
- சமூகத்தினைக் கூர்ந்து அவதானித்துக் கருத்துக்களை முன்வைப்பார்.
- நாடகத்திற்குப் பொருத்தமான சூழமைவுகளை அறிக்கைப்படுத்துவார்.





| | | | |
|---|---|---|---|
| **தேர்ச்சி** | **2.0** | : | கற்பனையை நெறிப்படுத்திச் சுற்றாடல் சார்ந்த அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு ஆக்கம் புரிவார். |
| **தேர்ச்சி மட்டம்** | **2.4** | : | நாடக எழுத்துருவை ஆக்கக் கூடியவர் ஆவார். |
| **செயற்பாடு** | **2.4** | : | ''சமகால சமூகப் பிரச்சினைசார் நாடக எழுத்துரு ஒன்றை ஆக்குவோம''. |

**பாடவேளைகள்** : 03

**கற்றற் பேறுகள்** :

- சமகால சமூகப் பிரச்சினைகள்சார் கதைகளை வாசிக்கும் ஆர்வத்தை வெளிப்படுத்துவார்.
- எழுத்துருவாக்க நுட்பங்களைப் பிரயோகிப்பார்.
- புதிய அர்த்தப்பாடுகளுடன் நாடக எழுத்துருவை ஆக்குவார்.

## பாடத்திட்டமிடல் தொடர்பான அறிவுறுத்தல்கள் :

- நாடகப் பண்புடைய சூழமைவுகள் வெளிக்கொணரப்படும் வகையில் எந்தையும் தாயும் நாடகத்தின் ஒரு பகுதியை வாசித்துக் காட்டுங்கள்.
- மாணவர்களைக் குழுக்கள் ஆக்குங்கள். ஒவ்வொரு குழுவும் எழுத்துரு எழுதவேண்டும் என்பதை வலியுறுத்துங்கள்.

**படிநிலை I**

- குழுக்கள் ஒவ்வொன்றிற்கும் பல்வேறு விதமான சிறிய கதைப் புத்தகங்கள் அன்றேல் கதைப் பகுதியினை வழங்குங்கள்.
- அவற்றினை வாசித்து ஒரு புத்தகத்தினைத் தெரிவு செய்யச் செய்யுங்கள்.
- நாடக எழுத்துரு ஒன்றை எழுதுவதற்குக் கதை ஒன்று இருத்தல் அவசியமானது என்பதை வலியுறுத்துங்கள்.
- கதையில் நாடகப் பண்புடைய சூழமைவுகளைத் தெரிவுசெய்ய வழிப்படுத்துங்கள்.
- சூழமைவுகளில் தொடக்கம், நடு, முடிவு எனும் தொடர்பை மனதில் நிறுத்தி, சம்பவ ஒருமைப்பாட்டை விளங்கிக் கொள்ள வழிப்படுத்துங்கள்.
- சம்பவ ஒருமைப்பாட்டிற்குள் தர்க்க ரீதியான தொடர்பு இருத்தலின் அவசியத்தை வலியுறுத்துங்கள்.
- நாடக எழுத்துருவிற்கு மோதுகைச் சூழமைவுகள் கட்டாயம் இருத்தல் வேண்டும் என்பதை வலியுறுத்துங்கள்.

**படிநிலை II**

- குழுக்களாக வாசித்துத் தெரிவுசெய்த கதையினை எழுத்துரு ஆக்கும் போது கவனிக்க வேண்டிய விடயங்கள் குறித்துக் கலந்துரையாடுங்கள்.
    * கருப்பொருள், கதை, கதைப்பின்னல் கட்டமைப்பு, மோடி, மொழிப்பிரயோகம்
    * சொல்லாடல், சொல்லாடல் வெளிப்படுத்தி நிற்கும் பாத்திரம் சார்ந்த பௌதிகவியல், சமூகவியல், உளவியற் குணாம்சங்கள்
    * மேடைக்குறிப்புகள் :- பாத்திர நகர்வுகள், செயலியக்கம், உணர்வு, காட்சி விதானிப்பு, காட்சி மாற்றம், களம், மேடைப் பொருள்கள், கைப்பொருள்கள், ஒளி, இசை மற்றும் பிற.

- மேற்படி விடயங்களைக் கருத்திற்கொண்டு தொடக்கம், சிக்கல், வளர்ச்சி, உச்சம் முடிவு என்னும் அமைப்பிற்கு இணங்க நடிப்பதற்குப் பொருத்தமான வகையில் எழுத்துருவை ஆக்க வழிப்படுத்துங்கள்.
- நாடகம் ஒன்றினை எழுதுபவர் நாடகாசிரியர் ஆவார் என்பதைத் தெரிந்து கொள்ளச் செய்யுங்கள்.
- நாடகாசிரியரிடம் சூழலை அவதானிக்கும் திறனும் கற்பனை ஆற்றலும் இருத்தல் சிறந்தது என்பதை அறியச் செய்யுங்கள்.

## முதன்மைப் பதங்கள்

- கருப்பொருள்.
- மோதுகை.
- கதைப்பின்னல்.
- கட்டமைப்பு.
- மேடைக்குறிப்பு.

## தரவிருத்தி உள்ளீடுகள்

- எந்தையும் தாயும் நாடக எழுத்துரு.
- எழுதுதாள்.
- எழுதுகருவி.

## கணிப்பீடும் மதிப்பீடும் :

- நாடக எழுத்துருவில் இருக்க வேண்டிய அடிப்படை அம்சங்களை முன்வைப்பார்.
- கதையானது எழுத்துருவாக மாற்றப்படும் நுட்ப முறைகளைக் கூறுவார்.
- நாடக எழுத்துருவை ஆக்குவார்.
- நாடகப் பாத்திரங்களின் தனிச்சிறப்பான இயல்புகளை ஆராய்ந்து சமூகமயமாகும் திறனை வெளித்தெரியச் செய்வார்.
- நாடக எழுத்துருக்களை நயப்பார்.

## உசாத்துணைகள் :

- நாடக வழக்கு - (தொகுப்பு) கந்தையா ஸ்ரீகணேசன்.
- அரங்கு ஓர் அறிமுகம் - பேராசிரியர் கா. சிவத்தம்பி<br>பேராசிரியர் சி. மௌனகுரு<br>திரு.க. திலகநாதன்.
- நாடக படைப்பாக்க அடித்தளங்கள் - பேராசிரியர் சே. இராமானுஜம்.

| | | | |
|---|---|---|---|
| தேர்ச்சி | 2.0 | : | கற்பனையை நெறிப்படுத்திச் சுற்றாடல் சார்ந்த அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு ஆக்கம் புரிவார். |
| தேர்ச்சி மட்டம் | 2.5 | : | நெறியாள்கையின் செய்முறைகளை விளங்கிச் செயற்படக்கூடியவர் ஆவார். |
| செயற்பாடு | 2.5 | : | "நெறியாள்கையைத் திட்டமிடுவோம்". |

**பாடவேளைகள்** : 01

**கற்றற் பேறுகள்** :

- எழுத்துருவைப் பகுப்பாய்வு செய்வார்.
- எழுத்துரு வாசிப்பு முதல் ஆற்றுகை வரையான திட்டமிடலை மேற்கொள்வார்.
- நெறியாள்கையைத் திட்டமிடும் போது கவனிக்க வேண்டிய அம்சங்களை முன்வைப்பார்.
- திட்டமிட்டுச் செயற்படும் பண்பை வெளிப்படுத்துவார்.

## பாடத்திட்டமிடல் தொடர்பான அறிவுறுத்தல்கள் :

- தேர்ச்சி மட்டம் 2.4இல் எழுதப்பெற்ற நாடக எழுத்துருவுக்குப் பொருத்தமானவாறு நெறியாள்கையைத் திட்டமிடுதலே இங்கு எதிர்பார்க்கப் பெறுவதாகும்.
- இலக்கத்துக்கு ஒன்று சேர்தல் என்னும் அரங்க விளையாட்டின் மூலம் மாணவரைத் தேவைக்கேற்பக் குழுக்களாக்குங்கள்.
- ஒவ்வொரு குழுவுக்கும் ஒவ்வொரு தலைவரைத் தெரிவு செய்யுமாறு அறிவுறுத்துங்கள்.
- 2.4 இல் எழுதப் பெற்ற நாடக எழுத்துரு தொடர்பாகக் கலந்துரையாடுங்கள்.
- கீழ்க்காணும் அட்டவணையைக் குழுநிலையிற் பூர்த்தி செய்யுமாறு அறிவுறுத்துங்கள்.

| | | |
|---|---|---|
| 1. | எழுத்துரு வகை | |
| 2. | தயாரிப்பு மோடி | |
| 3. | ஆற்றுகை நேரம் | |
| 4. | பாத்திர எண்ணிக்கை | |
| 5. | நடிகர் எண்ணிக்கை | |
| 6. | தேவையான மனித வளம் | |
| 7. | தேவையான நிதி வளம் | |
| 8. | இலக்குப் பார்ப்போர் | |
| 9. | ஒத்திகைக் காலம் (மணித்தியாலங்களில்) | |

- கீழ்க்காணும் நெறியாள்கைக்கான திட்டவரைபைத் தயாரிக்க வழிப்படுத்துங்கள்.
  - * பாத்திரங்களும் அவற்றின் பண்புகளும்.
  - * பொருத்தமான பாத்திரத் தெரிவு முறைகள்.
  - * பாத்திரத் தெரிவுக்கான கால அளவு.
  - * நடிகருக்கான பயிற்சிகள்.

* பயிற்சிக் காலம்.
* தேவையான துணைக்கலைகள்.
* இறுதி ஒத்திகைக்கான ஒழுங்கமைப்பு.

**பின்தொடர் பயிற்சி :-**

மேற்படி விடயங்களை உள்ளடக்கிய திட்டவரைபின் அடிப்படையில் ஒரு 'கான் சாட்' தயாரித்து வருமாறு கூறுங்கள்.

## முதன்மைப் பதங்கள்

- திட்டமிடல்.
- எழுத்துரு வாசிப்பு.
- பகுப்பாய்வு.
- இலக்குப் பார்ப்போர்.
- நடிகர் தெரிவு நுட்பமுறைகள்.
- நெறியாள்கை.

## தரவிருத்தி உள்ளீடுகள்

- எழுதுதாள் (A4/ டிமைதாள்).
- எழுதுகருவி.
- சூழமைவுகள் எழுதப்பெற்ற அட்டைகள்.

## கணிப்பீடும் மதிப்படும் :

- நெறியாள்கைத் திட்டமிடலின் போது கவனிக்க வேண்டிய விடயங்களை எடுத்துரைப்பார்.
- நெறியாள்கையைத் திட்டமிடும் திறனை வெளிப்படுத்துவார்.
- எழுத்துருப் பகுப்பாய்வில் ஈடுபடுவார்.
- திட்டமிட்டுச் செயற்படும் பண்பைத் தெரியச் செய்வார்.
- திட்டமிடல் அவசியம் என்பதை ஏற்று நடப்பார்.

## உசாத்துணைகள் :


- தமிழ் அரங்கியல் மரபும் மாற்றங்களும் (அரங்கியற் கட்டுரைகளின் தொகுப்பு) - ப்ரசன்னா இராமசாமி.
- அரங்க ஆட்டம் - அஷ்வகோஷ்.
- ஜீவநதி - அரங்கியற் கட்டுரைகள்.
- பிரதியிலிருந்து மேடைக்கு - கி. பார்த்திபராஜா.
- அரங்கு ஓர் அறிமுகம் ( புதிய பதிப்பு) - பேராசிரியர் கா. சிவத்தம்பி. பேராசிரியர் சி. மௌனகுரு. திரு. க. திலகநாதன்.

| | | | |
|---|---|---|---|
| தேர்ச்சி | 2.0 | : | கற்பனையை நெறிப்படுத்திச் சுற்றாடல் சார்ந்த அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு ஆக்கம் புரிவார். |
| தேர்ச்சி மட்டம் | 2.6 | : | நடிகர் தெரிவை மேற்கொள்ளக் கூடியவர் ஆவார். |
| செயற்பாடு | 2.6 | : | "நடிகரைத் தெரிவு செய்து நடிபாகம் அளிப்போம்". |

**பாடவேளைகள்** : 02

**கற்றற் பேறுகள்** :

- நடிகருக்குரிய திறன்களை வெளிப்படுத்துவார்.
- நடிகர் தெரிவுக்கான நுட்பங்களைக் கையாள்வார்.
- பொருத்தமான பாத்திரத் தெரிவினை மேற்கொள்வார்.
- பல்வேறு பாத்திர வகிபாகங்களுக்கும் தனித்துவமான பண்புகள் இருப்பதை விளங்கிக் கூறுவார்.
- ஒரு எழுத்துருவிலுள்ள பாத்திரங்களுக்குப் பொருத்தமான வராகத் தெரிவு செய்யப்படாத சந்தர்ப்பங்களில், பிறிதொரு நாடகப் பாத்திரத்திற்குப் பொருந்தக்கூடியவர் எனும் நம்பிக்கையைக் கொண்டிருப்பார்.
- நடிகருக்கான தெரிவுமுறைகளை அறிந்திருப்பார்.

## பாடத்திட்டமிடல் தொடர்பான அறிவுறுத்தல்கள் :

- ஆக்கப்பெற்ற நாடக எழுத்துருவுக்குப் பொருத்தமான நடிகர் தெரிவு நுட்ப முறைகளைக் கையாண்டு நடிபாகமளித்தலே இங்கு எதிர்பார்க்கப்பெறுவதாகும்.
- மாணவரை வட்டமாக அமரச் செய்யுங்கள்.
- அவர்களுள் யாராயினும் ஒருவரை நடுவில் அழைத்து அக் குழுவிலுள்ள மாணவர் ஒருவரது குணவியல்புகளைச் செய்து காட்டுமாறு கூறுங்கள்.
- அவர் யாரைப் பாவனை செய்கிறார் என்பதை ஏனைய மாணவரிடம் கேட்டறியுங்கள்.
- அவர்கள் சரியான விடையளித்திருப்பின் கண்டுபிடித்தலுக்கு ஏதுவாயமைந்த காரணிகளை முன்வைக்கச் சந்தர்ப்பமளியுங்கள். இச் சித்திரிப்பு மாணவர் எவரையும் புண்படுத்துவதாக அமைதலாகாது.
- சரியான விடையளிக்கத் தவறியிருப்பின் காரணத்தை வினவித் தொடர்ந்து வேறு சிலரைப் பாவனை செய்யச் சந்தர்ப்பமளியுங்கள்.
- அடுத்து மாணவரை இரு குழுக்களாக்குங்கள்.
- ஒரு குழுவினரிடம் ஆக்கப்பெற்ற எழுத்துருவை வழங்கி, அதிலுள்ள பாத்திரங்களின் பண்புகளை (பௌதிக, உளவியல், சமூகவியல்) அட்டவணைப்படுத்துமாறு கூறுங்கள்.
- மறு குழுவினரிடம் வகுப்பிலுள்ள மாணவர்களின் குணாதிசயங்களை அட்டவணைப்படுத்துமாறு கூறுங்கள்.
- இரண்டையும் ஒரே பார்வையில் காட்சிப்படுத்துவதற்கு வழிப்படுத்துங்கள்.
- பாத்திரப் பண்புகளுக்குப் பெரும்பாலும் பொருத்தக்கூடிய மாணவர் பெயர்களைப் பாத்திரப் பெயர்களுடன் இணையுங்கள். அத்தெரிவிற்கான காரணங்கள் பற்றிக் கேட்டறியுங்கள்.
- அவ்வாறு தொடர்புபடுத்தப்பெற்ற மாணவரை அவ்வப் பாத்திரச் சொல்லாடலை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்துங்கள்.
- எழுதப்பெற்ற நாடக எழுத்துருவின் மோடி, கரு என்பவற்றை விளங்கிக் கொண்டு பாத்திரத்தைச் சித்திரியுங்கள்.
- பாத்திரப் பண்பு எனும் போது பாத்திரத்தின், பௌதிக, உளவியல், சமூகவியற் பண்புகள் கருத்திற் கொள்ளப்பட வேண்டும்.

- பொதுவாகப் பாத்திரத் தெரிவுக்குத்
    * திறந்த தெரிவு
    * மூடிய தெரிவு
    * சல்லடைத் தெரிவு போன்ற முறைகள் பயன்படுத்தப்பெறுகின்றன.
    இது தவிர,
    * ஊமம்
    * தனி மற்றும் கூட்டுப் புதிதளித்தல்கள்
    * எழுத்துரு வாசிப்பு ஆகிய விசேட நுட்பங்களைக் கையாண்டும் பாத்திரத் தெரிவை மேற்கொள்ளலாம்.
    * பாத்திரத் தெரிவின் போது நடிகனது:
        - உடல் அசைவு, மெய்ந்நிலை
        - குரல்
        - கற்பனைத் திறன்
        - நிறம்
        - வயது
        - நடத்தைகள்
        - படைப்பாக்கம் என்பன செல்வாக்குச் செலுத்துகின்றன என்பதை வலியுறுத்துங்கள்.
- எனவே, பாத்திரம் ஏற்று நடிப்பதற்கு நடிகனுக்கு உடல், உள, குரற் பயிற்சிகள் அவசியம் என்பதை மீள வலியுறுத்துங்கள்.
- மேற்படி விடயங்களை மனதிற் கொண்டு முன்னர் தெரிவு செய்யப்பெற்ற சிலரைத் தமக்குரிய பாத்திரங்களை, அதற்கான உணர்வு வெளிப்பாட்டுடன் வாசிப்பதற்குச் சந்தர்ப்பமளியுங்கள்.
- ஒவ்வொரு பாத்திரம் தொடர்பாகவும் கருத்துரைக்க இடமளியுங்கள்.
- பின்னர், ஒரே பாத்திரத்தை வேறு வேறு மாணவர்களால் சித்திரிக்கப்பெறச் சந்தர்ப்பமளியுங்கள்.
- மிகப் பொருத்தமான பாத்திர வெளிப்பாட்டு நடிகரைத் தெரிவு செய்ய இடமளியுங்கள்.
- நடிகர் தெரிவிற்கும் பாத்திரத் தெரிவிற்குமிடையிலான வேறுபாடுகள் பற்றி விளக்கமளியுங்கள்.

## முதன்மைப் பதங்கள்

- நடிகர் தெரிவு நுட்பங்கள்.
- நடிபாகமளித்தல்.
- புதிதளித்தல்.
- ஊமம்.
- பௌதிக, உளவியல், சமூகவியற் பண்பு.

## தரவிருத்தி உள்ளீடுகள்

- எழுதப்பெற்ற நாடக எழுத்துருப் பிரதிகள் சில.
- டிமைன் தாள்.
- மாக்கர்.

## கணிப்பீடும் மதிப்பீடும் :

- பாத்திரத் தெரிவுக்கான நுட்பங்களை அறிந்து கூறுவார்.
- நடிப்பிற்கு அவசியமான திறன்களை வெளிப்படுத்துவார்.
- பொருத்தமான பாத்திரத் தெரிவினை மேற்கொள்வார்.
- படைப்பாக்கத் திறனை வெளிக்காட்டுவார்.
- பல்வேறு பாத்திர வகிபாகங்களை வெளிப்படுத்துவார்.

**உசாத்துணைகள் :**

- நாடகப் படைப்பாக்க அடித்தளங்கள் - பேராசிரியர் சே. இராமானுஜம்.
- ஸ்ரனிஸ்வஸ்கியின் பார்வையில் ஒரு நடிகரின் உருவாக்கம் - கணேசன் மேகநாதன்.
- உடல் அசைவும் உடல்மொழியும் - டாக்டர் என். ஸ்ரீதரன்.
- அரங்க ஆட்டம் - அஷ்வகோஷ்.







| | | |
|---|---|---|
| தேர்ச்சி 2.0 | : | கற்பனையை நெறிப்படுத்திச் சுற்றாடல் சார்ந்த அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு ஆக்கம் புரிவார். |
| தேர்ச்சி மட்டம் 2.7 | : | நாடகத்திற்கேற்பக் காட்சி விதானிப்பை மேற்கொள்ளக் கூடியவராவார். |
| செயற்பாடு 2.7 | : | "நாடகத்திற்கான காட்சி விதானிப்பைச் செய்வோம்". |

**பாடவேளைகள்** : 02

**கற்றற் பேறுகள்** :

- நாடகத்திற்குப் பொருத்தமானவாறு காட்சி விதானிப்பைத் திட்டமிடுதல் தொடர்பாக அறிந்து கூறுவார்.
- நாடகத்திற்குப் பொருத்தமானவாறு காட்சி விதானிப்பைத் திட்டமிடுவார்.
- அரங்க வெளிக்குப் பொருத்தமான காட்சி விதானிப்பைத் திட்டமிடுவார்.
- காட்சி விதானிப்புக்களைச் செய்து பார்ப்பார் (Models).
- காட்சி விதானிப்புத் தொடர்பில் தொழினுட்பத் திறன்களைப் பெற்றிருப்பார்.

## பாடத்திட்டமிடல் தொடர்பான அறிவுறுத்தல்கள் :

- நாடகமொன்றுக்குக் காட்சி விதானிப்பை எவ்வாறு மேற்கொள்ள முடியும் என்பதை விளங்கிக் கொள்வதே இப் பாடத்தினூடே எதிர்பார்க்கப் பெறுவதாகும்.
- செயற்பாடு 1.4 இல் காட்சி விதானிப்பின் நோக்கங்கள், பயன்பாடுகள் என்பன பற்றியும் மோடிகளுக்கேற்பவும் அரங்கவெளிகளுக்கேற்பவும் காட்சி விதானிப்புக்கள் மாறுபடும் என்பது பற்றியும் கற்ற விடயங்களை மீள வலியுறுத்திக் கலந்துரையாடுங்கள்.

## செயல் 01

செயற்பாடு 1.4 இல் ஒவ்வொரு மோடி பற்றியும் வரையப் பெற்ற படங்களைக் குழுக்களிடம் மீள ஒப்படையுங்கள்.

**படி 1**

A4 தாளில் கீறப்பெற்ற காட்சி விதானிப்புப் படங்களை டிமைன் தாளில் வரைவதற்குச் சந்தர்ப்பமளியுங்கள்.

வரையப்பெற்ற படங்கள்

1. யதார்த்த நாடகத்திற்கான காட்சி விதானிப்பு.
2. மனோரதிய நாடகத்திற்கான காட்சி விதானிப்பு.
3. யதார்த்த விரோத நாடகத்திற்கான காட்சி விதானிப்பு.

இவ்வாறாக வரையப்பெற்ற படங்கள் இருந்தால்

1. வீட்டின் வரவேற்பு மண்டபம் - யதார்த்தம்.
2. அரண்மனை சார்ந்த பின்திரைக் காட்சி - மனோரதியம்.
3. பட்ட மரங்களும் எலும்புக் கூடுகளும் - யதார்த்த விரோதம்.

படி 2

இவற்றுக்கான வர்ணங்களைத் தீர்மானித்து அவற்றைப் பூரணப்படுத்த உதவுங்கள்.

படி 3

ஒவ்வொரு குழுவும் வரைந்த படங்களை மீண்டும் தனித்தனியே வெட்டி எடுக்கச் செய்யுங்கள்.

படி 4

பிறிஸ்ரல் போட் ஒன்றில் படச்சட்ட அரங்கை வரைந்து கொள்ளச் செய்யுங்கள் (புறவுரு). அதில் அவரவர் வெட்டி வைத்த உருவங்களை ஒட்டுமாறு கூறுங்கள்.

படி 5

ஒட்டியவற்றைக் காட்சிக்கு வைக்க வழிப்படுத்துங்கள்.

## செயல் 02

படி 1

படச்சட்ட அரங்கின் மாதிரி (Model) ஒன்றை ஆசிரியர் செய்து கொள்ள வேண்டும். [அம்மாதிரி 60cm நீளமானதாயும் (முன்பகுதி), 50cm அகலமானதாகவும் (உட்பகுதி), பிற்பகுதி 50cm உடையதாகவும் இருக்க, உயரம் 30cm உடையதாக இருக்கட்டும்].

படி 2

யதார்த்த நாடகம் ஒன்றின் (உ-ம்: ஒரு பாவையின் வீடு) வரவேற்பு மண்டபத்தில் உள்ள சோபா செற்றி, புத்தக அலுமாரி, வட்டமேசை, கதிரைகள், காட்சிப் பெட்டகம் (Show case) என்பவற்றின் மாதிரிகளைச் செய்வதற்கான உபகரணங்களைப் (கத்தரிக்கோல், மட்டைகள் (Board), அளவுகோல், ஒட்டும் பசை) பெற்றுக்கொள்ளவும்.

படி 3

குழு ஒன்று - சோபா செற்றி, கதிரைகள்.
குழு இரண்டு - புத்தக அலுமாரி, வட்ட மேசை.
குழு மூன்று - காட்சிப் பெட்டகம், கிறிஸ்மஸ் மரம்.
ஆகியவற்றை அமைக்கப்பெற்ற அரங்கின் அளவுப் பிரமாணத்திற்கேற்பச் செய்யவும். (ஒவ்வொரு பொருளினதும் அளவு, ஒத்திசைவு, அளவுப்பிரமாணம், ஒருமைப்பாடு என்பன கவனிக்கப்பெற வேண்டும்).

படி 4

செய்யப்பெற்றவற்றைப் படச்சட்ட அரங்கிற்குப் பொருத்த வாய்ப்பளியுங்கள்.

## முதன்மைப் பதங்கள்

- அளவுப் பிரமாணம் (Proposion).
- ஒத்திசைவு (Harmoney).
- ஒருமைப்பாடு (Unity).

## தரவிருத்தி உள்ளீடுகள்

- காட்சியமைக்கப் பெற்ற நாடகங்களின் படங்கள்.
- காட்சியமைப்பு மாதிரிகைகள்.

**கணிப்பீடும் மதிப்பீடும் :**

- காட்சி விதானிப்புப் பற்றி எடுத்துக் கூறுவார்.
- காட்சி விதானிப்பைத் திட்டமிடுவார்.
- எழுத்துருவையும் வெளியையும் மையமாகக் கொண்டு காட்சி விதானிப்புச் செய்வார்.
- காட்சி விதானிப்பு மாதிரிகைகளைச் செய்து கண்காட்சிக்கு வைப்பார்.
- காட்சி விதானிப்புக்கான தொழினுட்பத் திறனில் வளர்ச்சியைக் காட்டுவார்.

**உசாத்துணைகள் :**


- அரங்கு ஓர் அறிமுகம் - பேராசிரியர் கா. சிவத்தம்பி<br>பேராசிரியர் சி. மௌனகுரு<br>க. திலகநாதன்.
- அரங்கவியல் - முனைவர் சக்திப் பெருமாள்<br>முனைவர் வே. சரோஜா.
- ஒரு பாவையின் வீடு - குழந்தை ம. சண்முகலிங்கம் (தமிழில்).






| | | | |
|---|---|---|---|
| **தேர்ச்சி** | **2.0** | **:** | **கற்பனையை நெறிப்படுத்திச் சுற்றாடல் சார்ந்த அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு ஆக்கம் புரிவார்.** |
| **தேர்ச்சி மட்டம்** | **2.8** | **:** | **மேடைப் பொருள்களைத் தயாரிக்கக் கூடியவர் ஆவார்.** |
| **செயற்பாடு** | **2.8** | **:** | **"மேடைப் பொருள்கள் தயாரிப்போம்".** |

**பாடவேளைகள்** : 02

**கற்றற் பேறுகள்** :

- எழுத்துருவிற்கு அமைய மேடைப் பொருள்களைத் தயாரிக்கும் திறன் பெற்றிருப்பார்.
- கிடைக்கும் வளங்களைப் பயன்படுத்தி மேடைப் பொருள்கள் தயாரிப்பார்.
- வளங்களைக் கொண்டு கற்பனை சார்ந்த புலக்காட்சியைப் படைப்பாக்கம் செய்வார்.

## பாடத்திட்டமிடல் தொடர்பான அறிவுறுத்தல்கள் :

- பல்வேறு விதமான மேடைப் பொருள்களைக் காட்சிப்படுத்தி, அவற்றைப் பார்ப்பதற்குச் சந்தர்ப்பம் அளியுங்கள்.
- மாணவர்களால் எழுதப்பெற்ற நாடக எழுத்துருவை நினைவிற் கொண்டுவரச் செய்யுங்கள்.
- அந்த எழுத்துருவில் அடங்கியுள்ள பல்வேறு சூழமைவுகளை நினைவுபடுத்துங்கள்.
- சூழமைவுகளின் ஊடே தெரியவரும் மேடைப் பொருள்களைக் குறிப்பெடுங்கள்.
- ஏற்கெனவே அறிவிக்கப்பெற்றுக் கொண்டு வரப்பட்ட பொருள்களை கொண்டு மேடைப் பொருள்களைத் தயாரிப்பதற்கு ஆயத்தப்படுத்துங்கள்.
- மேடைப் பொருள்கள் தயாரிப்பதற்கு வேண்டிய கத்தரிக்கோல், கம் (Gum) போன்றவற்றை வழங்குங்கள்.
- நாடக எழுத்துருவிற்கு அமைவாக மேடைப் பொருள்களைத் தயாரித்துக் காட்சிப்படுத்த வழிப்படுத்துங்கள்.
- மேடைப் பொருள்களின் பயன்பாடு பற்றிக் கேட்டறியுங்கள்.
- எளிமையான வகையில் கற்பனையைப் பயன்படுத்தி மேடைப் பொருள்களை ஆக்கமுடியும் என்பதை விளங்கிக் கொள்ளச் செய்யுங்கள்.
- தயாரிக்கப்பட்டுள்ள மேடைப் பொருள்களை நாடகமும் அரங்கியலும் பாட மாணவர்களுக்குக் காட்சிப்படுத்துங்கள்.

## முதன்மைப் பதங்கள்

- மேடைப் பொருள்கள்.
- வளங்கள்.
- கற்பனை.

## தரவிருத்தி உள்ளீடுகள்

- கத்தரிக்கோல்.
- கம் போத்தல்.
- செலோ ரேப்.
- நூல், ஊசி.

**கணிப்பீடும் மதிப்பீடும் :**

- மேடைப் பொருள்களைத் தயாரிப்பதில் விருப்பம் காட்டுவார்.
- நாடக எழுத்துருவில் வெளித்தெரியும் மேடைப் பொருள்களைப் பட்டியற்படுத்துவார்.
- மேடைப் பொருள்களின் பயன்களை எடுத்துக் கூறுவார்.
- பல்வேறு வகையான மேடைப் பொருள்களைச் செய்வார்.
- மேடைப் பொருள்களைத் தயாரிப்பதற்குக் கழிவுப் பொருள்களையும் பயன்படுத்துவார்.







| | | | |
|---|---|---|---|
| **தேர்ச்சி** | **2.0** | **:** | **கற்பனையை நெறிப்படுத்திச் சுற்றாடல் சார்ந்த அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு ஆக்கம் புரிவார்.** |
| **தேர்ச்சி மட்டம்** | **2.9** | **:** | **நாடகத்திற்கான இசை விதானிப்பை மேற்கொள்ளக் கூடியவராவார்.** |
| **செயற்பாடு** | **2.9** | **:** | **"தயாரிக்கப்பெறும் நாடகத்திற்கான இசை விதானிப்பினைத் திட்டமிடுவோம்".** |

**பாடவேளைகள்** : 01

**கற்றற் பேறுகள்** :

- உருவாக்கிய எழுத்துருவுக்குப் பெருத்தமானவாறு இசை விதானிப்பைத் திட்டமிடுவார்.
- நாடகத்துக்குத் தேவையான ஒலி விளைவுகளை உருவாக்குவார்/ கண்டு பிடிப்பார்.
- பாடல்களுக்கு மெட்டமைக்கவும் இசையின் தேவை கருதிய இடங்களை இனங்காணவும் முற்படுவார்.

**பாடத்திட்டமிடல் தொடர்பான அறிவுறுத்தல்கள் :**

- தேர்ச்சி மட்டம் 2.4இல் மாணவர்களால் உருவாக்கப் பெற்ற நாடக எழுத்துருவினை அடிப்படையாக்க கொண்டு அதற்கான இசை விதானிப்பினைத் திட்டமிட்டு அதற்குரிய இசை விதானிப்புப் பாடத்தினைத் (Music designing book) தயாரிக்க வேண்டுமென்பதே இந்த அலகில் எதிர்பார்க்கப்பெறுவது ஆகும்.
- மாணவர்களின் எண்ணிக்கைக்கு அமைவாக அவர்களைக் குழுக்களாகப் பிரியுங்கள்.
- அவர்களால் எழுதித் தயாரிக்கப்பெற்ற நாடகத்தின் காட்சிகளை/ பகுதிகளைக் குழுவுக்கு ஒன்றாக வழங்குங்கள்.
- வழங்கப்பெற்ற நாடகக் காட்சிக்குரிய இசை விதானிப்பினைத் திட்டமிடுவதுடன் அதற்கான இசை விதானிப்புப் பாடத்தினைத் தயாரிக்குமாறு பணியுங்கள்.
- இசையைத் திட்டமிடும் போது:
  * எழுதப்பட்ட நாடகத்தின் மோடி.
  * மையக் கரு.
  * கதைச் சூழ்வு.
  * அழுத்தம் கொடுக்க வேண்டிய இடங்கள்.
  * பாத்திரப் படைப்பு மற்றும் பிற.

  போன்றதான விடயங்களைக் கவனத்தில் கொள்ள வேண்டுமென்பதனை வலியுறுத்துங்கள்.
- திட்டமிட்ட இசைக்கோலங்களைச் செயற்படுத்துவதற்குரிய
  * இசைக்கருவிகள்.
  * ஒலி உருவாக்கப் பொருள்கள்.
  * பாடல்கள்.
  * குரல் ஒலி.

  போன்றவற்றினையும் குறிப்பிடுவதுடன் அவை தெரிந்தெடுக்கப்பெறுவதற்கான காரணங்களையும் பதிவு செய்யப் பணியுங்கள்.
- தயாரிக்கப்பெறும் நாடகத்தில் இசையைப் பிரயோகிக்கும் போதுள்ள நடைமுறைகள், அதற்கு நடிகன் இசைவுபடுதல் போன்றதான விடயங்களையும் ஆற்றுகையைக் குழப்பாது

இசைக்கலைஞர்கள் செயற்பட வேண்டியதன் அவசியம், நாடகக் காட்சியாக்கத்தின் செவிப்புல உருவாக்கத்தில் இசையின் படைப்பாக்கத் திறன் போன்றதான விடயங்களையும் கலந்துரையாடுங்கள்.

உதாரணம்:-

* நடிகர் சொல்லாடலை நிகழ்த்தும் போது, இசை தணிந்து வருதலும் பின்னர் மேலெழுவதுமான இயல்பான நடைமுறையை இனங்காட்டுதல்.
* நடிகரின் சொல்லாடல்கள், இசையை அனுசரித்துப் பேசப்பட வேண்டும் என்ற அவசியத்தினை எடுத்துக்காட்டுதல்.
* இசைக்கு அமைவாக நடிகர் மேடையசைவுக் கோலத்தினை மேற்கொள்வதும் அவ்வசைவுக் கோலத்திற்கு ஏற்ப இசையமைப்புச் செய்வதுமான செயற்பாட்டைப் புரிந்துகொள்ளச் செய்தல்.

- மாணவர்களால் எழுதப்பெற்ற நாடக எழுத்துருவுடன் இணைந்ததான இசைக் குறிப்பினைத் தயாரிப்பதற்கு மாணவர்களை வழிப்படுத்துங்கள்.

  உதாரணம்:-

**இசைக் குறிப்பு**

- காட்சி :-
- சம்பவங்கள் :-
- எழும் உணர்வுகள் :-
- பயன்படுத்தும் இசை :-
- பயன்படுத்தும் இசைக்கருவிகள் :-
- ஒலி விளைவுகள் :-

| காட்சி | இசைக் குறிப்பு | இசைக்கருவி |
|---|---|---|
| (உடையார் மிடுக்கு) உடையார்:- 'தங்கச்சி நேரமாச்சுது, கெதியா ஆயத்தம் பண்ணும்'. | - அவசரத்தினை வெளிப் படுத்தும் ஒலிகள்.<br>- வாகனச் சத்தம். | - தட்டுமுட்டுக்களை அசைத்தல். |

- தயாரித்த இசைக் குறிப்பினை விவரிக்கச் செய்யுங்கள்.
- ஏனைய மாணவர்களின் அபிப்பிராயங்களையும் முன்வைக்கத் தூண்டுங்கள்.
- திட்டமிடப்பெற்ற இசைக்கோலம் எந்தளவுக்குப் பயன்படக் கூடியதென்பதைக் கலந்துரையாடி மதிப்பிடுங்கள்.
  * கிடைக்கக்கூடிய இசைக்கருவிகள்/ ஒலி விளைவுகள்.
  * அவற்றின் பொருத்தமான தன்மைகள்.
  * நாடகத்தின் கனதியை இசை அதிகரிப்பதாக அமைந்துள்ள தன்மை/ விதம்.
  * நாடகத்தின் வெற்றிக்கு இசைப்பின்னணி பங்களிப்பதாக உள்ளதா?
  * கிடைக்கக்கூடியதும் பொருளாதாரச் செலவு குறைந்ததுமான குரலிசையின் பயன்பாடு.
  * நாடகத்தின் மனநிலையைச் சிருஷ்டிப்பதில் திட்டமிட்ட இசைக்கோலம் உதவக் கூடியதா? என்பது போன்றவை.

## முதன்மைப் பதங்கள்

- அரங்க இசை
- இசைக் குறிப்பு
- பின்னணி இசை
- மையக்கரு.

## தரவிருத்தி உள்ளீடுகள்

- தேர்ச்சி மட்டம் 2.4இல் எழுதப்பெற்ற நாடக எழுத்துரு.
- இசைக் குறிப்புக்கான அட்டவணை.

## கணிப்பீடும் மதிப்பீடும் :

- தாம் உருவாக்கிய நாடகத்துக்கான இசைவிதானிப்பைத் திட்டமிடுவார்.
- நாடகத்துக்குத் தேவையான ஒலி விளைவுகளை உருவாக்குவார்.
- இசைக் குறிப்பு ஒன்றினைத் தயாரிப்பார்.
- இசையைத் திட்டமிடுவதிலுள்ள சவால்களை உணர்ந்து கொள்வார்.
- இசையமைப்பாளரின் பணிகளைக் கூறுவார்.

## உசாத்துணை நூல்கள் :

- அரங்க ஆட்டம் - அஷ்வகோஷ்.
- அரங்கவியல் - முனைவர் சக்திப் பெருமாள்
  முனைவர் வே. சரோஜா.
- ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி - தரம் 11, நாடகமும் அரங்கியலும் (2008).





| | | |
|---|---|---|
| **தேர்ச்சி 2.0** | : | **கற்பனையை நெறிப்படுத்திச் சுற்றாடல் சார்ந்த அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு ஆக்கம் புரிவார்.** |
| **தேர்ச்சி மட்டம் 2.10** | : | **நாடகத்துக்கான அசைவியக்கங்களை வடிவாக்கம் செய்யக் கூடியவராவார்.** |
| **செயற்பாடு 2.10** | : | **"நாடகத்திற்கான அசைவியக்கங்களை வடிவாக்கம் செய்வோம்".** |

**பாடவேளைகள்** : 02


**கற்றற் பேறுகள்** :

- எழுத்துருவுக்குப் பொருத்தமான அசைவியக்கங்களைத் திட்டமிடுவார்.
- நாடக எழுத்துருவிற்கு அமைய அசைவியக்கங்களை வடிவமைப்பார்.
- சிறிய காட்சி ஒன்றுக்கான நகர்வு வடிவமைப்பை (Blocking) மேற்கொள்வார்.
- நாடகமொன்றின் காட்சியாக்கத்திற்கான வெற்றியில் அசைவுகளின் முக்கியத்துவத்தினை உணர்வார்.

## பாடத்திட்டமிடல் தொடர்பான அறிவுறுத்தல்கள் :

- மாணவர்களினால் தேர்ச்சி மட்டம் 2.4இல் எழுதப்பெற்ற நாடக எழுத்துருவுக்குரிய அசைவியக்கங்களைத் திட்டமிடுவதும் நகர்வு வடிவமைப்பினை விளங்கிக் கொள்வதும் இவ்வலகில் எதிர்பார்க்கப் பெறுகின்றது.
- முன்னைய பாட அலகுகளில் அசைவியக்கங்களை வடிவாக்கம் செய்த அனுபவங்களை நினைவுபடுத்துங்கள்.
- மாணவர்களைக் குழுக்களாகப் பிரியுங்கள், அவர்கள் எழுதிய நாடக எழுத்துருவின் காட்சிகளை / பகுதிகளை ஒவ்வொரு குழுவுக்கும் வழங்குங்கள்.
- வழங்கப்பெற்ற காட்சிகளுக்கான அசைவியக்கங்களைச் செய்து பார்த்துத் திட்டமிடப் பணியுங்கள்.
- திட்டமிடலுக்கு வேண்டிய ஆலோசனைகளை வழங்குங்கள்.
    * ஒவ்வொரு பாத்திரத்தினதும் அசைவுகள், அதாவது உள் நுழைவு - வெளியேறுகை - கருமமாற்றுகை - நிலை ஆகியனவற்றைத் தீர்மானித்தல்.
    * இந்த அசைவியக்கம் கவர்ச்சிகரமானதாகவும் பார்ப்போரைக் கவரத்தக்கதாகவும் அமைதல்.
    * ஒரு நடிகன் இன்னொரு நடிகனை மறைக்காதவாறும் பாத்திர ஊடாட்டங்களின் பொருத்தமான நிலைகளிற் சந்திக்கத்தக்கவாறும் அசைவுகளைத் தீர்மானித்தல்.
    * குழுவாக அசைவியக்க வடிவாக்கங்களைத் திட்டமிடும் போது, காலம், லயம், தாளப்பிரமாணங்கள், பௌதிக வெளிப்பாடு போன்ற பலவற்றையும் கவனத்திற் கொண்டு திட்டமிடுதல்.
    * ஓவியத்திலே எவ்வாறு கோடுகள் முக்கியத்துவம் பொருந்தியவையாகக் காணப்பெறுகின்றனவோ அதுபோலவே நாடகத்திலும் நகர்வுகள் முக்கியத்துவம் பெறுகின்றன என்பதனை விளங்கிக் கொண்டு திட்டமிடுதல்.
- மாணவர்கள் குழுவாகத் திட்டமிட்ட அசைவியக்கங்களை நிகழ்த்தப் பணியுங்கள். நிகழ்த்தப்பெற்ற அசைவுகள் தொடர்பான கருத்துக்கள், விமர்சனங்களை ஏனைய மாணவர்களின் கருத்துக்களுடன் இணைத்து முன்வையுங்கள்.

- இரண்டாவது பாடவேளையில், குறிப்பிட்ட சிறிய காட்சி ஒன்றுக்கான நகர்வு வடிவமைப்பினை/ வரைவுபடுத்தலை (Blocking) மாணவர்கள் மேற்கொள்வதற்குப் பயிற்சி வழங்குங்கள்.
- அரங்கிற்கான அசைவுகளை வினைத்திறனுடன் மேற்கொள்வதற்கும் அரங்க வெளியில் அசைவுகளைச் சிறப்பான முறையில் நிகழ்த்துவதற்குரிய திட்டமிடலை மேற்கொள்ளவும் நகர்வு வடிவமைப்பு/ வரைவுபடுத்தல் மேற்கொள்ளப்பெறுகின்றது என்பதனை விவரித்துக் கலந்துரையாடுங்கள்.
- மாதிரி நகர்வு வடிவமைப்பினைக் காட்சிப்படுத்துங்கள்.




A → 1 → 2 → 3 → 4
B → 1 → 2 → 3 → 4

- ஒவ்வொரு மாணவரையும் நாடகத்தின் சிறிய காட்சி ஒன்றுக்கான நகர்வு வடிவமைப்பினை ஓர் ஒப்படைச் செயற்பாடாக மேற்கொள்வதற்குப் பணியுங்கள்.

## முதன்மைப் பதங்கள்

- வரைவுபடுத்தல்
- அசைவியக்கம்
- நகர்வுகள்
- பாத்திர ஊடாட்டம்.

## தரவிருத்தி உள்ளீடுகள்

- இசைக்கருவிகள்.
- இறுவட்டு.
- மாதிரி வரைவு.

## கணிப்பீடும் மதிப்பீடும் :

- அசைவியக்கங்களை வடிவமைப்பார்.
- தாம் எழுதிய நாடகத்துக்கான அசைவியக்கங்களைத் திட்டமிடுவார்.
- அசைவுகள் திட்டமிடப்பெறும் போது கவனிக்க வேண்டிய விடயங்களில் தெளிவைப் பெற்றிருப்பார்.
- நகர்வு வடிவமைப்பினை (Blocking) மேற்கொள்வார்.
- நாடகமொன்றின் கலைத்துவ முழுமையில் அசைவுகளுக்கு அதிக பங்கிருப்பதனை உணர்வார்.

**உசாத்துணைகள் :**

- அரங்க ஆட்டம் - அஷ்வகோஷ்.
- அரங்கு ஓர் அறிமுகம் (திருத்திய இரண்டாம் பதிப்பு - 2014) - பேராசிரியர் கா. சிவத்தம்பி - பேராசிரியர் சீ. மௌனகுரு - க. திலகநாதன்.

| | | |
|---|---|---|
| **தேர்ச்சி** | **2.0 :** | **கற்பனையை நெறிப்படுத்திச் சுற்றாடல் சார்ந்த அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு ஆக்கம் புரிவார்.** |
| **தேர்ச்சி மட்டம்** | **2.11 :** | **நாடகத்திற்குப் பொருத்தமான வேட உடைகளின் மாதிரி உருக்களை வடிவமைக்கக் கூடியவர் ஆவார்.** |
| **செயற்பாடு** | **2.11 :** | **"வேட உடைகளின் மாதிரிகைளைத் தயாரிப்போம்" (Samples).** |

**பாடவேளைகள்** : 02

**கற்றற் பேறுகள்** :

- நாடகப் பாத்திரங்களுக்குப் பொருத்தமான வேட உடைகளைத் திட்டமிடுவார்.
- திட்டமிடும் போது கவனிக்க வேண்டிய விடயங்களைப் பட்டியலிடுவார்.
- துணிகளின் இழைமானம் (Texture), நிறம், கோடுகள் என்பனவற்றைக் கவனித்து வேட உடைகளைத் திட்டமிடுவார்.
- வேட உடைகளை அணிந்து நடிபாகமாடுவார்.

**பாடத்திட்டமிடல் தொடர்பான அறிவுறுத்தல்கள் :**

ஏற்கெனவே வேட உடை பற்றிக் கற்பித்த விடயங்களை மீள வலியுறுத்திக் கலந்துரையாடலில் ஈடுபடுங்கள்.

- வேட உடைகள் பாத்திரமொன்றைச் சித்திரிக்க நடிகனுக்கு உதவும் துணைக் கலைகளுள் ஒன்று என்பது.
- வேட உடைகள் நாடகத்திற் பெரும்பங்காற்றுகின்றன என்பது.
- வேட உடைகளைத் தயாரிக்கும் போது நாடக மோடிக்கேற்பத் தயாரிக்க வேண்டும் என்பது
- உடைகள் பாத்திரங்களுக்கேற்றதாக அன்றேல் செய்து காட்டப்பெறும் பாத்திரங்களை நினைவுபடுத்துவதாக இருத்தல் வேண்டும் என்பது.
- நாடகக் கரு மற்றும் கதைக்கேற்ற வகையிலும் ஏனைய ஒளி, காட்சி, ஒப்பனை என்பவற்றுக்கு ஏற்ற வகையிலும் வேட உடைகள் அமைய வேண்டும் என்பது.
- நாடகப் பாத்திரங்கள் மூவகைப் பின்னணியுடன் இணைந்து வேட உடை தரித்திருக்கும் என்பது (மூவகைப் பின்னணி - பௌதிகவியல், உளவியல், சமூகவியல்).
- பாத்திரத்தின் வயது, பால், இனம், அந்தஸ்து எனப் பல விடயங்களை அனுசரித்து வேட உடை தயாரிக்க வேண்டும்.

  உதாரணம்:-

  யதார்த்த நாடகமாயின், கீழ் மத்தியதர வர்க்க முதியவர் ஒருவருக்குத் தனியே வேட்டி அன்றேல் அவர் கட்டும் சாரம் (லுங்கி), விரும்பினால் மேலங்கியுடன் துண்டு அணிதல்.

  யதார்த்த விரோத நாடகமாயின், புரட்சிப் பெண் ஒருவரின் உடைக்குப் புரட்சியைக் காட்டக் கீழே சாம்பல் நிற உடையும் சிவப்பு அன்றேல் செம்மஞ்சள் நிற மேற் சட்டையும் அணியலாம்.

**பின்தொடர் பயிற்சி :-**

துணிகள், கடதாசிகள், மட்டைகள் என்பவற்றைக் கொண்டு ஏதாவது ஒரு வகை நாடகத்திற்கு அன்றேல் முன்னைய அலகில் எழுதப்பெற்ற நாடகத்தில் இடம்பெற்ற பாத்திரங்களுக்கு ஏற்ற வேட உடைகளை வடிவமைக்குக.

**குழு வேலைத்திட்டம்**

1. வயோதிபர்களுக்கான வேட உடைகள்.
2. விஞ்ஞானிகளுக்கான வேட உடைகள்.
3. மீனவர்களுக்கான வேட உடைகள்.
4. களைக் கூத்தாடிகளுக்கான வேட உடைகள்.

**படிமுறை**

1. தேவையான மனித உருவங்களை வரைந்துகொள்க.
2. அவற்றுக்கு வர்ணம் தீட்டுக.
3. பாத்திரங்களுக்கான வேட உடைகளைத் தனியே பிரித்து அளவுப் பிரமாணத்திற்கேற்ப வரைக.
4. தேவையான வர்ணம் தீட்டுக.
5. அளவாகத் தீட்டப்பட்ட படங்களை வைத்துத் துணிகளை வெட்டுக.
6. வெட்டிய துணிகளைச் சரியான அளவுப்பிரமாண அடிப்படையில் வைத்துத் தைக்குக.

**குழு வேலைத்திட்டம்**

ஒவ்வொரு குழுவும் திட்டமிட்ட வேட உடைகளைக் காட்சிக்கு வைத்துக் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்க.

## முதன்மைப் பதங்கள்

- வேட உடை மாதிரிகை.
- இழைமானம்.

## தரவிருத்தி உள்ளீடுகள்

- திட்டமிடுவதற்குரிய காகிதாதிகள்.
- வேட உடைக்கெனக் கொண்டுவரப்பட்ட துணிகள்.
- வேட உடை தயாரிக்கப்பெறும் பொருள்கள் .
- பல்வேறு வேட உடைகள்.

## கணிப்பீடும் மதிப்பீடும் :

- பாத்திரங்களுக்குப் பொருத்தமான வேட உடைகளைத் திட்டமிடுவார்.
- திட்டமிடலின் போது அவதானிக்க வேண்டிய விடயங்களைப் பட்டியலிடுவார்.
- குழுக்களாகத் தயாரிப்பில் ஈடுபடுவார்.
- வேட உடைகளைத் தயாரிப்பார்.
- வேட உடைகளை அணிந்து நடித்த பின், அது பற்றிக் கலந்துரையாடலில் ஈடுபடுவார்.

**உசாத்துணைகள் :**

- அரங்க ஆட்டம் - அஷ்வகோஷ்.
- அரங்கு ஓர் அறிமுகம் (திருத்திய இரண்டாம் பதிப்பு - 2014) - பேராசிரியர் கா. சிவத்தம்பி, பேராசிரியர் சி. மௌனகுரு - க. திலகநாதன்.





| | | |
|---|---|---|
| **தேர்ச்சி** | **2.0 :** | **கற்பனையை நெறிப்படுத்திச் சுற்றாடல் சார்ந்த அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு ஆக்கம் புரிவார்.** |
| **தேர்ச்சி மட்டம்** | **2.12 :** | **நாடகத்திற்குப் பொருத்தமான ஒப்பனையை மேற்கொள்ளக் கூடியவர் ஆவார்.** |
| **செயற்பாடு** | **2.12 :** | **"ஒப்பனையைத் திட்டமிடுவோம்"** |

**பாடவேளைகள்** : 02

**கற்றற் பேறுகள்** :

- ஒப்பனையை மேற்கொள்வற்குத் திட்டமிடும் திறனை வெளிப்படுத்துவார்.
- ஒப்பனை செய்வதற்கு நுட்பங்களைப் பயன்படுத்துவார்.
- எதிர்காலத்தில் ஒப்பனை சார்ந்து தொழில் வாய்ப்பினைப் பெற்றுக் கொள்ளக் கூடிய ஆர்வத்தினைக் காட்டுவார்.

## பாடத்திட்டமிடல் தொடர்பான அறிவுறுத்தல்கள் :

ஏற்கெனவே ஒப்பனை பற்றிக் கற்பித்த விடயங்களை மீளவலியுறுத்திக் கலந்துரையாடலில் ஈடுபடுங்கள்.

- ஒப்பனையின் முக்கியத்துவத்தை விளங்கிக் கொண்டு தேர்ச்சி மட்டம் 2.4இல் எழுதப் பெற்ற நாடக எழுத்துருவிற்கு அமைவாக ஒப்பனையைத் திட்டமிட வழிப்படுத்துங்கள்.
  * ஒப்பனை என்பதன் கருத்து விளக்கம்.
  * ஒப்பனை செய்யப்படுவதன் நோக்கம்.
  * ஒப்பனை செய்யப் பயன்படும் பொருள்கள்.
  * ஒப்பனை செய்யப்படும் முறைகள்.
  * ஒப்பனையின் வகைகள்.
- நாடக எழுத்துருவில் உள்ள பாத்திரங்களை நினைவுபடுத்துங்கள்.
- அவற்றிற்கான ஒப்பனை எவ்வாறு இருக்கும் என்பதைக் கற்பனை மூலம் காண வழிப்படுத்துங்கள்.
- எழுத்துரு, யதார்த்தம் சார்ந்ததாயின் அதில் வரும் பாத்திரங்களை ஒத்த வாழ்வியற் பாத்திரங்களை நினைவு கூர்ந்து முன்மொழியச் செய்யுங்கள்.
- இருவர் இருவராகச் சேர்ந்து தாம் கற்பனையிற் கண்ட பாத்திரத்தினை ஒப்பனை செய்வதற்கு வழிப்படுத்துங்கள். (ஒப்பனைப் பொருள்கள் மேசையில் வைக்கப்பட்டிருத்தல் முக்கியம் என்பதைக் கவனத்திற் கொள்க).
- செய்யப்பெற்ற ஒப்பனை தொடர்பாகக் கருத்துக்கள் வழங்கச் சந்தர்ப்பம் அளியுங்கள்.
- ஒப்பனை செய்து கொண்ட அனைவரையும் காட்சிப்படுத்துங்கள்.
- பின்னர் நீங்கள் ஒப்பனையைச் செய்து காட்டுங்கள்.
- ஒப்பனைகள் யாவும் எழுதப்பெற்ற நாடக எழுத்துருவிற்கு அமைவாக இருத்தல் வேண்டும் என்பதைக் கவனத்தில் கொள்ளுங்கள்.

## முதன்மைப் பதங்கள்

- திட்டமிடல்.
- நுட்பங்கள்.

## தரவிருத்தி உள்ளீடுகள்

- ஒப்பனைப் பொருள்கள்.
- ஒப்பனை தொடர்பான ஒளிப்படங்கள்.

## கணிப்பீடும் மதிப்பீடும் :

- ஒப்பனைப் பொருள்களைத் தெரிந்திருப்பார்.
- ஒப்பனையைச் செய்வதற்கான நுட்பங்களைக் கூறுவார்.
- யதார்த்த வாழ்க்கையின் ஒப்பனையையும் நாடகப் பாத்திர ஒப்பனையையும் ஒப்பிட்டு நோக்குவார்.
- ஒப்பனையைத் தொழில் சார்ந்து விருத்தி செய்யும் ஆர்வத்தை வெளிப்படுத்துவார்.
- ஒப்பனையை மேற்கொள்வார்.

## உசாத்துணைகள் :

- நாடகத் தயாரிப்பு - இ. குணசீலன்.
- தெருக்கூத்து ஒப்பனை - கோ. பழனி.
- ஈழத்து ஒப்பனைக் கலை - இ. பாலசுந்தரம்.
- அரங்கு ஓர் அறிமுகம் - பேராசிரியர் கா. சிவத்தம்பி
  பேராசிரியர் சி. மௌனகுரு
  க. திலகநாதன்.



| | | |
|---|---|---|
| தேர்ச்சி 2.0 | : | கற்பனையை நெறிப்படுத்திச் சுற்றாடல் சார்ந்த அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு ஆக்கம் புரிவார். |
| தேர்ச்சி மட்டம் 2.13 | : | நாடகத்திற்குப் பொருத்தமானவாறு ஒளிவிதானிப்பை மேற்கொள்ளக் கூடியவர் ஆவார். |
| செயற்பாடு 2.13 | : | ஒளி விதானிப்பைத் திட்டமிடுவோம். |

**பாடவேளைகள்** : 02

**கற்றற் பேறுகள்** :

- ஒளிவிதானிப்பின் முக்கியத்துவத்தை விளங்கிக் கூறுவார்.
- ஒளி விதானிப்புச் சாதனங்களைக் கையாள முனைவார்.
- கிடைக்கும் வளங்களிலிருந்து ஒளிவிதானிப்புச் செய்ய முன்வருவார்.
- தொழில் வாழ்க்கைக்கான தொழினுட்பத் திறன்களைப் பெற்றுக் கொள்ளக் கூடிய தன்மையை உணர்ந்திருப்பார்.
- நாடகத்திற்கு அமைவாக ஒளிவிதானிப்பிற்கான திட்டத்தைத் தயாரிப்பார்.

## பாடத்திட்டமிடல் தொடர்பான அறிவுறுத்தல்கள் :

- ஒளிவிதானிப்பின் முக்கியத்துவத்தை விளங்கி, நாடகத்துக்குப் பொருத்தமானவாறு ஒளிவிதானிப்பைத் திட்டமிடுவதே இங்கு எதிர்பார்க்கப் பெறுவதாகும்.
- எளிய மின்சுற்று ஒன்றைப் பயன்படுத்திப் பல்வேறு கோணங்களில் ஒளி காலும் இருவாயி (LED Bulb) இனைப் பாவித்து ஒளி பாய்ச்சி அவதானிக்கச் செய்யுங்கள்.
- அது தொடர்பாகக் கலந்துரையாடுங்கள்.
- நாடகப் பிரதியை வாசித்து நாடகப் போக்கு, காட்சிகளின் சாத்தியப்பாடுகளை விளங்கிக் கொள்ள இடமளியுங்கள்.
- நாடகத் தயாரிப்பு வகை, நடிகர்கள், அவர்கள் ஏற்கும் பாத்திரங்கள் என்பவற்றை மீள நினைவிற் கொண்டு வருமாறு அறிவுறுத்துங்கள்.
- அடுத்து, நாடக மேடை அமைப்பு, அதில் ஒளியமைப்பதற்கான சாத்தியப்பாடு, உள்ளரங்கா அன்றேல் வெளியரங்கா, பார்வையாளர் அமரும் இடம், அங்கே கிடைக்கத்தக்க வசதிகள் என்பவற்றைக் குறித்துக் கொள்ள வழிப்படுத்துங்கள்.
- மேற்படி பின்னணியின் அடிப்படையில் ஒவ்வொருவரும் தனித்தனியாக மேடை அமைப்பின் அடிப்படைத் திட்டத்தை ஒரு வரைபடத்தில் வரைந்து, முக்கியமான பகுதிகளைக் குறித்து வைக்குமாறு கூறுங்கள்.
- எழுத்துருவின் யாதேனும் ஒரு பகுதிக்கு எவ்வாறு ஒளியமைப்பது என்பது தொடர்பான ஒளி நினைவுக் குறிப்பு (Lighting Que) ஒன்றைத் தயாரிப்பதற்கு வழிப்படுத்துங்கள்.
- மேற்படி ஒளி நினைவுக் குறிப்பைத் தயாரிக்கும் போது பின்வரும் மூவகைக் குறிப்புக்களையும் உள்ளடக்கியதாக அமைதல் நன்று.

  * **செயற்பாட்டுக் குறிப்பு**

  நடிகர் வரவு, வெளியேறுகை, குறிப்பிட்ட செயல் அன்றேல் இசை ஆகியவற்றைக் கருத்திற் கொண்டு ஒளி நினைவுக் குறிப்பு எழுதப்பெறும்.

  * **வரிக்குறிப்பு**

  நடிகனது சொல்லாடலில் இடம்பெறும் சொல் அன்றேல் வரிக்கு ஒளியில் செய்யப்படும் மாற்றம் வரிக்குறிப்பு ஆகும்.

* **நேரக் குறிப்பு**
  காட்சி மாறுதல் நேரத்தைக் கணக்கிட்டு நேரக் குறிப்பின் அடிப்படையில் தயாரிக்கப்பெறுவது
- மின்கலம்,ஒளிகாலும் இருவாயி (LED Bulb), மின்குமிழ் என்பவற்றைப் பயன்படுத்தித் தாம் தெரிவு செய்த எழுத்துருப் பகுதியின் யாதாயினுமொரு காட்சிக்கு மாதிரி ஒளி விதானிப்புச் செய்யுமாறு கூறுங்கள்.
- ஒவ்வொருவரும் தயாரித்த மாதிரி ஒளி விதானிப்புத் திட்டம் தொடர்பாகக் கலந்துரையாடுங்கள்.
- தேர்ச்சி மட்டம் 1.9இல் கற்றுக்கொண்ட விடயங்களை இவ்விடத்தில் மீள வலியுறுத்துங்கள்.

## முதன்மைப் பதங்கள்

- ஒளி விதானிப்பு.
- திட்டமிடல்.
- ஒளி நினைவுக் குறிப்பு.

## தரவிருத்தி உள்ளீடுகள்

- A4 தாள்.
- மின்கலம்.
- (ஒளிகாலும் இருவாயி) LED Bulb.
- மின்குமிழ்.

## கணிப்பீடும் மதிப்பீடும் :

- ஒளி விதானிப்பின் முக்கியத்துவத்தை விளங்கிக் கூறுவார்.
- நாடகத்துக்குப் பொருத்தமானவாறு ஒளி விதானிப்பைத் திட்டமிடுவார்.
- கிடைக்கக்கூடிய வளங்களிலிருந்து ஒளி விதானிப்பை மேற்கொள்ளக்கூடிய திறன் பெற்றிருப்பார்.
- மின்சுற்றுத் தொடர்பான அடிப்படை அறிவினைப் பெற்றிருப்பார்.
- ஒளி விதானிப்பை மேற்கொள்வதில் ஆர்வம் காட்டுவார்.

## உசாத்துணைகள் :


- Theatre - Phyllis Hartnoll.
- ஒளியின் வெளி - பதிப்பாசிரியர் செ. ரவீந்திரன்.
- தமிழ் அரங்கியல் மரபும் மாற்றங்களும் - ப்ரசன்னா இராமசாமி
  (அரங்கில் ஒளி எனும் கட்டுரை)
- ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி தரம் 11 - நாடகமும் அரங்கியலும், 2008.

| | | |
|---|---|---|
| தேர்ச்சி | 3.0 : | நாடகமும் அரங்கக் கலைகளும் தொடர்பான கொள்நெறிகளை அனுசரித்துச் செய்முறைகளில் ஈடுபடுவார். |
| தேர்ச்சி மட்டம் | 3.1 : | நடிப்பிற்கான அரங்கப் பயிற்சிகளைப் பெற்றவர் ஆவார். |
| செயற்பாடு | 3.1.1: | "அரங்கப் பயிற்சிகளின் முக்கியத்துவத்தினை விளங்கிக் கொள்வோம்". |

**பாடவேளைகள்** : 02

**கற்றற் பேறுகள்** :

- அரங்கப் பயிற்சிகளின் அவசியத்தினை உணர்ந்திருப்பார்.
- அடிப்படை அரங்கப் பயிற்சிகளை இனங்கண்டிருப்பார்.
- அரங்கப் பயிற்சிகள் மூலம் சிறந்த நடிப்பாற்றலை வெளிப்படுத்தலாம் என்பதை உணர்ந்திருப்பார்.
- அரங்கப் பயிற்சிகளில் ஈடுபடுவார்.

## பாடத்திட்டமிடல் தொடர்பான அறிவுறுத்தல்கள் :

- மாணவர்களைத் திறந்த வெளியான ஓர் இடத்துக்கு அழைத்துச் செல்லுங்கள்.
- பாதணிகளைக் கழற்றி வைக்குமாறு கூறுங்கள்.
- அவர்களை வட்டவடிவமாக நிற்கச் செய்யுங்கள்.
- பின்வரும் நிபந்தனைகளுக்கு ஏற்ப அவர்களைச் செயற்படுத்துங்கள்.
    - ஒன்று என்னும் போது நடத்தல் வேண்டும்.
    - மூன்று என்று சொன்னால் ஓடுதல் வேண்டும்.
    - ஐந்து என்கையில் இருத்தல் வேண்டும்.
    - ஏழு என்று சொல்லத் துள்ளுதல் வேண்டும்.
    - ஒன்பது எனின் தவழுதல் வேண்டும்.
- இச் செயற்பாடானது உடலுக்கும் குரலுக்கும் உள்ளத்துக்கும் எவ்வாறான பயிற்சிகளைத் தந்தன என்பது பற்றி மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள்.
- மாணவர்களை மூன்று குழுக்களாகப் பிரியுங்கள்.
- பின்வரும் செயற்பாடுகளை ஒவ்வொரு குழுவும் ஒன்றன் பின் ஒன்றாகச் செய்வதற்கு வழிப்படுத்துங்கள்.
- குழு I இற்குப் பாதம் முதல் தலைவரைக்குமான உடல் சார்ந்த பயிற்சிகளை வழங்கி, உடலைத் தளர் நிலைக்குக் கொண்டு வாருங்கள். பின், அவர்களை இயல்பாக நடக்கச் செய்து தாளத்திற்குரிய நடையாக மாற்றிப் பின்னர் அதனை ஆட்டமாக மாற்றுங்கள்.
- குழு II இனை நேராக நிற்கக் கூறுங்கள். காற்றை மெதுவாக உள்ளிழுக்கச் செய்யுங்கள். அடிவயிற்றிலிருந்து ஆ..... என்ற ஒலியை மெதுவாக எழுப்பச் சொல்லுங்கள். பின் சிறிது சிறிதாக அந்த ஒலியை அதிகரித்துக் கொண்டே வர வழிப்படுத்துங்கள்.
- குழு III இற்குரிய மாணவர்களை ஓர் இடத்தில் அமரச் செய்யுங்கள். ஒரு குறிப்பிட்ட பொருளை மாத்திரம் பார்க்கச் செய்யுங்கள். சுற்றுப்புறத்தை மறந்து சிந்தனையை அதன் மேற் செலுத்துவதற்கு வழிப்படுத்துங்கள். பின் பார்ப்பதை நிறுத்தி, அப் பொருளைப் பற்றிக் கண்டதை எழுதியோ அன்றேல் பேசியோ வெளிப்படுத்தச் சந்தர்ப்பம் அளியுங்கள்.
- இவை போன்ற, வேறு உடல், குரல், உளம் சார்ந்த பயிற்சிகளையும் மாணவர்களுக்கு வழங்கலாம் என்பதனையும் கருத்திற் கொள்ளுங்கள்.
- முதலாவது குழுவினரிடம் உடல் சார்ந்த பயிற்சிகளின் முக்கியத்துவம் பற்றி வினவுங்கள்.

- உடல் சார்ந்த பயிற்சிகள் உடலைத் தளர்வாக்குவதற்கும் உடலின் உள்ளார்ந்த லயத்தைக் கண்டுபிடிக்கவும் மற்றவர் மீது நம்பிக்கை வைக்கவும் உடலை உணர்வுகளின் தொகுதியாக வைத்துக் கொள்ளவும் எனப் பலவிதமாக நடிகனுக்கு உதவுகின்றன என்பது பற்றி மாணவர்களுடன் கலந்துரையாடி **'உடல் சார்ந்த பயிற்சிகளின் முக்கியத்துவம்'** என்னும் தலைப்பில் சுவரொட்டி ஒன்றைத் தயாரித்துக் காட்சிப்படுத்துவதற்கு வழிப்படுத்துங்கள்.
- இரண்டாவது குழுவினரிடம் குரல் சார்ந்த பயிற்சிகளின் முக்கியத்துவம் பற்றி வினவுங்கள்.
- குரல் சார்ந்த பயிற்சிகள் குரலைத் தளர்வாக்குவதற்கும் குரலைப் புறத்தெரிய வைப்பதற்கும் உணர்வுகளோடு பேசுவதற்கும் தேவைக்கேற்பக் குரலைக் கட்டுப்படுத்துவதற்கும் எனப் பலவிதமாக நடிகனுக்கு உதவுகின்றன என்பது பற்றி மாணவர்களுடன் கலந்துரையாடி, **'குரல் சார்ந்த பயிற்சிகளின் முக்கியத்துவம்'** என்னும் தலைப்பில் சுவரொட்டி ஒன்று தயாரித்துக் காட்சிப்படுத்துவதற்கு வழிப்படுத்துங்கள்.
- மூன்றாவது குழுவினரிடம் உளம் சார்ந்த பயிற்சிகளின் முக்கியத்துவம் பற்றி வினவுங்கள்.
- உளம் சார்ந்த பயிற்சிகள் மனதை ஒருநிலைப்படுத்துவதற்கும் பாத்திரங்களின் உள்ளார்ந்த இயல்புகளை வெளிக்கொண்டு வருவதற்கும் செயல்களை ஒழுங்கு நிலையில் வைத்திருக்கவும் சொல்லாடல்களை மனப்பாடம் செய்யவும் எனப் பலவிதமாக நடிகனுக்கு உதவுகின்றன என்பது பற்றி மாணவர்களுடன் கலந்துரையாடி **'உளம் சார்ந்த பயிற்சிகளின் முக்கியத்துவம்'** என்னும் தலைப்பில் சுவரொட்டி ஒன்று தயாரித்துக் காட்சிப்படுத்துவதற்கு வழிப்படுத்துங்கள்.
- பின்வரும் விடயங்கள் வெளிக்கொணரப்பெறும் வகையில் கலந்துரையாடுங்கள்.
- நடிகரது சித்திரிப்புத் திறனை விருத்தி செய்து கொள்வதற்காக வழங்கப்பெறும் பயிற்சிகள் அரங்கப் பயிற்சிகளாகும்.
- அரங்கப் பயிற்சிகள் பல காணப்படினும் உடல், குரல், உளம் சார்ந்த பயிற்சிகள் அடிப்படையானவைகளாகக் காணப்படுகின்றன.
- பாத்திரத்தின் ஆழ்ந்த எண்ணங்களை ஒரு நிலைப்படுத்தி அதன் தன்மைகளை மக்கள் நம்பும்படியாகப் பார்க்கச் செய்யும் போது நடிப்புக் கலைஞன் வெற்றி பெறுகின்றான். நடிகனது இவ் வெற்றிக்கு அரங்கப் பயிற்சிகள் துணையாக அமைகின்றன.

## முதன்மைப் பதங்கள்
- அரங்கப் பயிற்சி • சித்தரிப்புத் திறன் விருத்தி • சுவரொட்டி.

## தரவிருத்தி உள்ளீடுகள்
- அரங்கப் பயிற்சி தொடர்பான இறுவட்டுக்கள்.
- இசைக் கருவிகள்.

## கணிப்பீடும் மதிப்பீடும் :
- அரங்கப் பயிற்சிகள் என்பதற்கு விளக்கமளிப்பார்.
- அரங்கப் பயிற்சிகளில் உடல், குரல், உளம் சார்ந்த மூன்று பயிற்சிகளும் அடிப்படையானவை என்பதனை வலியுறுத்துவார்.
- சித்தரிப்புத் திறனை விருத்தி செய்து கொள்ள அரங்கப் பயிற்சிகள் அவசியம் என்பதனை ஏற்றுக் கொள்வார்.
- அரங்கப் பயிற்சிகளில் தனியாகவும் கூட்டாகவும் ஈடுபடுவதில் ஆர்வம் காட்டுவார்.
- அரங்கப் பயிற்சிகள் மூலம் சிறந்த நடிப்பாற்றலை வெளிப்படுத்துவார்.

## உசாத்துணைகள் :
- நடிகர்களுக்கு ஒரு கையேடு, நர்மதா வெளியீடு - மதன் கேப்ரியெல்
- மனசில் பதிஞ்ச காலடிச் சுவடுகள், சென்னை. - வெங்கட் சாமிநாதன்
- ஸ்ரனிஸ்வலஸ்கியின் பார்வையில்
  ஒரு நடிகனின் உருவாக்கம் - கணேசன் மேகநாதன்

| | | | |
|---|---|---|---|
| தேர்ச்சி | 3.0 | : | நாடகமும் அரங்கக் கலைகளும் தொடர்பான கொள்நெறிகளை அனுசரித்துச் செய்முறைகளில் ஈடுபடுவார். |
| தேர்ச்சி மட்டம் | 3.1 | : | நடிப்பதற்கான அரங்கப் பயிற்சிகளைப் பெற்றவர் ஆவார். |
| செயற்பாடு | 3.1.2 | : | "உடல், உளப் பயிற்சிகள் மூலம் சிறந்த நடிப்பாற்றலை வெளிப்படுத்துவோம்". |

**பாடவேளைகள்** : 02

**கற்றற் பேறுகள்** :

- உடல், உளப் பயிற்சிகளை இனங்காண்பார்.
- உடல், உளப் பயிற்சிகள் நடிகனது நடிப்பாற்றலை விருத்தி செய்கின்றன என்பதை ஏற்றுக் கொள்வார்.
- உடல், உளப் பயிற்சிகளில் தனியாகவும் கூட்டாகவும் ஈடுபடுவார்.
- தமது நடிப்புத்திறனை வெளிப்படுத்துவார்.

## பாடத்திட்டமிடல் தொடர்பான அறிவுறுத்தல்கள் :

- மாணவர்களை அரங்க மண்டபத்திற்கு அன்றேல் திறந்த வெளியை நோக்கி அழைத்துச் செல்லுங்கள். பயிற்சிக்குத் தயாராக்குங்கள்.
- அவர்களை வட்டமாக அமரச் செய்யுங்கள்.
- பின்வரும் செயற்பாடுகளைச் செய்வதற்கு மாணவர்களை வழிப்படுத:துங்கள்.

## செயல் I

- 'தொலைவில் சப்தம் ஒன்று கேட்கிறது. அதை உன்னிப்பாய் கேளுங்கள்' என்ற கூற்றுக்கு மாணவர்கள் செயற்பட அறிவுறுத்துங்கள்.
- அருகில் கேட்கும் மற்றச் சத்தங்களைப் பொருட்படுத்த வேண்டாம் என்பதை வலியுறுத்துங்கள்.
- பின், அச் சத்தத்தைப் பற்றிச் சிந்தித்துப் பெற்ற அனுபவங்கள் பற்றி மாணவர்களிடம் வினவியறியுங்கள்.

## செயல் II

- மாணவர்களை அரைவட்ட வடிவமாக நிற்கச் செய்யுங்கள்.
- காட்சிப்படுத்தப்பெற்றுள்ள முன் அறிமுகம் இல்லாத ஒருவரின் ஒளிப்படத்தைப் பார்ப்பதற்கு அவர்களுக்குச் சந்தர்ப்பம் அளியுங்கள்.
- அவருடைய உருவத்தைப் பார்த்து மனதில் பதிய வைத்துக் கொள்ள வழிப்படுத்துங்கள்.
- ஒளிப்படத்தில் உள்ள நபர் எப்படிப் பேசுவார், எப்படிப் பாரப்பார், எப்படி நடப்பார் என்பது போன்றவற்றை மாணவர்கள் கற்பனை செய்து பார்ப்பதற்கு வழிப்படுத்துங்கள்.
- மாணவர்களது முகத்தையும் உடலையும் அவரைப் போலவே உருமாற்றச் செய்யுங்கள்.
- மாணவர்களது கற்பனையில் இருக்கும் 'அவரை'ப் போல நடப்பதற்கும் பேசுவதற்கும் பார்ப்பதற்கும் வழிப்படுத்துங்கள்.
- மாணவர்களுக்கு இவை போன்ற உடல், உளப் பயிற்சிகள் சிலவற்றை அறிமுகஞ் செய்யுங்கள்.
- அவற்றைச் செய்யும் முறைகளை விளக்குங்கள்.
- அப் பயிற்சிகளில் மாணவர்களை ஈடுபடுத்துங்கள்.

- பின்வரும் விடயங்களை வெளிக்கொணரும் வகையில் கலந்துரையாடலைக் கட்டியெழுப்புங்கள்.
  * சித்திரிப்பின் பொருட்டு நடிகர்களுக்கு உடல், உளப் பயிற்சிகள் அவசியமாகின்றன.
  * உள்ளம் நினைப்பதை உடல் செய்து காட்டுவதற்கு இப் பயிற்சிகள் துணை செய்கின்றன.
  * நிலைக் கண்ணாடி முன் நின்று பயிற்சி செய்வதன் வழியாக நடிப்புத் திறனை மேம்படுத்தலாம்.
  * உடலினால் உணர்ச்சிகள் வெளிப்படுத்தப் பெறுவதை நுணுக்கமாக ஆராய முடியும்.
- நடிப்புத் திறனை விருத்தி செய்து கொள்வதற்கு உடல், உளப் பயிற்சிகளில் ஈடுபடுவது துணை செய்யும் விதத்தை இரண்டாவது பாடவேளையில் கலந்துரையாடுங்கள். செயற்பாடுகள் மூலம் இக் கலந்துரையாடலைக் கட்டியெழுப்புங்கள்.

## முதன்மைப் பதங்கள்

- அவதானம்.
- நுணுக்கமாகப் பார்த்தல்.
- கற்பனை.
- உடல் மொழி.

## தரவிருத்தி உள்ளீடுகள்

- நபர் ஒருவரின் ஒளிப்படம்.
- கண்ணாடி.

## கணிப்பீடும் மதிப்பீடும் :

- நடிப்பதற்கு உடல், உளப் பயிற்சிகள் முக்கியமானவை என்பதை விளங்கிக் கூறுவார்.
- உடல், உளப் பயிற்சிகளுக்குச் சில உதாரணங்களை இனங்கண்டு கூறுவார்.
- உடல், உளப் பயிற்சிகளைச் செய்யும் முறைகளை விவரிப்பார்.
- உடல், உளப் பயிற்சிகளில் ஈடுபடுவார்.
- உடல், உளப் பயிற்சிகளில் ஈடுபட்டுப் பாத்திரங்களை உணர்ச்சி பாவங்களுடன் வெளிப்படுத்திக் காட்டுவார்.

## உசாத்துணைகள் :

- நடிகர்களுக்கு ஒரு கையேடு, நர்மதா வெளியீடு. - மதன் கேப்ரியெல்
- மனசில் பதிஞ்ச காலடிச் சுவடுகள், சென்னை. - வெங்கட் சாமிநாதன்

| | | |
|---|---|---|
| தேர்ச்சி | 3.0 : | நாடகமும் அரங்கக் கலைகளும் தொடர்பான கொள்நெறிகளை அனுசரித்துச் செய்முறைகளில் ஈடுபடுவார். |
| தேர்ச்சி மட்டம் | 3.1 : | நடிப்பிற்கான அரங்கப் பயிற்சிகளைப் பெற்றவர் ஆவார். |
| செயற்பாடு | 3.1.3: | “நடிப்பு நுட்பங்களைப் பயிலுவோம்”. |

**பாடவேளைகள்** : 03

**கற்றற் பேறுகள்** :

- நடிப்பு நுட்பங்களை அறிந்திருப்பார்.
- நடிப்பு நுட்பங்களின் முக்கியத்துவத்தைப் புரிந்து கொண்டிருப்பார்.
- அரங்கில் நடிப்பு நுட்பங்களைப் பிரயோகிப்பார்.
- நடிப்பு நுட்பங்களின் அடிப்படைகளைப் பின்பற்றியிருப்பார்.

## பாடத்திட்டமிடல் தொடர்பான அறிவுறுத்தல்கள் :

- நடிப்பு நுட்பங்களுள் முதன்மையானவையாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.
  - மெய்நிலைகள் (Body gestures).
  - மட்டம் (Level).
  - சமநிலை (Balance).
  - பரப்புக்கள் (Areas).
  - திசைகள் (Angle).
- மேற்படி அம்சங்களை மாணவர்கள் விளங்கிக் கொள்வதற்குப் பொருத்தமான அரங்கப் பயிற்சிகளை மேற்கொள்ளுங்கள். இதற்காகப் பின்வரும் அரங்கப் பயிற்சி சார்ந்த செயற்பாடு அன்றேல் பொருத்தமான மேலதிக அரங்கப் பயிற்சிகளை வழங்கலாம்.
  - அரங்கப் பயிற்சிக்குகந்த பொருத்தமான சூழலைத் தெரிவு செய்யுங்கள்.
  - அரங்கப் பயிற்சிகளை மேற்கொள்ளத்தக்க இசை இறுவட்டினை ஒலிக்கச் செய்து அந்த இசையை மாணவர்கள் செவிமடுத்தபடி நடக்க வழிப்படுத்துங்கள்.
  - இச் செயற்பாட்டின் போது பின்வரும் சந்தரப்பங்களை ஆசிரியர் கூறும் போது அதற்கேற்ப மாணவர்கள் ஈடுபடுவதற்கான வாய்ப்புக்களை வழங்கி வழிப்படுத்துங்கள்.

## மெய்நிலைப் பயிற்சி

- பாத்திரங்கள் சிலவற்றின் பெயர்களைக் குறிப்பிட்டு (வயோதிபர், முனிவர், கடவுளர், அரசன் மற்றும் பிற) அப் பாத்திரங்களுக்கான மெய்நிலைகளை வெளிப்படுத்தச் செய்தல்.
- வெவ்வேறுபட்ட உணர்ச்சிகளைக் குறிப்பிட்டு (கோபம், மகிழ்ச்சி, ஆச்சரியம் மற்றும் பிற) அவற்றை அடையாளப்படுத்தக்கூடிய மெய்நிலைகளை வெளிப்படுத்தச் செய்தல்.
- மனிதர்களது செயற்பாடுகளைக் குறிக்கும் (வரவேற்றல், பாரம் தூக்குதல், நீர் பருகுதல் மற்றும் பிற) மெய்நிலைகளை வெளிப்படுத்தச் செய்தல்.
- மேற்படி பயிற்சிகளை அடிப்படையாகக் கொண்டு மெய்நிலை குறித்து மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள்.

## மட்டம் (Level) சார்ந்த பயிற்சி

- மாணவர்களைக் குழுக்களாக்கிப் பொருத்தமான சூழமைவுகளை வழங்கி, அச் சூழமைவுகளை (வயற்காட்சி, கடற்கரைக் காட்சி, மரணச்சடங்கு மற்றும் பொருத்தமானவை) உறை நிலையாகச் (Still) சித்திரித்துக்காட்ட வழிப்படுத்துங்கள்.
- மாணவர் சித்திரித்த சூழமைவுகளை அடிப்படையாகக் கொண்டு மட்டம் (Level) குறித்துக் கலந்துரையாடுங்கள்.

## உணர்ச்சி பாவங்கள் (Emotion)

- வெவ்வேறு உணர்வுகளைத் தரவல்ல இசை இறுவட்டினை ஒலிக்கச் செய்து அவ்வுணர்வுகளுக்குப் பொருத்தமான அசைவுகளை வெளிப்படுத்த மாணவர்களை வழிப்படுத்துங்கள்.
- மேற்படி செயற்பாட்டை அடிப்படையாகக் கொண்டு உணர்ச்சி பாவங்கள் குறித்துக் கலந்துரையாடுங்கள்.

## பரப்புக்கள் சார்ந்த பயிற்சி (Areas)

- மேடைப் பரப்புக்கள் வரையப்பெற்ற படத்தினைக் (மாணவர்கள் விளக்கம் கருதி ஒன்பது வகையான பரப்பின் பகுப்புநிலை போதுமானது) காட்சிப்படுத்தி மேடைப் பரப்புக்களின்
    - * அதி முக்கியமான பகுதிகள் - D.C, D.R, D.L, C.C.
    - * முக்கியமான பகுதிகள் - C.R, C.L, U.C.
    - * முக்கியத்துவம் குறைந்த பகுதிகள் - U.R, U.L.


  என்பன குறித்துக் கலந்துரையாடித் தெளிவுபடுத்துங்கள் (விளையாட்டு மூலமாகவும் இப் பரப்பினை மாணவர்களுக்குத் தெளிவுபடுத்தலாம்).
- பரப்புக் குறித்த மாணவர்களது விளக்கம் கருதிப் பொருத்தமான செயன்முறைப் பயிற்சிகளை ஆசிரியர் வழங்கலாம்.

## சமநிலை சார்ந்த பயிற்சி (Balance)

- குறித்த வெளியின் சமநிலையைக் கருத்திற் கொண்டு மாணவர்களைத் தாளத்திற்கேற்ப நடக்க வழிப்படுத்துங்கள்.
- பின்வரும் செயற்பாட்டில் மாணவர்கள் ஈடுபட வாய்ப்பளியுங்கள்.
    - * ஒற்றைக்காலைத் தூக்கியவாறு நிற்றல்.
    - * நுனிக்காலில் இருந்து எழும்புதல்.
    - * ஒருவர் இன்னொருவரைச் சுமந்து நடத்தல்.
- சமநிலை சார்ந்த பொருத்தமான மேலதிக பயிற்சிகளை ஆசிரியர் வழங்கி வழிப்படுத்தலாம்.
- மேற்படி செயற்பாட்டைத் துணையாக கொண்டு சமநிலை குறித்துக் கலந்துரையாடுங்கள்.

## திசைகள் சார்ந்த பயிற்சி (Areas)

- திசைகளின் பகுப்பு நிலை குறித்து வரைபடத்தைக் காட்சிப்படுத்துவதன் மூலமும் அதற்கேற்ப மாணவர்களை நிற்கச் செய்வதன் மூலமும் மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள்.
    - * மாணவர்களின் விளக்கம் கருதி இதனை ஒரு விளையாட்டாக்குங்கள்.
    - * அரங்க வெளியில், திசைகளின் பகுப்பு நிலையில்/ பரப்பில் திசையானது செல்வாக்குச் செலுத்தும் என்பதனைத் தெளிவுபடுத்திக் கலந்துரையாடுங்கள்.




## முதன்மைப் பதங்கள்

- மெய் நிலை
- உணர்ச்சி பாவங்கள்
- மட்டம்
- சமநிலை
- திசைகள்
- பரப்புக்கள்
- பகுப்பு நிலை.

## தரவிருத்தி உள்ளீடுகள்

- பொருத்தமான இசை இறுவட்டுக்கள்.
- மிருதங்கம்/ டோல்கி/ றபான்.
- நடிப்பு நுட்பங்களை விவரிக்கும் ஒளிப்படங்கள்.

## கணிப்பீடும் மதிப்பீடும் :

- நடிப்பு நுட்பங்களை அறிந்து கூறுவார்.
- நடிப்பு நுட்பங்களின் முக்கியத்துவத்தினை விளக்குவார்.
- அரங்கில் நடிப்பு நுட்பங்களினைப் பிரயோகிக்கும் திறனைப் பெற்றிருப்பார்.
- அரங்கப் படைப்புக்களில் நடிப்பு நுட்பங்களை நயப்பார்.
- தாம் வாழும் சூழலில் நடிப்பு நுட்பம்சார் அம்சங்களை அவதானிப்பார்.

## உசாத்துணைகள் :

- நாடகப் படைப்பாக்க அடித்தளங்கள் - பேராசிரியர் சே. இராமானுஜம்.
- அரங்காட்டம் - அ. அஷ்வகோஷ்.
- உடல் அசைவும் உடல்மொழியும் - Dr. N ஸ்ரீதரன்.

| | | | |
|---|---|---|---|
| தேர்ச்சி | 3.0 | : | நாடகமும் அரங்கக் கலைகளும் தொடர்பான கொள்நெறிகளை அனுசரித்துச் செய்முறைகளில் ஈடுபடுவார். |
| தேர்ச்சி மட்டம் | 3.2 | : | நாடக எழுத்துருவை நாடகப் பாங்குடன் வாசிப்பவர் ஆவார். |
| செயற்பாடு | 3.2 | : | " 'புதியதொரு வீடு' நாடகத்தை வாசித்து மகிழ்வோம்". |

**பாடவேளைகள்** : 05

**கற்றற் பேறுகள்** :

- எழுத்துருவை அர்த்தப்பாங்குடன் வாசிப்பார்.
- சாதாரண வாசிப்பிலிருந்து நாடக வாசிப்பு வேறுபடுவதை உணர்ந்திருப்பார்.
- எழுத்துருவை நாடகவியல் அம்சங்களுடன் வாசிப்பார்.
- வாசிப்பரங்கின் நுட்பங்களைப் பயன்படுத்தி விதிக்கப்பெற்ற நாடக எழுத்துருவை வாசிப்பார்.
- வாசிப்பின் போது தமது குரலைத் திறம்படப் பயன்படுத்துவார்.

## பாடத்திட்டமிடல் தொடர்பான அறிவுறுத்தல்கள் :

- விதந்துரைக்கப்பெற்ற நாடக எழுத்துருவான மாகாகவி உருத்திரமுர்த்தியின் **புதியதொரு வீடு** நாடகத்தை வாசித்து விளங்கிக்கொள்ளுதல் என்பதே இங்கு எதிர்பார்க்கப் பெறுவதாகும்.
  - * 'புதியதொரு வீடு' நாடகத்தை எழுதியவர் மகாகவி உருத்திரமூர்த்தி ஆவார். இவர் இலங்கையின் 'மகாகவி ' என அழைக்கப்பெற்றார். சிறந்த கவிஞரான இவர், கோடை, முற்றிற்று, புதியதொரு வீடு போன்ற பா நாடகங்களை எழுதியுள்ளார்.
  - * 'புதியதொரு வீடு' ஒரு சமூக நாடகமாகும். இது கவிதைப் பாணியில் அமைந்துள்ளது.
  - * கரையோர மக்களின் வாழ்வியல் அம்சங்களை எடுத்துக்காட்டுகிறது.
  - * இந் நாடகத்தின் பிரதான பாத்திரங்கள் மாயன், மாசிலன், மயிலி, மையுண்ட நெடுங்கண்ணாத்தை, மன்னவன் மறைக்காடர் என்பனவாகும்.
- இந்த விடயங்களைக் கருத்திற்கொண்டும் வாசிப்பு அரங்கின் பண்புகளை மனதிற் கொண்டும் வாசிப்பது சிறந்தது.
  - * தனியே குரலை மாத்திரம் பயன்படுத்தி வாசிக்கச் செய்யுங்கள்.
  - * மெய்யசைவுகளுக்கு அழுத்தம் கொடுக்காது தனியே குரலை மாத்திரம் பயன்படுத்தி, ஏற்ற இறக்கத்துடன் வாசிக்கவும்.
  - * ஒவ்வொரு உரையாடலின் பின்வரும் நிறுத்தற் குறிகளை இனங்கண்டு அழுத்தம் கொடுத்து வாசிக்கவும்.
  - * சொல்லாடல்களுக்கு அழுத்தம் கொடுத்து வாசிக்கவும்.
  - * உச்சரிப்புக்களில் கவனம் செலுத்தி வாசிக்கவும்.
  - * குரலில் அழகு, கவர்ச்சி, வலிதம், லாவகம், நெகிழ்ச்சி என்பவற்றுடன் வாசிக்கவும்.
  - * நாடக எழுத்துருவின் ஒரு பகுதியைச் சாதாரண நிலையிலும் உணர்வுகளுக்கு அழுத்தம் கொடுத்தும் என இரண்டு நிலைகளில் வாசித்துப் பார்க்கவும்.
  - * நாடகம் முழுவதும் மாணவர்களால் வாசிக்கப்பெறல் வேண்டும். வாசிக்கப்பெறும் போது நாடகம் பற்றிய மனப்பதிவு ஏற்படும் என்பதை வலியுறுத்துங்கள்.
  - * இந் நாடகம் கவிதைப் பாணியில் அமைந்தமையினால் வாசிப்பதில் கூடிய கவனம் செலுத்துங்கள்.

* பாடல்களின் போது அவற்றை மிகவும் கருத்தூன்றி வாசிக்க வேண்டும்.
* பாத்திரங்கள், பாடகர் என வாசிக்கும் போது சிறப்பு (உணர்ச்சி) நிலையிலும் பொது நிலையிலும் வாசியுங்கள்.

மேற்கூறிய அறிவுறுத்தல்களை அடிப்படையாகக் கொண்டு மாணவர்களை நான்கு குழுக்களாக்கி வாசிக்கச் செய்யவும்.

## முதன்மைப் பதங்கள்

- ஏற்ற இறக்கம்.
- அழகு, கவர்ச்சி.
- லலிதம், லாவகம்.
- பா நாடகம்.

## தரவிருத்தி உள்ளீடுகள்

- புதியதொரு வீடு நாடக எழுத்துரு.
- நாடகாசிரியரின் ஒளிப்படம்.
- வாசிப்பு நுட்பங்கள் உள்ளடக்கிய அட்டைகள்.
- உச்சரிப்புத் தொடர்பான இறுவட்டுக்கள்.

## கணிப்பீடும் மதிப்பீடும் :

- எழுத்துருவை அர்த்தப்பாங்குடன் வாசிப்பார்.
- நாடக வாசிப்பின் நுட்பங்களுடன் வாசிப்பார்.
- எழுத்துருவை நாடகவியல் அம்சங்களுடன் வாசிப்பார்.
- வாசிப்பரங்கின் நுட்பங்களை அனுசரித்து வாசிப்பார்.
- குரலைத் திறம்படப் பயன்படுத்துவார்.

## உசாத்துணைகள் :

- நாடகப் பனுவல் வாசிப்பு - வீ. ராசு, கோ. பழனி.
- பிரதியிலிருந்து மேடைக்கு - கி. பார்த்திபராஜா.
- புதியதொரு வீடு - மகாகவி து. உருத்திரமூர்த்தி.
- அரங்கியல் (நாடகம் கற்பித்தல்) - பேராசிரியர் சி. மௌனகுரு.
- அரங்கு ஓர் அறிமுகம் - திருத்திய இரண்டாம் பதிப்பு
- கடூழியம் - இ. முருகையன்.
- வேதாளம் சொன்ன கதை - அம்பி.
- கோடை, முற்றிற்று - மகாகவி து. உருத்திரமூர்த்தி.

| | | | |
|---|---|---|---|
| தேர்ச்சி | 3.0 | : | நாடகமும் அரங்கக் கலைகளும் தொடர்பான கொள்நெறிகளை அனுசரித்துச் செய்முறைகளில் ஈடுபடுவார். |
| தேர்ச்சி மட்டம் | 3.3 | : | நாடக மோடிக்கேற்பச் சொல்லாடல்களைப் பிரயோகிப்பார். |
| செயற்பாடு | 3.3 | : | "நாடக மோடிகளுக்கேற்பச் சொல்லாடுவோம்". |

**பாடவேளைகள்** : 02

**கற்றற் பேறுகள்** :

- நாடக மோடிகளின் வகைகளைத் தெரிந்திருப்பார்.
- ஒவ்வொரு மோடிக்குமுரிய தனித்துவமான சொல்லாடற் பாங்கினை வெளிப்படுத்துவார்.
- வெவ்வேறு பண்பாட்டுச் சூழலிற் காணப்பெறும் வேறுபட்ட மொழிக் கையாள்கையைக் கூர்ந்து அவதானிப்பார்.

## பாடத்திட்டமிடல் தொடர்பான அறிவுறுத்தல்கள் :

- மாணவர்கள் யதார்த்தம், யதார்த்தமற்ற மோடி/ பாணிகளை அறிந்து அவ்வந் நாடகங்களுக்குரிய சொல்லாடல்களை, அவ்வப் பாணியிலேயே மேற்கொள்வதற்கான அறிவையும் பயிற்சியையும் இவ்வலகின் வழியாகப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று எதிர்பார்க்கப் பெறுகின்றது.
- யதார்த்தம், யதார்த்தமற்ற பாணிகள் அமையத்தக்க நாடகங்களின் காணொளிப் பகுதிகளை மாணவர்கள் பார்வையிடச் செய்யுங்கள்.
- பார்த்தல் அனுபவத்தினைக் கொண்டு, நாடக மோடிகள் பற்றிக் கலந்துரையாடுங்கள்.
  - * நாடகங்களை மோடி/ பாணியின் அடிப்படையில் வகைப்படுத்த முடியும்.
  - * யதார்த்தம், யதார்த்த விரோதம் என இரு பிரதான மோடிகள்/ பாணிகளைக் குறிப்பிடலாம்.
  - * இம் மோடிகளுக்கேற்ப நாடகத்தின் கருப்பொருள் சொல்லாடல், வேட உடை, ஒப்பனை, காட்சி விதானிப்பு, நடிப்பு என்பன வேறுபட்டிருக்கும்.
  - * யதார்த்த மோடியில் இவை அனைத்தும் உள்ளதை உள்ளவாறு காட்டுகின்ற பண்போடு, இயல்பினை மிக ஒத்தவையாகக் காணப்படும். ஆனால் யதார்த்த விரோத மோடியில் இவை மோடிமைத் தன்மையுடனும் கலைஞனின் கற்பனைக்கு இடமளிக்கும் தன்மையிலும் அமைந்திருக்கும்.
- யதார்த்தம், யதார்த்த விரோத மோடிகளின் சொல்லாடற் பாங்கானது, வேறுபடுமாற்றினைச் சுட்டிக்காட்டுங்கள்.
- ஒவ்வொரு மோடியினதும் வகை மாதிரி எழுத்துருக்களில் இருந்து சொல்லாடற் பகுதிகளைத் தெரிந்து, மாணவர்களை எழுந்தமானமாய் அழைத்து அப் பகுதிகளை உரையாடச் செய்யுங்கள்.
- சொல்லாடல்கள் பற்றி ஏனைய மாணவர்களின் அபிப்பிராயங்களை முன்வைக்க அனுமதித்து, ஒவ்வொரு மோடி நாடகங்களினதும் சொல்லாடற் பாணிகள் பற்றியும் கலந்துரையாடுங்கள்.
- இரண்டாவது பாடவேளையில், மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து, தெரிவு செய்யப்பெற்ற வெவ்வேறு பண்பாட்டு, மோடி வேறுபாடுகளுடைய எழுத்துருக்களின் பகுதிகளை வழங்கி, குழுக்களாக ஆயத்தம் செய்து, சொல்லாடலை நிகழ்த்தப் பணியுங்கள்.

**உதாரணம்:**

- * கோடை
- * புதியதொரு வீடு } மகாகவி
- எந்தையும் தாயும்
- பஞ்சவர்ண நரியார் } ம. சண்முகலிங்கம்
- சுந்தரம் எங்கே
- உடையார் மிடுக்கு } பேராசிரியர் க.கணபதிப்பிள்ளை
- கந்தன் கருணை - அம்பலத்தாடிகள் குழு
- ஏகலைவன் - இளைய பத்மநாதன்
- தப்பி வந்த தாடி ஆடு
- வனவாசத்தின் பின், சக்தி பிறக்குது } சி. மௌனகுரு

- குழுக்களாகச் சொல்லாடல்களை நிகழ்த்திய பின், மோடி/ பாணிகளுக்கேற்ப மேற்கொள்ளப்பெறும் சொல்லாடல்களின் பண்புகள், அவற்றுக்கான நுட்பங்கள் பற்றிக் கலந்துரையாடுங்கள்.
- மோடி/ பாணிகளுக்கேற்ற சொல்லாடல்களை அடிப்படையாகக் கொண்ட, செய்முறைக் கணிப்பீட்டினை நடத்துவதற்கூடாக மாணவர்களின் அடைவினை மேலும் ஆழப்படுத்த முடியும் என்பதனைக் கவனத்திற் கொள்ளுங்கள்.

## முதன்மைப் பதங்கள்

- மோடி
- பாணி
- வகைப்பாடு
- யதார்த்தம்
- சொல்லாடுதல்
- யதார்த்த விரோதம்.

## தரவிருத்தி உள்ளீடுகள்

- காணொளிகள், இறுவட்டுகள்.
- நாடக எழுத்துக்கள்.
- தெரிவு செய்யப்பெற்ற எழுத்துருக்களின் பகுதிகள்.

## கணிப்பீடும் மதிப்பீடும் :

- நாடக மோடிகளின் வகைகளைக் கூறுவார்.
- நாடக மோடிகளுக்குரிய சொல்லாடற் பாணிகளை முன்வைப்பார்.
- சொல்லாடல்களை மோடி, பாத்திரம் உணர்வுகளுக்கு ஏற்ப நிகழ்த்துவார்.
- ஒவ்வொரு மோடியிலும் எழுதப்பெற்ற நாடக எழுத்துருக்களின் பெயர்களைக் கூறுவார்.
- வெவ்வேறு மோடிகளுக்குரிய வகையில் சொல்லாடல்களின் நுட்பங்களை விளங்கிக் கொண்டு வாசிப்பில் ஈடுபடுவார்.

## உசாத்துணைகள் :

- சமூக மாற்றத்துக்கான அரங்கு - க. சிதம்பரநாதன்.
- அரங்கின் பரிமாணங்கள் - (தொகுப்பு) தெ. மதுசூதனன்.
- தமிழ் அரங்கில் மரபும் மாற்றங்களும் (பதிப்பு). - செ. தெய்வநாயகம் சண்முகநாதன்
- ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி - நாடகமும் அரங்கியலும், தரம் 9 (2008).

| | | | |
|---|---|---|---|
| தேர்ச்சி | 3.0 | : | நாடகமும் அரங்கக் கலைகளும் தொடர்பான கொள்நெறிகளை அனுசரித்துச் செய்முறைகளில் ஈடுபடுவார். |
| தேர்ச்சி மட்டம் | 3.4 | : | பாத்திரங்களைப் படைப்பாக்கம் செய்யக் கூடியவராவார். |
| செயற்பாடு | 3.4 | : | "நாடகப் பாத்திரங்களைப் படைப்பாக்கம் செய்வோம்". |

**பாடவேளைகள்** : 04

**கற்றற் பேறுகள்** :

- பாத்திரப் படைப்பாக்கம் என்றால் என்ன என்பதை அறிந்திருப்பார்.
- பாத்திரப் படைப்பாக்கத்தில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளை இனங்காண்பார்.
- விதிக்கப்பெற்ற நாடக எழுத்துருவில் உள்ள பாத்திரங்களை வகைப்படுத்துவார்.
- தனித்தனியாகவும் கூட்டாகவும் பாத்திரங்களைப் படைப்பார்.
- மோடிக்கேற்ற வகையிற் பாத்திரங்களைப் படைப்பார்.

## பாடத்திட்டமிடல் தொடர்பான அறிவுறுத்தல்கள் :

பாத்திரப் படைப்புப் பற்றிய கீழ்வரும் விடயங்களைக் கலந்துரையாடுங்கள்.

- பாத்திரப் படைப்பு என்பது சமூக, பண்பாட்டு, சூழலியற் காரணிகளால் தீர்மானிக்கப் பெறுகின்றது.
- பாத்திரம் என்பது உடல், உள, சமூக, இயல்பிசைக் குணங்குறிகளாற் கண்டறியப்படுவது.
- ஒவ்வொரு பாத்திரத்திற்கும் பின்னணியாகச் சமூகப் பெறுமானம் உண்டு.
- 'புதியதொரு வீடு' நாடகத்தில் மாயன், மாசிலன், மன்னவன், மயிலி, மையுண்ட நெடுங்கண்ணாத்தை, மறைக்காடர் போன்றவர்கள் பிரதான பாத்திரங்கள்.
- பாத்திரப் படைப்பு என்பது உடல், உள, சமூக இயல்பிசைவுக் குணாம்சங்கள் தொடர்பானவை என்ற போதிலும் ஒரு பாத்திரத்தின் நடத்தையே (நடந்து கொள்ளும் முறை) அப் பாத்திரம் பற்றிய மனப்பதிவை ஏற்படுத்துகின்றது.

**மாயன்:**

சாதாரண மீன்பிடித் தொழிலாளி படுகின்ற துன்ப துயரங்களுக்கு அப்பாற்பட்ட துன்பத்தை அனுபவிப்பவன். திருமணமாகி குழந்தை பெற்ற நிலையில் மனைவி மக்களைப் பிரிந்து மீண்டும் வருகிறான். ஆனால், வந்தபோது சூழ்நிலை மாற்றம் பெற்றிருக்கிறது. இந்த இடத்தில் நடிகன் தன் இயல்பைச் சூழ்நிலைக்கேற்பப் **பண்புருவாக்கம்** செய்ய வேண்டியுள்ளது. எந்தப் பொருளும் எப்பொழுதும் ஒருவருக்கு நிரந்தரமானதன்று என்கிற நிதர்சனம் மாயனால் உணரப் பெறுகின்றது. ஏற்றுக் கொள்ளும் மனப்பாங்கு அந்தப் பாத்திரத்திற்கு வந்துவிடுகிறது. ஆகவே, இவ்வாறான உடல், உள, சமூகவியல் சார்ந்த பண்புகளைக் கொண்டு மாயன் படைக்கப்பெறலாம். தொழில் (மீன்பிடி) நம்பிக்கை, போராட்டம் (இயற்கை - வாழ்வு) கொந்தளிப்பு, ஏக்கம், தனிமை போன்றன இப் பாத்திரப் பண்பை வெளிக்காட்ட அவசியமானவை.

**மாசிலன்:**
துடிப்பான இளைஞன், ஒரு காலத்தில் அண்ணனுக்கு உதவியாக இருந்தவன். மிகப் பொறுப்பாகக் குடும்ப, சமூக வேலைகளில் ஈடுபடுபவன். சகோதரனற்ற நிலையில் ஊரவரின் (மறைக்காடர், கண்ணாத்தை) வற்புறுத்தலுக்காக அண்ணியை மணம் செய்தவன். அண்ணன் மீளவந்தபோது செய்வதறியாது தவிப்பவன்.

**மயிலி:**
நிதமும் கறிசோறு சமைத்துக் கட்டிக்கொடுக்கும் போது மனதிற் பயம் கவ்வும். எப்போ வருவாரோ என்கிற ஏக்கம் மனதில் படியும். அவர் வரவில்லை. ஏக்கம், பயம், சோகம் எனக்கலந்த உணர்வு. 'இனி வரவே மாட்டார்' என்கிற நம்பிக்கையும் ஊரவரின் வேண்டுகோளும் அவளை மறுமணம் செய்ய வைத்தது. இப்போது இரண்டு குழந்தைகளுக்குத் தாய். மாயன் திரும்பவும் வந்த போது வெள்ளி நிலவா, நெய் விளக்கா என்கிற நிலைமை. அதாவது மாணிக்கவாசகர் கூறுவது போல 'இரண்டுமின்றித் தனியன்' ஆக நிற்கிறாள். இறுதியில், மாயனிடம் தூண்டிலைக் கொடுக்கும் போது வரும் "கறிசோறு பொதியோடு..." என்ற பாடல் அவளின் இயலாமையை எடுத்தியம்புகிறது.

**மையுண்ட நெடுங்கண்ணைாத்தை:**
மீன் விற்பவள். பல ஊர் திரிபவள். நக்கல், நளினம், நையாண்டிப் பண்புகள் கொண்டவள். ஊர்ப்புதினம் கதைப்பதில் வல்லவள். தனித்து வாழ்பவள். எது சரி எது பிழை எனத் தெரிந்தும் தெரியாமலும் கதைப்பவள். பிரதான பாத்திரத்திற்கு உப பாத்திரமாக அமைபவள். மாசிலன் - மயிலி திருமணத்திற்குக் காரணமானவர்களில் இவளும் ஒருத்தி.

**மன்னவன்:**
சுட்டிப் பையன். பாத்திரங்களின் சில தன்மைகளை முன்னறி காட்டவும் பயன்படுகிறான். இவனூடாக வானொலிப் பெட்டியும் கதை சொல்லும்.

**மறைக்காடர்:**
ஊர்ப் பெரியவர், ஊர் நிகழ்வுகளில் பங்குகொள்ளும் பற்றாளர். தனித்தனியே குடும்பங்களின் குறை தீர்ப்பவர். நல்ல மனிதர். நியாயமானவற்றையே சொல்வார், செய்வார்.

மேலும், பாடகர், மீனவர் போன்றவர்களும் இங்கு முக்கியமானவர்கள்.

**பாடகர்:** எந்த உணர்வோடும் பாடக்கூடியவராக இருத்தல்
**மீனவர்:** இராக தாளத்திற்கு ஏற்ற வகையில் புயல், இடி, மின்னல் போன்ற தாக்கங்களை ஏற்படுத்தும் வண்ணம் தமது உடலைப் பயன்படுத்த வேண்டும்.

மேற்குறித்த விடயங்களைக் கருத்திற் கொண்டு மாணவர்களை 4 குழுக்களாக்குங்கள். குழுவிற்கொரு காட்சியை வழங்குங்கள்.

குழு 1 : மாயன் கடலில் தத்தளித்தல் (கடல்).
குழு 2 : மாயன் மன்னவன் சந்திப்பு (கடற்கரை).
குழு 3 : மாசிலன், மறைக்காடர், மயிலி, கண்ணாத்தை கோவிலில் சந்தித்தல் (கோவில்).
குழு 4 : மாயன், மாசிலன், மயிலி இடம்பெறும் இறுதிக் காட்சி (வீடு).

- பாத்திரப் படைப்பாக்கத்தின் போது பாத்திரங்களின் முழுமை (சொல்லாடல், நடிப்பு) வெளிப்படுத்தப் பெறுகின்றதா என்பதை அவதானியுங்கள்.
- கவிதைப் பாணியில் அமைந்த மோடிமைப் பாணி நாடகம் என்பதால் சொற்கள்,

வசனம், பாடல்களில் அதிக கவனம் செலுத்துகின்றனரா என்பதைக் கவனியுங்கள்.
- பாத்திரங்கள் ஒன்றுடன் ஒன்று ஊடாட்டம் கொள்ளும் சந்தர்ப்பங்களை விளக்குங்கள்.
- பாத்திரங்கள் யதார்த்த மோடியில் ஆடை புனைந்திருக்கும் என்பதும் மீனவர், பாடகர்களுக்கு எவ்வாறு மோடிமைப் பாணியில் ஆடைகள் வடிவமைக்கப் பெற்றிருக்கும் என்பதையும் கருத்திற் கொண்டு படைப்பாக்கத்தில் ஈடுபடச் செய்யுங்கள்.

## முதன்மைப் பதங்கள்

- பாத்திரவாக்கம்
- பா நாடகம்
- ஊடாட்டம்.
- மோடிமைப் பாணி
- கவிதைப் பாணி

## தரவிருத்தி உள்ளீடுகள்

- 'புதியதொரு வீடு' நாடக எழுத்துரு- மகாகவி து. உருத்திரமூர்த்தி.
- பாத்திரங்களின் மாதிரிப் படங்கள்.

## கணிப்பீடும் மதிப்பீடும் :

- பாத்திரப் படைப்பாக்கம் என்றால் என்ன என்பதை அறிந்து கூறுவார்.
- பாத்திரப் படைப்பாக்கத்திற் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளை இனங்காண்பார்.
- விதிக்கப்பெற்ற நாடக எழுத்துருவின் பாத்திரங்களைப் பட்டியலிடுவார்.
- பாத்திரங்களின் இயல்பிற்கேற்பப் பாத்திரப் படைப்பாக்கத்தில் ஈடுபடுவார்.
- பாத்திரமேற்று நடிக்கும் இயல்பை வெளிக்காட்டுவார்.

## உசாத்துணைகள் :

- ஸ்ரனிஸ்லவஸ்கியின் பார்வையில் ஒரு நடிகனின் உருவாக்கம் - கணேசன் மேகநாதன்.
- நாடகக் கலை - பெட்டோல்ற் பிறெ.்.ற் (தமிழில் மு. இராமசாமி).

| | | |
|---|---|---|
| தேர்ச்சி 3.0 | : | நாடகமும் அரங்கக் கலைகளும் தொடர்பான கொள்நெறிகளை அனுசரித்துச் செய்முறைகளில் ஈடுபடுவார். |
| தேர்ச்சி மட்டம் 3.5 | : | பாத்திரப்பண்பு வெளிப்படுமாறு நாடகப் பாடல்களைப் பாடக் கூடியவர் ஆவார். |
| செயற்பாடு 3.5 | : | "பாத்திரப் பண்பு வெளிப்படப் பாடுவோம்". |

**பாடவேளைகள்** : 02

**கற்றற் பேறுகள்** :

- மரபுவழி, நவீன நாடகப் பாடல்களை அவற்றின் தன்மைக்கமையப் பாடுவார்.
- மரபுவழி, நவீன நாடகப் பாடல்களைத் தேடியறிவார்.
- தமது பண்பாட்டிற் காணப்படும் பாடல்களை நயப்பார்.
- பாடலுக்கூடாகப் பாத்திரப் பண்பை உணர்வு பூர்வமாக வெளிப்படுத்துவார்.
- தெரிந்தெடுக்கப்பெற்ற மரபுவழி நவீன நாடகப் பாடல்களின் பின்னணியை அறிந்திருப்பார்.

## பாடத்திட்டமிடல் தொடர்பான அறிவுறுத்தல்கள் :

- மாணவர்கள் அனைவரையும் பாடல்களைச் செவிமடுப்பதற்காக அமைதியாக ஓரிடத்தில் அமரச் செய்யுங்கள்.
- பின்வரும் பாரம்பரிய நாடகப் பாடல்களை இறுவட்டில் ஒலிக்கச் செய்யுங்கள்.
  - i. கோவலன் கூத்து (முல்லை மோடி) - தட்டான் வரவுப் பாடல்.
  - ii. இராம நாடகம் (வடமோடி) - இராமன் வரவுப் பாடல் (சிரத்த இராமர் வனத்தில்).
  - iii. வள்ளி திருமணம் (இசை நாடகம்) - வள்ளி தினைப்புலம் காத்தல்.
  - iv. இராவணேசன் - வீரம் வீரம் என்று (மண்டோதரி).
- அந்தப் பாடல்களை மாணவர்களுக்குப் பாடிக்காட்டுங்கள்.
- அந்தப் பாடல்களைப் பாடி மனனம் செய்வதற்கு வழிப்படுத்துங்கள்.
- மனனம் செய்த பாடல்களை உணர்வுபூர்வமாகப் பாட வழிப்படுத்துங்கள்.
- அந்தப் பாடல்கள் ஊடே வெளிப்படும் பாத்திரப் பண்பு, சூழல், உணர்ச்சிப் பெறுமானம் என்பன தொடர்பாகக் கலந்துரையாடுங்கள்.
- பாரம்பரிய நாடகப் பாடல்களைத் தேடியறிந்து அறிக்கைப்படுத்த வழிப்படுத்துங்கள்.
- மேற்படி செயற்பாட்டின் பின்னர் மாணவர்களைக் குழுக்களாக்குங்கள்.
- குழுக்கள் ஒவ்வொன்றிற்கும் பின்வரும் நவீன நாடகப் பாடல்களை வழங்குங்கள்.
  - * எங்கள் மண்ணின் ஒவ்வொரு புல்லையும் ஒவ்வொரு பூவையும் பாடுகிறோம் - நாமிருக்கும் நாடு நமது.
  - * மனிதர்கள் உயிர்க்க வேண்டும் - உயிர்த்த மனிதர் கூத்து.
  - * பண்புதான் எங்கள் செல்வம் - பொய்க்கால்.
  - * என்னடி உந்தன் கோப்பியில் - சக்தி பிறக்குது.
  - * சின்னச் சின்னக் குருவிகள் - தப்பி வந்த தாடி ஆடு.
- அந்தப் பாடல்களை இறுவட்டு மூலமோ, ஆசிரியர் பாடிக்காட்டுவதன் மூலமோ கேட்பதற்கு வழிப்படுத்துங்கள்.
- அப் பாடல்களைக் குழுவாகப் பாடச் செய்யுங்கள்.

- அந்தப் பாடல்கள் இடம்பெற்ற நாடகம் பற்றியும் அதற்கு இசையமைத்தவர்கள் பற்றியும் விளக்குங்கள்.
- அப் பாடல்கள் மூலம் வெளித்தெரியும் உணர்வுகள், கருத்துக்கள் என்பனவற்றைப் பாடப்பெறும் முறையின் வழியாக வெளிப்படுத்த ஊக்கப்படுத்துங்கள்.
- பாடல்களுக்கு ஊடாக வெளிப்படும் கருத்துக்கள் பற்றி எழுதிவரச் செய்து கலந்துரையாடுங்கள்.
- பதிய பாடல்களைத் தேடியறிந்து பட்டியற்படுத்த வழிப்படுத்துங்கள்.
- தாம் கற்ற பாடல்களைப் பாடசாலையில் இணைபாடவிதானச் செயற்பாடுகளின் போது அளிக்கை செய்வதற்கு ஊக்கப்படுத்துங்கள்.

## முதன்மைப் பதங்கள்
- நவீனம்.
- பாரம்பரியம்.
- பாத்திரப் பண்பு.

## தரவிருத்தி உள்ளீடுகள்
- நாடக இறுவட்டு.
- தாளம்.
- மத்தளம்/ மிருதங்கம்/ டொல்கி.
- இசை மெட்டுக்கள்.
- ஒலிப்பதிவுக் கருவி.
- சக்தி பிறக்குது, தப்பி வந்த தாடி ஆடு, இராவணேசன் - நாடக எழுத்துருக்கள்.

## கணிப்பீடும் மதிப்பீடும் :
- பாரம்பரிய நவீன நாடகப் பாடல்களில் வெளிப்படும் கருத்துக்களைக் கூறுவார்.
- நவீன நாடகப் பாடல்களைப் பாடி மகிழ்வார்.
- பாரம்பரிய நாடகப் பாடல்களைத் தமது கிராமங்களில் தேடியறிந்து அறிக்கைப்படுத்துவார்.
- நவீன நாடகப் பாடல்களின் இசையமைப்பாளர்கள் பற்றிக் கூறுவார்.
- நாடகப் பாடல்களைப் பாடசாலை மன்ற நிகழ்வுகளில் அளிக்கை செய்வார்.

## உசாத்துணைகள் :
- இசை நாடக மெட்டுக்கள் - திருமறைக்கலாமன்றம்.
- தென்மோடி நாட்டுக்கூத்து மெட்டுக்கள் - திருமறைக்கலாமன்றம்.
- தமிழ்க் கூத்துக் கலை - சி. மௌனகுரு

| | | |
|---|---|---|
| தேர்ச்சி | 4.0 : | இலங்கையில் நாடக அரங்கக் கலைகளின் சமூக பண்பாட்டு வரலாற்றுப் பின்னணியை விளக்குவார். |
| தேர்ச்சி மட்டம் | 4.1 : | சுதேச நாடகக் கலை வரலாற்றுடன் தொடர்புடைய அரும்பு நிலைகளைப் பயின்று, அவற்றின் அரங்காற்றுகைப் பண்புகளை இனங்காணக்கூடியவர் ஆவார். |
| செயற்பாடு | 4.1 : | "நாடகம்சார் சமயச் சடங்குகளை அறிவோம்". |

**பாடவேளைகள்** : 04

**கற்றற் பேறுகள்** :

- சடங்கிலுள்ள நாடகப் பண்புகளை அறிந்திருப்பார்.
- சுதேச நாடகப் பண்புடைய சமயச் சடங்குகளில் மரபுவழி நாடகங்களின் கூறுகளை இனங்காட்டுவார்.
- சுதேச நாடகப் பண்புடைய சமய சடங்குகளை அறிந்து அவற்றிலுள்ள அரங்காற்றுகைப் பண்புகளை இனங்காணுவார்.
- சூரன் போர், பாஸ்கா, பாண்டவர் வனவாசம் போன்ற சமயச் சடங்குகளின் அளிக்கை முறை, அரங்காற்றுகைப் பண்புகளைக் கூறுவார்.

## பாடத்திட்டமிடல் தொடர்பான அறிவுறுத்தல்கள் :

- சுதேச சமயச் சடங்குப் பண்புடைய நாடகங்களான சூரன்போர், பாஸ்கா, பாண்டவர் வனவாசம் ஆகியவை பற்றி அறியச்செய்து அவற்றுக்குள் காணப்பெறும் நாடகப் பண்புகளை இனங்காட்டுவதனூடாக, நாடகம் சடங்கில் இருந்து தோன்றியது என்ற எண்ணக்கருவை, மாணவர்கள் உணர்ந்து கொள்ளச் செய்வது இப் பாட அலகின் நோக்கமாகும்.
- இச் சடங்குகளுக்குள் காணப்பெறும் பின்வரும் நாடகப் பண்புகளை அறியச் செய்யுங்கள்.
  * ஆற்றுவோர் பார்ப்போர் தொடர்பு.
  * ஆற்றுகை வெளியின் இயல்பு.
  * ஆள்மேற்கொள்ளல் / பாகமாடுதல்.
  * பாடல், இசைக்கருவிகளின் பிரயோகம்.
  * ஐதிகக் கதைப்பொருள்.
  * கற்பனை, நம்பிக்கை.
  * பாத்திரங்களுக்கிடையேயான ஊடாட்டம்.
  * வேட உடை, ஒப்பனை.
  * வேடமுகம், பொம்மைகள், கைப்பொருள்களின் பயன்பாடு.

  போன்ற விடயங்கள் ஒவ்வொன்றினையும் இனங்காணச் செய்து, நாடகக் கலையுடன் தொடர்புபடுத்திக் கலந்துரையாடுங்கள்.
- சூரன் போர் சடங்கினை நேரிலோ அன்றேல் காணொளி மூலமோ மாணவர்கள் காணும்படி செய்யுங்கள். அதனூடாக,
  * சூரன் போரிற்கான ஐதிகக் கதை.
  * அவைக்காற்றுகை செய்யப்பெறும் முறைமை.
  * மனிதரும் பொம்மைகளும் இணைந்த அளிக்கைப் பாங்கு.
  * அதிற் காணப்பெறும் நாடகப் பண்புகள்.

* ஊர்வலத்துடன் இணைந்து பார்ப்போரும் ஆற்றுவோரும் நகரும் அளிக்கைப் பாங்கு என்பவற்றை வலியுறுத்துங்கள்.

- கிறிஸ்தவர்கள் மத்தியில், தவக்காலப் பகுதியில் நிகழ்த்தப் பெறுகின்ற பாஸ்கு நாடகம் (Passion Play) ஒன்றினை நேரிலோ, அன்றேல் காணொளியிலோ காணச்செய்து பின்வரும் விடயங்களை வலியுறுத்துங்கள்.
  * கிறிஸ்தவர்களின் தவக்காலப் பகுதியில் இதனைச் சடங்காக நிகழ்த்தும் பாரம்பரியம் காணப்பெறுதல்.
  * உடக்குப்பாஸ்க் - பொம்மைகளைக் கொண்டு நிகழ்த்துதல்.
    பாங்கு நாடகம் - மனிதர்கள் நடிப்பது.
    என்ற அதன் இரு வகைகள்
  * விவிலியப் பின்னணியிலான கதைப் பொருள்.
  * அவலம் வளர்த்தெடுக்கப்பெறும் முறை.
  * நீண்ட பெருங்காட்சி மேடை.
  * அதிக நடிகர்களும் ஆற்றுவோர்களும் பங்கு கொள்கின்ற தன்மை.
  * ஆடை அணிகள்.
  * இசை மரபு.
  * பக்தி பூர்வமாக இணையும் பார்போர்.

  போன்றதான விடயங்களைக் கலந்துரையாடித் தெளிவுபடுத்துவதுடன்
  இது நிகழ்த்தப்பெறும் இடங்களையும் முன்வையுங்கள்.
  உதாரணம்: இலங்கையில் - (மன்னார்) பேசாலை.
  யாழ்ப்பாணத்தில் - திருமறைக்காலாமன்றம்.
  உலகில் (ஜேர்மனி) - ஒபரமாகு.
  * மத்திய காலத்தில் நாடகத்தின் தோற்றுவாயாக அமைந்த முறைமை என்பவற்றை விவரியுங்கள்.
- ‘திரௌபதி அம்மன்’ சடங்குடன் தொடர்புபடுகின்ற பாண்டவர் வனவாசச் சடங்கின், காணொளிப் பேழையைப் பார்வையிடச் செய்து,
  * அது சடங்காகக் காணப்பெறும் தன்மை
  * பாரதக் கதைச் சம்பவங்கள் நடிக்கப்பெறுதல்
  * பாத்திரங்களாக நடிகர்கள் வாழ்தல்
  * நேர்த்திக்காகப் பக்தி முயற்சியாக நிகழ்த்துதல்
  * ஆற்றுவோருக்கும் பக்தர்களுக்கும் இடையிலான ஊடாட்டம்
  * முழுக் கிராமத்துடன் இணைந்து அளிக்கை செய்யும் முறை
  * புராண ஐதிகக் கதைப் பொருள்
  * கிராமியப் பாரம்பரியங்கள்
  * வேட உடை ஒப்பனை
  * சபையோர் (இசைக்கருவி, இசைப்போர்)
  * பக்தியுடனான தொடர் ஆற்றுகை

  போன்றதான பண்புகளை இனங்காணச் செய்யுங்கள்.
- அம்பாறை மாவட்டத்தில் உள்ள பாண்டிருப்பு, புத்தளம் மாவட்டத்திலுள்ள உடப்பு மற்றும் மலையகப் பிரதேசத்தில் நிகழ்த்தப்பெறும் பாண்டவர் வனவாசச் சடங்கின் பாரம்பரியங்கள் பற்றி அறிமுகம் செய்யுங்கள்.
- எமது சுதேச நாடகக் கலையின் தொடக்கங்களாக அன்றேல் அரும்பு நிலைகளாக இச் சடங்குகளைக் கொள்ள முடியும் என்பதனை வலியுறுத்துங்கள்.
- சுதேச சடங்குகளைக் காண்பதிலும் பங்கு கொள்வதிலும் தேடலார்வத்தினை மாணவர்களுக்குத் தோற்றுவியுங்கள்.

## முதன்மைப் பதங்கள்

- சடங்கு அரங்கு
- ஆள்மேற்கொள்ளல்
- உடக்குப் பாசுக்க.
- ஐதிகம்.

## தரவிருத்தி உள்ளீடுகள்

- சடங்கு நாடகங்களின் இறுவட்டுக்கள்.
- நேரடியான ஆற்றுகையைத் தரிசிப்பது.
- நாடகம் - சடங்கு பற்றிப் பேசும் நூல்கள்.
- சடங்கில் பயன்படுத்தப்பெறும் பொருள்கள்.

## கணிப்பீடும் மதிப்பீடும் :

- நாடக பாணியில் நிகழ்த்தப்பெறும் சடங்குகளின் பெயர்களைக் கூறுவார்.
- சமயச் சடங்குகளிலிருக்கும் நாடக அரங்காற்றுகைப் பணபுகளைப் பட்டியலிடுவார்.
- நாடகத்தின் தோற்றப்பாடுகளைச் சடங்குகளுடன் தொடர்புபடுத்துவார்.
- சடங்குகளில் பக்திபூர்வமாகவோ, புத்தி பூர்வமாகவோ பங்கு கொள்ள விரும்புவார்.
- நாடகம்சார் சமயச் சடங்குகள் நிகழ்த்தப்பெறுகின்ற பிரதேசங்களைக் கூறுவார்.

## உசாத்துணைகள் :

- சடங்கில் இருந்து நாடகம் வரை - கலாநிதி. சி. மௌனகுரு.
- கத்தோலிக்க கலை இலக்கியப் பாரம்பரியங்கள் - பேராசிரியர் அருட்திரு. பிலேந்தரன் அடிகள்.
- மட்டக்களப்பு மரபுவழி நாடகங்கள் - கலாநிதி சி. மௌனகுரு.





| | | | |
|---|---|---|---|
| **தேர்ச்சி** | **4.0** | **:** | **இலங்கையில் நாடக அரங்கக் கலைகளின் சமூக பண்பாட்டு வரலாற்றுப் பின்னணியை விளக்குவார்.** |
| **தேர்ச்சி மட்டம்** | **4.2** | **:** | **கூத்தின் மரபுவழித் தன்மையில் ஏற்பட்ட மாற்றங்களைக் கற்றவராவார்.** |
| **செயற்பாடு** | **4.2.1:** | | **கூத்தின் மரபுவழித் தன்மைகளை அறிந்து கொள்வோம்.** |

**பாடவேளைகள்** : 02

**கற்றற் பேறுகள்** :

- கூத்தின் தனித்துவமான பண்புகளைக் கூறுவார்.
- பண்பாட்டுடன் இணைந்த கூத்தின் அளிக்கைப் பண்புகளை எடுத்துரைப்பார்.
- கூத்துக்களின் வகைகளைப் பட்டியற்படுத்துவார்.
- கூத்துக்களைப் பார்க்கும் விருப்பினை வெளிப்படுத்துவார்.

## பாடத்திட்டமிடல் தொடர்பான அறிவுறுத்தல்கள் :

- கூத்து வடிவத்துக்குரிய தனித்துவமான பண்புகளை மாணவர்கள் இனங்காணத்தக்க வகையில் கூத்து அளிக்கை ஒன்றின் இறுவட்டினைப் பார்வையிடச் செய்யுங்கள்.
- பார்த்த அனுபவங்களுக்கூடாகக் கூத்துக்குரிய பண்புகளை மாணவர்கள் கூறுவதற்கு வழிப்படுத்துங்கள்.
- ஆடல், பாடலுடாகக் கதை சொல்லல் - எடுத்துரைக்கும் பண்புடனான அளிக்கை - சுற்றிவர நிற்கும் பார்ப்போர் - அரங்க வெளி - மோடிமைப் பண்புக்குரிய நடிப்பு - வேட உடை, ஒப்பனை - கட்டியகாரனூடாகக் கதை தொடங்கப் பெறுதல் - சபையோர் கதையை நகர்த்திச் செல்லுதல் - மேடையின் மத்தியில் சபையோர் நிற்றல் - பாத்திரங்கள் திரைபிடித்து அழைத்து வரப்படுதல் போன்றதான பல்வேறு பண்புகளையும் மாணவர்கள் கூறுவதற்குத் தூண்டுங்கள். கூத்தின் வகைக்கு ஏற்ப இப் பண்பில் வேறுபாடுகள் காணப்பெறலாம் என்பதையும் விளக்குங்கள்.
- கூத்தின் சமூக, பண்பாட்டுத் தொடர்புகளையும் சடங்குகளுடன் இணைந்த அதன் பண்பாட்டுப் பெறுமானத்தினையும் இனங்காட்டுங்கள்.
- கூத்துக்கள் ஆடப்பெறும் பல்வேறு பிரதேசங்களையும் கூத்து வகைகளையும் பட்டியலிடுங்கள்.
- மாணவர்கள் தத்தமது பிரதேசத்திலுள்ள கூத்து மரபுகள் பற்றி அறிந்து வந்து கூற வழிப்படுத்துங்கள்.
- கூத்துக்களை விரும்பிப் பார்க்கவும், கூத்து நூல்கள், கூத்துப் பற்றிய கட்டுரைகள் போன்றவற்றை வாசிப்பதற்கும் தூண்டுங்கள்.

## முதன்மைப் பதங்கள்

- சபையோர்
- கட்டியக்காரன்
- அடுக்குப் பார்த்தல்
- தாளக்கட்டுக்கள்.
- வட்டக்களரி
- மாத்துப்பூசுதல்
- தரு

## தரவிருத்தி உள்ளீடுகள்

- கூத்து அளிக்கைக் காணொளி.
- நேரடியான ஆற்றுகையைத் தரிசிப்பது.
- கூத்து தொடர்பான நூல்கள், கட்டுரைகள்.
- கூத்துப் பிரதிகள்

## கணிப்பீடும் மதிப்படும் :

- மரபுவழிக் கூத்துக்களின் பண்புக் கூறுகளைப் பட்டியலிடுவார்.
- கூத்துக்களின் பண்பாட்டுப் பெறுமானங்களை எடுத்துரைப்பார்.
- வாழ்வியலோடு கூத்துக்கள் இணைந்திருப்பதனைத் தெரியப்படுத்துவார்.
- கூத்துக்களின் வகைகளையும் ஆடப்பெறும் பிரதேசங்களையும் பட்டியலிடுவார்.
- கூத்தினைப் பார்வையிடுவதில் விருப்புக் கொள்வார்.

## உசாத்துணைகள் :

- மட்டக்களப்பு மரபுவழி நாடகங்கள் - கலாநிதி சி. மௌனகுரு.
- வட இலங்கை நாட்டார் அரங்கு - கலாநிதி காரை செ. சுந்தரம்பிள்ளை.
- மன்னார் மாதோட்ட நாடகங்கள் - அருட்திரு செ. அன்புராசா அடிகள்.
- மலையகக் கூத்துக்கள் - கலாநிதி காரை செ. சுந்தரம்பிள்ளை.







| | | | |
|---|---|---|---|
| **தேர்ச்சி** | **4.0** | **:** | **இலங்கையில் நாடக அரங்கக் கலைகளின் சமூக பண்பாட்டு வரலாற்றுப் பின்னணியை விளக்குவார்.** |
| **தேர்ச்சி மட்டம்** | **4.2** | **:** | **கூத்தின் மரபுவழித் தன்மையில் ஏற்பட்ட மாற்றங்களைக் கற்றவராவார்.** |
| **செயற்பாடு** | **4.2.2** | **:** | **கூத்தின் மரபுவழித் தன்மையில் ஏற்பட்ட மாற்றங்களை அறிந்து கொள்வோம்.** |

**பாடவேளைகள்** : 02

**கற்றற் பேறுகள்** :

- பேராசிரியர் சு.வித்தியானந்தனின் வழிநடத்தலில் நிகழ்ந்த, கூத்தின் மரபுவழித் தன்மையில் ஏற்பட்ட மாற்றங்களை முன்வைப்பார்.
- பேராசிரியர் சி. மௌனகுருவின் வழியாகக் கூத்தின் மரபு வழித் தன்மையில் நிகழ்ந்த மாற்றங்களை எடுத்துரைப்பார்.
- பிற்காலத்தில் கூத்தில் நிகழ்ந்த மாற்றங்களைக் கூறுவார்.

## பாடத்திட்டமிடல் தொடர்பான அறிவுறுத்தல்கள் :

- கூத்தின் பாரம்பரியத் தன்மையில் காலத்திற்குக் காலம் ஏற்பட்ட மாற்றங்களை அறிந்து கொள்வதே இங்கு எதிர்பார்க்கப் பெறுவதாகும்.
- போர்த்துக்கேயரின் வருகையின் பின் யாழ்ப்பாணம், மன்னார்ப் பிரதேசக் கூத்துக்களில் ஏற்பட்ட பிரதான மாற்றங்களையும் அதன் வழியாகக் கத்தோலிக்கக் கூத்துக்கள் என்ற வகைபாடு உருவானதன் பின்னணியையும் கலந்துரையாடுங்கள்.
- அறுபதுகளில், கூத்துக்களின் புத்தாக்கம் தொடர்பில் பேராசிரியர் சு. வித்தியானந்தன் முன்னெடுத்த செயற்பாடுகளின் பேறாகக் கூத்தின் மரபுவழித் தன்மையில் ஏற்பட்ட மாற்றங்கள் குறித்த கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ளுங்கள்.
- பேராசிரியர் சு. வித்தியானந்தனின் கூத்துப் புத்தாக்கச் செயற்பாடுகளைப் பின்பற்றிச் செய்யப்பெற்ற முயற்சிகள் பற்றி விளக்குங்கள்.
  உதாரணம்:- உத்தமன் பரதன், பாலன் பிறந்தான் செஞ்சொற்றுக் கடன் தீரத்த செம்மல் (திரவியம் இராமச்சந்திரன்).
- கூத்தின் வடிவத்திற்குள் புதிய உள்ளடக்கத்தை உள்வாங்கி மேற்கொள்ளப் பெற்ற மரபு மீறல்கள் குறித்துக் கலந்துரையாடலைக் கட்டியெழுப்புங்கள்.
  - சி. மௌனகுருவின் சங்காரம்.
  - அ. தாசீசியசின் நெறியாள்கையில் - கந்தன் கருணை.
- பல்வேறு கூத்துக்களையும் புதியவடிவில் இணைத்து மேற்கொள்ளப் பெறுகின்ற கூத்துருவ நாடக முயற்சிகள் பற்றிக் கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகளை முன்னெடுங்கள்.
  - அற்றைத் திங்கள்.
  - கந்தன் கருணை.

## முதன்மைப் பதங்கள்

- கூத்துப் புத்தாக்கம்.
- மரபுவழித் தன்மை.

## தரவிருத்தி உள்ளீடுகள்

- மரபுவழிக் கூத்துக் காணொளிகள்
- புத்தாக்கம் பெற்ற கூத்துக்களின் காணொளிகள்.
- கூத்துப் புத்தாக்கம் தொடர்பான நூல்கள், கட்டுரைகள்.

## கணிப்பீடும் மதிப்பீடும் :

- கூத்தின் மரபுவழித் தன்மையில் பேராசிரியர் சு. வித்தியானந்தன் காலத்தில் நிகழ்ந்த மாற்றங்களை முன்வைப்பார்.
- கூத்தின் வடிவில் புதிய உள்ளடக்கங்கள் இடம் பெற்ற முறைமையை விளக்குவார்.
- பல்வேறு கூத்துக்களும் இணையும் போது ஏற்படும் அழகியற் பெறுமானத்தை நயந்து கூறுவார்.
- புத்தாக்கக் கூத்துக்களைப் பார்ப்பதில் விருப்பம் காட்டுவார்.
- புத்தாக்கக் கூத்துக்களைப் பட்டியலிடுவார்.

## உசாத்துணைகள் :

- பழையதும் புதியதும் - கலாநிதி. சி. மௌனகுரு (புதிய பதிப்பு).
- ஆற்றுகை, இதழ் 15, 16 - திருமறைக்கலாமன்ற வெளியீடு.
- கந்தன் கருணை - அம்லத்தாடிகள் குழு
- கொல் ஈனும் கொற்றம் - திருமறைக்கலாமன்றம்.
- இராவணேசன் - கலாநிதி சி. மௌனகுரு.
- மௌனகுரு நேர்காணல்கள் - பதிப்பு, கந்தையா ஸ்ரீகணேசன்.







| | | | |
|---|---|---|---|
| தேர்ச்சி | 4.0 | : | இலங்கையில் நாடக அரங்கக் கலைகளின் சமூக பண்பாட்டு வரலாற்றுப் பின்னணியை விளக்குவார். |
| தேர்ச்சி மட்டம் | 4.2 | : | கூத்தின் மரபுவழித் தன்மையில் ஏற்பட்ட மாற்றங்களைக் கற்றவராவார். |
| செயற்பாடு | 4.2.3: | | கூத்துருவ நாடகங்களுடன் தொடர்புடைய ஆளுமையினரை அறிந்து கொள்வோம். |

**பாடவேளைகள்** : 01

**கற்றற் பேறுகள்** :

- கூத்து வடிவத்தில் புத்தாக்கங்களை மேற்கொண்ட ஆளுமையினரின் பெயர்களைக் கூறுவார்.
- புத்தாக்கங்களாக மேடையேற்றப்பட்ட கூத்துக்களின் பெயர்களைக் கூறுவார்.
- கூத்தினது நவீன மயமாக்கத்தின் அவசியத்தினை உணர்ந்திருப்பார்.

## பாடத்திட்டமிடல் தொடர்பான அறிவுறுத்தல்கள் :

- மரபுவழிக் கூத்துக்களை, வடிவரீதியாகவோ, உள்ளடக்க ரீதியாகவோ இற்றைப்பாடுடையதாக்கி, நவீன சிந்தனைகளுடன் மேடையேற்றும் முறைமையே கூத்துருவ நாடகமாகும். அதன் ஆளுமையினரையும் அவர்களின் படைப்புக்களையும் மாணவர்கள் அறியச் செய்வதே இவ்வலகில் எதிர்பார்க்கப் பெறுவதாகும்.
- கூத்துருவ நாடகத்தின் காட்சி ஒன்றினை (அற்றைத் திங்கள்) பார்க்கும் படி செய்யுங்கள்.
- பார்த்தவற்றைக் கொண்டும், முன்னைய பாடத்தில் கற்றதான விடயத்தினை நினைவுபடுத்தியும் கூத்து வடிவத்தில் மேற்கொள்ளப்பெற்ற புத்தாக்கச் செயற்பாடுகளை மீள நினைவுகூரச் செய்யுங்கள்.
- கூத்துப் புத்தாக்க நடவடிக்கைகளுடன் தொடர்புடைய ஆளுமையினரின் பெயர்களை முன்வையுங்கள்.
  - சி. மௌனகுரு.
  - இளைய பத்மநாதன்.
  - அ. தாசீசியஸ்.
  - அ. பிரான்சிஸ் ஜெனம்.
  - திருமறைக்கலாமன்றத்தினர் (ஜோன்சன் ராஜ்குமார்).
  - கலாநிதி காரை செ. சுந்தரம்பிள்ளை.
- பேராசிரியர் சு. வித்தியானந்தனைப் பின்பற்றிக் கூத்துக்களைச் செம்மைப்படுத்தியோர் பற்றிக் கலந்துரையாடுங்கள்.

  உதாரணம்: செபமாலை குழந்தை.
  திரவியம் இராமச்சந்திரன்.
- கூத்தின் வடிவத்துக்குள் புதிய உள்ளடக்கங்களை இணைத்த படைப்பாளிகளை அறிமுகம் செய்து, அவர்களின் படைப்புக்கள் பற்றிக் கலந்துரையாடுங்கள்

உதாரணம்:

| | |
|---|---|
| பேராசிரியர் சி. மௌனகுரு | சங்காரம் (வடமோடி) |
| இளைய பத்மநாதன் | கந்தன் கருணை (சிந்து நடை) |
| காரை செ. சுந்தரம்பிள்ளை | பாஞ்சாலி சபதம் (தென் மோடி) |
| பொன் கணேசமூர்த்தி | சகுனியர் மூவர் (சிந்து நடை) |

- பல கூத்து வடிவங்களையும் பரீட்சார்த்தமாக இணைத்த படைப்பாளிகளை அறிமுகம் செய்யுங்கள்.

| | |
|---|---|
| அ. தாசீசியஸ் | கந்தன் கருணை |
| இளைய பத்மநாதன் | ஏகலைவன் |
| அ. பிரான்சிஸ் ஜெனம் | எதிர்கொள்ளக் காத்திருத்தல் |
| திருமறைக்கலாமன்றம் | கொல் ஈனுங் கெற்றம் |
| ஜோன்சன் ராஜ்குமார் | அற்றைத் திங்கள் |
| சி. மௌனகுரு | சக்தி பிறக்குது |

- கூத்து வடிவங்களினூடாகச் செயலாற்றும் படைப்பாளிகளை அறிமுகம் செய்யும் அதேவேளை கூத்துருவாக்கச் செயற்பாடுகள் தொடர்பான சாதக பாதகக் கருத்து நிலைகளையும் கலந்துரையாடுங்கள்.
- கிடைக்கக்கூடிய கூத்துருவ நாடகங்களோடு தொடர்புடைய ஒளிப்பேளைகள், இறுவட்டுக்கள் போன்றவற்றினைத் தேடி, மாணவர்கள் பார்க்கக் கூடிய வசதிகளை ஏற்படுத்திக் கொடுங்கள்.

## முதன்மைப் பதங்கள்

- கூத்துருவ நாடகம்.
- கூத்துப் புத்தாக்கம்.
- நவீனம்.

## தரவிருத்தி உள்ளீடுகள்

- கூத்து இறுவட்டுக்கள்.
- கூத்தின் ஒளிப்படங்கள்.
- தொடர்புடைய நூல்கள்.
- நாடக பாடங்கள் (கூத்து).

## கணிப்பீடும் மதிப்பீடும் :

- கூத்துருவச் செயற்பாடுகளில் ஈடுபட்ட கலைஞர்களையும் அவர்களது படைப்புக்களையும் கூறுவார்.
- புதிய பாடுபொருளில் ஆக்கப்பெற்ற கூத்துக்கள் பற்றி எடுத்துரைப்பார்.
- கூத்துப் புத்தாக்கத்தின் தேவைப்பாடுகளைப் புரிந்து கொள்வார்.
- கூத்துப் புத்தாக்கச் செயற்பாடுகளின் சாதக, பாதகக் கருத்துக்களை எடுத்துரைப்பார்.
- கூத்தின் கூறுகளை நவீன நாடக மரபுகளுக்குள் வாங்குவதில் ஆர்வங்கொள்வார்.

## உசாத்துணைகள் :


- ஈழத்துத் தமிழ் நாடக அரங்கு - பேராசிரியர் சி. மௌனகுரு.
- ஆற்றுகை (இதழ் 15, 16) - திருமறைக்கலாமன்றம்
- கூத்து மீளுருவாக்கம் - கௌரீஸ்வரன்.
- ஏகலைவன் - இளைய பத்மநாதன்
- பழையதும் புதியதும் (முக்கியமாகப் பின்நோக்கிய தேடலும் முன்னோக்கிய பாய்ச்சலும் என்ற கட்டுரை). - சி. மௌனகுரு.

| | | | |
|---|---|---|---|
| தேர்ச்சி | 4.0 | : | இலங்கையில் நாடக அரங்கக் கலைகளின் சமூக பண்பாட்டு வரலாற்றுப் பின்னணியை விளக்குவார். |
| தேர்ச்சி மட்டம் | 4.3 | : | நவீன தமிழ் நாடகமரபின் பிரதான செல்நெறிகளைப் பயின்றவராவார். |
| செயற்பாடு | 4.3.1 | : | "நவீன தமிழ் நாடகமரபின் பிரதான செல்நெறிகளை அறிந்து கொள்வோம்". |

**பாடவேளைகள்** : 03

**கற்றற் பேறுகள்** :

- நவீன தமிழ் நாடகமரபின் பிரதான செல்நெறிகளை அடையாளம் காண்பார்.
- நவீன தமிழ் நாடகமரபின் செல்நெறிக்குப் பின்புலமாய் அமைந்த விடயங்களை முன்னளிக்கை செய்வார்.
- ஒவ்வொரு பிரதான செல்நெறிக்கும் உட்கூறுகளாய் அமைந்த விடயங்களை இனங் காண்பார்.
- நவீன தமிழ் நாடகமரபின் போக்குக் குறித்து விமர்சிப்பார்.

**பாடத்திட்டமிடல் தொடர்பான அறிவுறுத்தல்கள் :**

- ஈழத்தில் நவீன தமிழ் நாடகமரபின் தோற்றத்தினையும் அது இன்றுவரை வளர்ந்து வந்த விதத்தினையும் குறிப்பாக, அதன் பிரதான செல்நெறிகளையும் பற்றிப் பயில்வதே இங்கு எதிர்பார்க்கப்பெறுவது ஆகும்.
- ஈழத்தில் நவீன தமிழ் நாடகமரபு தோற்றம் பெற்ற விதம் குறித்துச் சுருக்கமாக மாணவர் அறிந்து கொள்ளச் செய்யுங்கள்.
  - * காலனித்துவ காலத்தில் அறிமுகமான ஐரோப்பிய அரங்கச் செல்நெறிகள்.
    உதாரணம்: போர்த்துக்கேயர் காலக் கிறிஸ்தவ நாடக மரபு.
- பின்வரும் பிரதான செல்நெறிகள் குறித்துக் கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகளைக் கட்டியெழுப்புங்கள். பொருத்தமான முறையியலைக் கையாளுங்கள்.
- கலையரசு க. சொர்ணலிங்கத்தின் வழியாக மேற்கிளம்பிய இயற்பண்பு சார்ந்த ஆங்கில நாடக மரபின் தாக்கத்தால் உருவாகிய சொல்லாடல் நாடகமரபு. இங்கு ஆங்கில நாடகமரபைக் கலையரசு உள்வாங்கிய விதமும் நடிப்பு, மேடைப் பயன்பாடு, காட்சி விதானிப்பு, வேட உடை என்பவற்றைப் பயன்படுத்திய விதமும் பம்மல் சம்பந்த முதலியார், சேக்ஸ்பியர் போன்றோரின் நாடகங்களை அளிக்கை செய்த விதமும் கலையரசு நாடகபாணி என்ற ஒன்றை ஈழத்துத் தமிழ் நாடகமரபிற்கு அளிந்துள்ளமையும் பற்றியது.
- பேராசிரியர் க. கணபதிப்பிள்ளையின் ஊடாக மேற்கிளம்பிய, நடப்பியற் பிரச்சினைகளைப் பேச்சு வழக்கில் முன்வைக்கும் முறைமையும் அது அரங்கிற்குக் கொண்டு வந்து சேர்த்த உத்திமுறைமைகளும் இவை கலையரசின் இயற்பண்பு நாடக முறைமையுடன் இணைந்ததன் வழியாக உருவான போக்குகளும் பற்றியது.
- நாடகம் பற்றிய மேற்கத்தேயச் சிந்தனைகள், கல்வி என்பவற்றின் பரிச்சயமும், பாரம்பரிய நாடகப் பயிற்சியும் நாடகத்தை மோடிமைப்படுத்தும் போக்கை அ. தாசீசியஸ் வழியாயும் நா. சுந்தரலிங்கம், சுஹைர் ஹமீட் மூலமும் ஏற்படுத்திய செல்நெறி பற்றியது.
- எண்பதுகளில் எடுத்துரைக்கும் பண்பிலான, சமூகப் பிரச்சினைகளைப் பேசுகின்ற பல்வகைத் தன்மைகள் இணைந்த மாற்றரங்கு யாழ்ப்பாணத்தை மையமாகக் கொண்டு உருவாகியமையும் அதன் மூலவராகக் குழந்தை ம. சண்முகலிங்கம் இருந்தமையும்

அவரது நாடகங்களுக்கு ஊடான பேசுபொருள், எழுத்துரு, ஆற்றுகை முறைமை என்பவற்றில் உருவான போக்குகளும் பற்றியது.

- கலாநிதி சி. மௌனகுருவின் கூத்து மரபினை நவீன நாடக மரபினது இன்றியமையா அங்கம் ஆக்கிய செயற்பாடுகள் பற்றியது.
  உதாரணம்: இராவணேசன், வனவாசத்தின் பின்.
- படச்சட்ட அரங்க முறைமையில் இருந்து தொடங்கினாலும், பிறகு அதனைக் கைவிட்டு வெளியேறிய கலாநிதி க. சிதம்பரநாதன் அவர்களால் மேற்கொள்ளப் பெற்ற களப்பயிற்சி அரங்கு, கட்டவிழ்ப்பு அரங்கு, தெருவெளி அரங்கு போன்றனவும் படிமங்களை அடிப்படையாகக் கொண்டதுமான அரங்க முறைமை சார்ந்த போக்குப் பற்றியது.
  - மேற்கூறப்பெற்ற செல்நெறிகள் பிரதானப்பட்ட போதிலும் அவற்றுடன் இணைந்த கிளைச் செல்நெறிகள் மற்றும் திருப்புமுனைச் செயற்பாடுகளாக அமைந்த முறைகளும் உள்ளன என்பது
    உதாரணம்: க. பாலேந்திராவின் மொழிபெயர்ப்பு நாடக முறைமையும் திருமறைக் கலாமன்றத்தின் நாடகச் செயற்பாடுகளும்.
- தமிழில் நவீன நாடகச் செல்நெறிகள், அவ்வக் காலங்களின் தேவைகள், காலச் சூழலின் இன்றியமையாத் தன்மை காரணமாக உருவாகியவை என்பதையும் அதன் பின்னணியிலேயே உருவ, உள்ளடக்கங்கள் எழுந்தன என்பதையும் விவரியுங்கள்.
- இந் நவீன நாடகச் செல்நெறிகளைப் புரிந்து கொள்ளத்தக்க நூல்கள் சஞ்சிகைகள், கட்டுரைகளை மாணவர்கள் தேடிக் கற்பதற்குத் தூண்டுங்கள்.
- மேடைப் பேச்சுக்கள், ஒப்படைகள், செயற்றிட்டங்கள் மூலம் மாணவர்களின் அறிவை விசாலப்படுத்துங்கள்.
- இப் பாடஅலகு க.பொ.த. சாதாரண தர மாணவர்களுக்கானது என்பதைக் கருத்திற் கொண்டு, சுருக்கமான குறிப்புகள் போதுமானவை என்பதையும் கருத்திற் கொள்ளுங்கள்.

## முதன்மைப் பதங்கள்

- செல்நெறி.
- மாற்றரங்கு.
- நவீன நாடகம்.

## தரவிருத்தி உள்ளீடுகள்

- நாடக எழுத்துருக்கள்.
- நாடக ஒளிப்படங்கள்.
- நவீன நாடகம் பற்றிய நூல்கள், கட்டுரைகள்.

## கணிப்பீடும் மதிப்பீடும் :

- தமிழ் நவீன நாடகமரபின் புதிய போக்குகளை எடுத்துரைப்பார்.
- நவீன, நாடகமரபின் போக்குக்குக் காரணமான பின்புலத்தை விளக்குவார்.
- தமிழ் நவீன நாடகமரபின் வளர்ச்சியாற் பெருமிதமுறுவார்.
- தமிழ் நவீன நாடகமரபின் செல்நெறிகள் குறித்த தகவல்களைச் சேகரிப்பார்.
- பிரதான செல்நெறிகளை அடையாளப்படுத்திக் காட்டிய நாடகங்களைப் பட்டியலிடுவார்.

**உசாத்துணைகள் :**

- அரங்கு ஓர் அறிமுகம் (2014 - திருத்திய புதிய பதிப்பு) - பேராசிரியர் கா. சிவத்தம்பி, பேராசிரியர் சி. மௌனகுரு, க. திலகநாதன்.
- ஈழத்துத் தமிழ் நாடக அரங்கு - சி. மௌனகுரு.
- பேராசிரியர் கா. சிவத்தம்பியின் நேர்காணல்கள் - ஞானம் வெளியீடு.
- தமிழ் நாடகப் பாரம்பரியம் - பேராசிரியர் கா. சிவத்தம்பி.
- மௌனகுருவின் நேர்காணல்கள் (தொகுப்பு) - கந்தையா ஸ்ரீ கணேசன்.
- வனவாசத்தின் பின் - எழுத்துருவுக்கான முன்னுரை பேராசிரியர் கா. சிவத்தம்பி.


கலையரசு சொர்ணலிங்கம்


**பேராசிரியர் கணபதிப்பிள்ளை**

| | | |
|---|---|---|
| **தேர்ச்சி** | **4.0 :** | **இலங்கையினது நாடக அரங்கக் கலைகளின் சமூகப் பண்பாட்டு வரலாற்றுப் பின்னணியை விளக்குவார்.** |
| **தேர்ச்சி மட்டம்** | **4.3 :** | **நவீன தமிழ் நாடக மரபின் பிரதான செல்நெறிகளைப் பயின்றவராவார்.** |
| **செயற்பாடு** | **4.3.2:** | **நவீன தமிழ் நாடகமரபின் செல்நெறிகளுடன் தொடர்புடைய நாடக ஆளுமையினரை அறிந்து கொள்வோம்.** |

**பாடவேளைகள்** : 03

**கற்றற் பேறுகள்** :

- நவீன தமிழ் நாடக மரபின் வரலாற்றுத் திருப்புமுனைகளுக்குக் காரணமான ஆளுமையினரைத் தெரிந்திருப்பார்.
- வரலாற்றுத் திருப்புமுனைகளுக்குக் காரணமான பின்னணிகளை எடுத்துரைப்பார்.
- நவீன நாடக ஆளுமையினரின் விசேடித்த பண்புகளை விவரிப்பார்.

**பாடத்திட்டமிடல் தொடர்பான அறிவுறுத்தல்கள் :**

- நவீன தமிழ் நாடக மரபின் ஆளுமையினர் பற்றியும் அவர்களின் தனித்துவமான பணிகள் பற்றியும் மாணவர்கள் அறிந்து கொள்ளத்தக்க வகையில், ஏற்ற முறைகளைக் கையாண்டு கற்பித்தல் வேண்டுமென எதிர்பார்க்கப்பெறுகின்றது.
- நவீன தமிழ் நாடக மரபின் பின்வரும் ஆளுமையினர் பற்றிய விடயங்களை வழங்குங்கள்.

**(1) கலையரசு க. சொர்ணலிங்கம்**

- நடிகர், தயாரிப்பாளர், நெறியாளர்.
- பம்மல் சம்மந்தமுதலியாரின் நாடகங்களைப் பின்பற்றி, அவரது நாடகங்களையே நெறிப்படுத்தி மேடையேற்றினார்.
- நடிப்பு, வேட உடை, ஒப்பனை, காட்சி, ஒளி என ஒவ்வொரு விடயங்களிலும் கவனம் செலுத்தினார்.
- இயற்பண்புக்குரிய சொல்லாடல் சார்ந்த நாடக மரபினை அறிமுகம் செய்த வகையிலும் அரங்கச் செயற்பாடுகளைப் பிரஞ்ஞை பூர்வமாகவும் நன்கு திட்டமிட்டும் தொடர்ச்சியாகவும் மேற்கொண்ட வகையிலும் கலையரசுவின் பணி முதன்மையானதாகின்றது.

**(2) பேராசிரியர். க. கணபதிப்பிள்ளை**

- யதார்த்த பூர்வமான தமிழ் நாடகங்களை முதன் முதலில் எழுதியவர்.
- யாழ்ப்பாணப் பேச்சு மொழியை முதன்முதலாக நாடகங்களில் கையாண்டவர்.
- தமிழில் சமூகத்தின் பிரச்சினைகளை, குறிப்பாக மத்திய தர வர்க்கத்தினரின் பிரச்சினைகளை நாடகங்களினூடாகப் பேசியவர்.
- தமிழில் யதார்த்தப்பாங்கான எழுத்துருக்களைப் பிரக்ஞை பூர்வமாக எழுதிய வகையிலும் தமிழ்த் தேசியம் பற்றிய உணர்வு நிலைகளை நாடகத்திற்கூடாக முதலில் முன்வைத்த வகையிலும் இவரின் முக்கியத்துவம் முன்வைக்கப் பெறுகின்றது.

**(3) நா. சுந்தரலிங்கம்**

- ஐரோப்பிய நவீன நாடகங்களின் பரிச்சயத்துடன் செயற்பட்டவர்.
- காவிய பாணி, அபத்தப் பாணி, குறியீட்டு வாதம், யதார்த்த வாதம் போன்றவற்றினை நன்கறிந்து நாடகங்களை எழுதி நெறிப்படுத்தியவர். (விழிப்பு, அபசுரம், ஓலங்கள், பம்மாத்து).
- நெறியாள்கை எண்ணக்கருவுக்கேற்ப ஆளுமை மிக்க நெறியாளராகவும் படைப்பாளியாகவும் திகழ்ந்தவர்.
- நவீன சிங்கள அரங்கிற்குச் சமமாகத் தமிழ் அரங்கின் தரத்தினை உயர்த்திய வகையிலும் ஐரோப்பிய நவீன நாடகப் போக்குகளையும் சித்தாந்தங்களையும் உள்வாங்கிப் படைப்பாக்கத் திறனோடு தமிழுக்கு அறிமுகம் செய்த வகையிலும் இவரது முக்கியத்துவம் உணரப்பெறுகின்றது.

**(4) அ. தாசீசியஸ்**

- மரபுவழி அரங்கின் தாடனத்துடனும் ஐரோப்பிய அரங்கின் பரிச்சயத்துடனும் நாடகங்களை நெறிப்படுத்தியவர்.
- மரபுவழி அரங்கின் கூறுகளை நவீன அரங்கில் அர்த்தப்பாடுகளுடன் இணைத்துக் கொள்ளும் செயற்பாட்டின் தொடக்கமாக இருப்பவர்.
- நெறியாள்கை எண்ணக்கருவுக்கேற்ற, ஆளுமை மிக்க நெறியாளனாகவும் நடிகனாகவும் பயிற்சியாளனாகவும் திகழ்ந்தவர்.
- மரபினையும் நவீனத்தையும் இணைத்த வகையிலும் கற்பனாபூர்வமாக நெறியாள்கையைக் கையாண்ட வகையிலும் பிரக்ஞைபூர்வமாக அரங்கச் செயற்பாடுகளுடன் தொடர்ந்து ஈடுபட்ட வகையிலும் இவரது முக்கியத்துவம் உணரப் பெறுகின்றது.

**(5) சுஹைர் ஹமீட்**

- மொழி பெயர்ப்பு நாடகங்களில் கூடிய கவனம் செலுத்தியவர்.
- காட்சி விதானிப்பு, ஒளி, அரங்கத் தொழினுட்பத்தில் அதிகமான கவனம் செலுத்தியவர்.
- சிறந்த நெறியாளராக வெளிப்பட்டவர்.
- அரங்குசார் தொழினுட்பங்களுக்கு அதிக முக்கியத்துவமளித்த வகையில் இவரது முக்கியத்துவம் உணரப்பெறுகின்றது.

- நா. சுந்தரலிங்கம், அ. தாசீசியஸ், சுஹைர் ஹமீட் ஆகிய ஆளுமையினர் 70 களில் நவீன தமிழ் அரங்கு தோற்றம் பெறுவதற்குக் காரணமாக இருந்தவர்கள் என்பதனை வலியுறுத்துங்கள்.

**(6) குழந்தை ம. சண்முகலிங்கம்**

- மரபினையும் நவீனத்தினையும் பொருத்தமுறக் கையாண்டு மண்ணின் பிரச்சினைகளோடு தேவைகளோடு இணைந்து நின்று மாற்றரங்கு ஒன்றினைத் தோற்றுவித்தவர்.
- பல்வேறு இலக்குப் பார்ப்போருக்கான நாடக வகைகளை, உருவ உள்ளடக்க ரீதியாக இனங்கண்டு வடிவமைத்தவர்.
- சிறுவர் நாடகங்களைப் பிரக்ஞை பூர்வமாகத் தமிழில் அறிமுகம் செய்தவர்.
- நாடக எழுத்தாளனாக, நெறியாளனாக, தயாரிப்பாளனாகப் பல்வேறு தளங்களிலும் செயற்பட்டவர்.
- மாற்றரங்கினை அறிமுகம் செய்த வகையிலும் பிரக்ஞைபூர்வமாக அரங்கில் செயற்பட்டு, பல நூற்றுக்கணக்கான மாணவர்களை உருவாக்கிய வகையிலும் ஆளுமையும் மனிதத்துவப் பண்பும் மிக்க படைப்பாளியாகத் திகழ்ந்த வகையிலும் இவரது முக்கியத்துவம் அதி முக்கியத்துவமுடையதாக உணரப்பெறுகின்றது.

(7) கலாநிதி சி. மௌனகுரு

- கூத்து மொழியை அரங்கியலாக்கியமை.
- கூத்தின் வடிவ அழகியலுக்குள் சமகால உள்ளடக்கங்களை உட்படுத்தியதன் மூலம் தேசிய அரங்கை நோக்கியதான செல்நெறியை அறிமுகம் செய்தமை
- முழுமை அரங்கு (Total Theatre) தொடர்பான செல்நெறியை உள்வாங்கி நவீன வடிவமாற்றங்களைத் தழுவிய ஒரு கூத்துருவ நாடகமாக இராவணேசனை வெளிப்படுத்தியமை
- கூத்தை ஒரு மீள் படைப்பாக்கக் கலைப் பெறுமானமாக (Re-creation) அடையாளப்படுத்த முனைந்தமை.
- கூத்தின் வடிவத்திற்குள் பார்ப்போர் பங்குகொள்ளலுக்கான நுட்பத்தினை வனவாசத்தின் பின் என்ற நாடக எழுத்துருவின் வழியாக அறிமுகம் செய்தமை.
- கூத்தை நவீன அரங்கச் சாத்தியப்பாட்டிற்கான சாதனமாகக் கொண்டமை

(8) க. பாலேந்திரா

- மொழி பெயர்ப்பு நாடகங்கள் ஊடாகத் தமிழ் அரங்கைச் சர்வதேச நிலையில் பார்ப்பதற்குத் தூண்டியாகச் செயற்பட்டமை.
- முறைமைப்படுத்தப் பெற்ற ஓர் அரங்கச் செல்நெறியை ஈழத்து அரங்கப் போக்கில் அறிய வைத்தமை.

(9) கலாநிதி க. சிதம்பரநாதன்

- பார்ப்போர், அரங்கைத் தமது கைகளில் எடுத்துச் செயற்பட வேண்டிய ஒரு பொறுப்பு மிக்க சமூகத்தை அடையாளப்படுத்த முற்பட்டமை.
- அரங்கினூடே ஜனநாயக அரசியலைத் தேடியமை.
- உள்ளடக்கம், வடிவம் சார்ந்து சுயாதீனங்களைத் தேடியமை.
- குழும அரங்கச் செயற்பாடுகள், தளைநீக்க / கட்டவிழ் அரங்கச் செயற்பாடுகளை முனைப்புறுத்தியமை.

- முன்னுரைக்கப் பெற்ற ஆளுமையினரை விடவும், அரங்க வரலாற்றுக்குப் பங்களிப்புச் செய்த படைப்பாற்றல் மிக்க பல ஆளமையினர் உள்ளனர் என்பதனையும் மாணவர்களுக்கு விவரியுங்கள். அவர்கள் அரங்க வரலாற்றில் உள்ளனர் அரங்க வளர்ச்சியில் இல்லை என்ற பேராசிரியர் கா. சிவத்தம்பியின் கூற்றை விளக்குங்கள்.
- நாடக ஆளுமையினரின் ஒளிப்படங்களைக் காட்சிப்படுத்துங்கள்.
- கிடைக்கக்கூடிய நாடகங்களின் இறுவட்டுக்களைப் பார்ப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- மாணவர்கள் வாழும் பிரதேசம் சார்ந்து, நவீன தமிழ் நாடக மரபின் வரலாற்றுக்குப் பங்களிப்புச் செய்த ஆளுமையினரான இனங்காணப்பட்டவர்களை அறிந்து கொள்ளத்தக்க வகையில், கையேடு ஒன்றினை உருவாக்குவதற்குப் பணியுங்கள்.

## முதன்மைப் பதங்கள்

- நாடக வரலாறு
- நடிகர்
- நெறியாளர்
- நாடக வளர்ச்சி.

## தரவிருத்தி உள்ளீடுகள்

- நாடக ஆளுமையினரின் ஒளிப்படங்கள்.
- பொருத்தமான நூல்கள்.
- நாடக இறுவட்டுக்கள்.

### கணிப்பீடும் மதிப்பீடும் :

- நவீன நாடக மரபின் திருப்பு முனைகளாக அமைந்த நாடகவியலாளர்களின் பெயர்களைக் கூறுவார்.
- அவர்கள் ஏற்படுத்திய மாற்றங்களை எடுத்துரைப்பார்.
- திருப்பு முனைகளாக அமைந்த நாடகப் படைப்புகளை இனங்காட்டுவார்.
- திருப்பு முனைகளைத் தோற்றுவித்த நாடக ஆளுமைகளுக்குத் தூண்டுதலாக அமைந்த விடயங்களையும் சூழலையும் அவர்களின் விசேடித்த பண்புகளையும் கூறுவார்.
- திருப்பு முனைகளைத் தோற்றுவித்த ஆளுமைகளைப் பற்றி அதிகமாக அறிவதற்கும், அவர்களின் படைப்புக்களை வாசிப்பதற்கும் ஆர்வம் காட்டுவார்.

### உசாத்துணைகள் :

- நாடகமும் நானும் - கலையரசு க. சொர்ணலிங்கம்.
- ஈழத்துத் தமிழ் நாடக அரங்கு - சி. மௌனகுரு.
- கணபதிப்பிள்ளையின் நாடகத் திரட்டு - குமரன் வெளியீடு.
- பல்கலைக்கழக நாடக அரங்கு - இ. சிவானந்தன்.



கலாநிதி குழந்தை ம. சண்முகலிங்கம்



அ. தாசீஸியஸ்



கலாநிதி க. சிதம்பரநாதன்

| | | |
|---|---|---|
| தேர்ச்சி 5.0 | : | நாடகத் தோற்றப்பாடுகளை அழகியல் ரீதியில் நயக்கும் மானுட நேயராகச் சமூகமயமாகும் திறனை வெளிக்காட்டுவார். |
| தேர்ச்சி மட்டம் 5.1 | : | விதந்துரைக்கப்பெற்ற நாடக எழுத்துருவைக் கூட்டாக நயந்து கருத்துரைப்பார். |
| செயற்பாடு 5.1.1 | : | "புதியதொரு வீடு நாடக எழுத்துருவை நயப்போம்". |

**பாடவேளைகள்** : 05

**கற்றற் பேறுகள்** :

- 'புதியதொரு வீடு' நாடக எழுத்துருவை வாசித்து அதன் பிரதான அம்சங்களை முன்வைப்பார்.
- நாடகச் சம்பவங்கள், சூழமைவுகளைப் பகுத்தாராய்ந்து எழுத்துருவினூடு சமூகத்தை நோக்கும் மனப்பாங்கைப் பெற்றிருப்பார்.
- நாடகம் பின்னப்பட்டிருக்கும் விதத்தை நயத்துரைப்பார்.

## பாடத்திட்டமிடல் தொடர்பான அறிவுறுத்தல்கள் :

- 'புதியதொரு வீடு' நாடக எழுத்துருவின் கரு, கதை, கதைப்பின்னல், மோடி என்பவற்றை இனங்கண்டு அதன் வழியாக எழுத்துருவை நயப்பதே இங்கு எதிர்பார்க்கப் பெறுவதாகும்.
- 'புதியதொரு வீடு' நாடக எழுத்துரு குறித்த முக்கியமான விவரங்களை மாணவர்கள் அறியச் செய்தல் வேண்டும்.
  - * இது மஹாகவி து. உருத்திரமூர்த்தி என்பவரால் 1969ஆம் ஆண்டு எழுதப்பெற்றது.
  - * இது ஒரு கவிதை (பா) நாடகம் ஆகும்.
  - * முதல் மேடையேற்றம் 1971இல் இடம் பெற்றது. அ. தாசீசியஸ் அவர்களால் நெறியாள்கை செய்யப்பெற்றது.
  - * கரையோரத்தில் வாழும், மீன்பிடித் தொழிலை மையமாகக் கொண்ட குடும்பமொன்றின் கதையை அடிப்படையாகக் கொண்டது.
- இந் நாடகத்தின் கதையைச் சுருக்கமாகக் கூறுங்கள்.
- அக் கதையின் முக்கிய இடங்கள் மற்றும் திருப்புமுனைகள் பற்றிக் கூறுங்கள்.
  உதாரணம்:

| | | |
|---|---|---|
| மாயன் | : | நெடுந்தூரம், நீண்ட நாள் ஓடி நினைவெல்லாம் நீயாக மீண்டேன் இதுவோ விளைய இருந்ததம்மா. |
| மயிலி | : | என்னுடைய பிள்ளை. |
| மாயன் | : | எவன் பிள்ளை. |
| மாசிலன் | : | என் குழந்தை அண்ணை. |

- இந் நாடகத்தின் கரு, ''எத்தனை துயர் வந்தபோதும் சோர்ந்துவிடாது அதனைச் சவாலாக ஏற்றுத் தணிவோடு முன்னேற வேண்டும்'' என்பதாகும்.
  (எறிகின்ற கடல் என்று மனிதர்கள் அஞ்சார். எதுவந்ததெனின் என்ன அதை வென்று செல்வார் எனும் அடிகளைக் கவனிக்க).
- இக் கருவைச் சூழவே கதை பின்னப்பட்டுள்ளது.
- மீன்பிடித் தொழிலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளும் அதற்கான சவால்களும் பொதுவாகச் சுட்டிக்காட்டப் பெற்ற போதிலும் மாயன், மயிலி குடும்பத்தையே மையமாகக் கொண்டு இக் கதை பின்னப்பட்டுள்ளது.

- மாயன், மாசிலன், மயிலி ஆகிய பாத்திரங்கள் முதன்மையாக இருந்த போதும் மறைக்காடர், மையுண்ட நெடுங்கண்ணாத்தை ஆகியோர் குறித்த சமூகத்தின் பிரதிநிதித்துவப் பாத்திரங்களாகத் திகழ்கின்றனர்.
- கடலும் வாழ்வும் அச் சமூகத்தில் ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்து விட்டதைக் காண முடிகிறது.
- இயற்கையே அன்பின் பிணைப்பாகவும் அழிவின் சீற்றத்தைக் கொடுப்பதாயும் இங்கு பாடல்களிலிருந்து அறியமுடிகிறது.
- மீனவர்களின் கரைவலைத் தொழிலோடு தொடர்புடைய 'அம்பா' பாடல்கள் பிரதானமான பாடல்களாகப் பயன்படுத்தப்பெற்றுள்ளன.
- 'மயிலி' எனும் பாத்திரத்தின் மனக் குமுறல் நிலை இங்கு பிரதானமாகச் சுட்டிக் காட்டப்பெறுகின்றது.
- நாடகத்தின் பிரதான கதையும் நாடகத்தின் கதைச் சூழலும் ஒன்றோடு ஒன்று தொடர்புடையன.
- கதைப்பின்னலின் நகர்த்துகைக்குப் பாடகர் குழு பலமாகப் பயன்படுத்தப் பெற்றுள்ளது.

மேற்படி விடயங்களை மனதிற் கொண்டு, கற்றல் - கற்பித்தல் முறையியலைக் கீழ்க்கண்டவாறோ அன்றேல் வேறுவிதமாகவோ திட்டமிடுங்கள்.

- புதியதொரு வீடு ஆற்றுகையின் ஒளிப்படங்களைக் காட்சிப்படுத்துங்கள்.
- நாடகத்தின் கதை தொடர்பாகச் சுருக்கமாகக் கூறுங்கள். மாணவர்களின் உணர்வுகளைக் கேட்டறியுங்கள்.
- இந் நாடகம் மோடிமைப் பாணியில் அமைந்துள்ள விதம் பற்றிக் கலந்துரையாடுங்கள்.
- மாணவர்களைக் குழுக்களாக்குங்கள்.

  குழு 1 - காட்சி 1, காட்சி 2.
  குழு 2 - காட்சி 3, காட்சி 4.
  குழு 3 - காட்சி 5, காட்சி 6.
  குழு 4 - காட்சி 7

- கரு, கதை, கதைப்பின்னல், மோடி என்பவற்றை மனதிற் கொண்டு எழுத்துருவை வாசிப்பதற்கு இடமளியுங்கள்.
- மேற்படி விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடி முன்வைப்பதற்குச் சந்தர்ப்பமளியுங்கள்.
- கலந்துரையாடலின் போது கண்டுகொண்ட விடயங்களைக் குறிப்பெடுக்க இடமளியுங்கள்.
- எழுத்துருவை அளிக்கை செய்வதற்கு ஆர்வம் இருக்கிறதா எனக் கேட்டறியுங்கள்.
- எழுத்துரு நயத்தலுக்காக வேறு முறைகளையும் கையாளலாம்.

## முதன்மைப் பதங்கள்

- கரு
- கதை
- கதைப்பின்னல்
- மோதுகை

## தரவிருத்தி உள்ளீடுகள்

- புதியதொரு வீடு - நாடக எழுத்துரு.
- புதியதொரு வீடு - நாடக ஒளிப்படங்கள்.
- A4 தாள்கள்.

**கணிப்பீடும் மதிப்பீடும் :**

- நாடக எழுத்துருவைத் தனியாகவும் கூட்டாகவும் நயப்பார்.
- எழுத்துரு நயத்தலினடியாகக் கரு, கதை, கதைப்பின்னல் என்பவற்றை அறிந்திருப்பார்.
- எழுத்துருவினூடாகச் சமூகத்தை நோக்கும் இயல்பை வெளிப்படுத்துவார்.
- எழுத்துருவில் கூறப்பெற்றுள்ள பாத்திரங்களை இனங்காண்பார்.
- பல்வேறு நாடக எழுத்துருக்களைத் தேடி அறிந்து வாசிப்பார்.

**உசாத்துணைகள் :**

- கடலின் அக்கரை போவோர் - ஜோன் மிலிங்ரன் ஸிங்.
- கற்கை நெறி சார்ந்து நாடக எழுத்துருவொன்றினை நோக்க வேண்டிய முறைமை - பேராசிரியர் கா. சிவத்தம்பி, ஆற்றுகை 15, ப 3 - 12.



**மஹாகவி து. உருத்திரமூர்த்தி**

| | | |
|---|---|---|
| தேர்ச்சி | 5.0 : | நாடகத் தோற்றப்பாடுகளை அழகியல் ரீதியில் நயக்கும் மானுட நேயராகச் சமூகமயமாகும் திறனை வெளிக்காட்டுவார். |
| தேர்ச்சி மட்டம் | 5.1 : | விதந்துரைக்கப்பெற்ற நாடக எழுத்துருவைக் கூட்டாக நயந்து கருத்துரைப்பார். |
| செயற்பாடு | 5.1.2: | "புதியதொரு வீடு நாடக எழுத்துருவின் பாத்திரங்கள், மோதுகை மற்றும் மேடைக் குறிப்புகளைப் பகுத்தாய்ந்து நயப்போம்". |

**பாடவேளைகள்** : 03

**கற்றற் பேறுகள்** :

- 'புதியதொரு வீடு' நாடகத்தின் பாத்திரப் படைப்பை ஆராய்ந்து அவற்றின் பண்புகளை எடுத்துரைப்பார்.
- நாடக எழுத்துரு ஊடாகத் தெரியவரும் பிரதான மோதுகையை இனங்கண்டு கூறுவார்.
- நாடக எழுத்துரு ஒன்றை விளங்கிக் கொள்வதற்கு அதன் மோடி, சொல்லாடல்கள் மேடைக்குறிப்புகள் என்பன உதவும் விதத்தை எடுத்துரைப்பார்.
- சமகால வாழ்க்கையுடன் 'புதியதொரு வீடு' நாடகப் பாத்திரங்களை ஒப்புநோக்குவார்.

## பாடத்திட்டமிடல் தொடர்பான அறிவுறுத்தல்கள் :

- பாத்திரங்கள்
- மோதுகை
- மோடி
- மேடைக்குறிப்புகள்
- கட்புலனாகும் அம்சங்கள்
  என்பன தொடர்பிற் கவனமெடுப்பது 'புதியதொரு வீடு' நாடக எழுத்துரு தொடர்பில் இங்கு முக்கியம் பெறுகிறது.
- மாயன், மாசிலன், மயிலி, மன்னவன், மையுண்ட நெடுங்கண்ணாத்தை, மறைக்காடர் ஆகிய பாத்திரங்கள் இங்கு முதன்மையானவை.
- பாடகர்கள், மீனவர்கள் போன்ற பாத்திரங்கள் சமூகத்தின் பிரதிநிதிகளாகப் படைக்கப்பெற்றுள்ளனர்.
- இந் நாடகத்தில் இடம்பெறும் ஒட்டுமொத்தப் பாத்திரங்களையும் பட்டியற்படுத்திக் காட்சிக்கு வையுங்கள்.
- பொருத்தமான கற்றல் - கற்பித்தல் முறையியல்களைப் பயன்படுத்தி, இந் நாடகத்தில் வரும் பாத்திரங்களின் பண்புகளை மாணவர்கள் அறிந்து கொள்ள வகை செய்யுங்கள்.
- பாத்திரங்களை ஏற்று நடிப்பதன் மூலம் நடிப்பு மோடியையும் சொல்லாடல்களையும் பேசிக்கொள்ளச் சந்தர்ப்பமளியுங்கள்.
- எழுத்துரு ஊடாக வெளித்தெரியும் மேடைக்குறிப்புக்களைக் கையாண்டு நடிப்பதற்கான சந்தர்ப்பத்தை வழங்குங்கள்.
- பாடகர் குழு மற்றும் மீனவர்களின் பாடலுக்கேற்றவாறு பாடல்களைப் பாடி நடிப்பதற்கான வழிகளை ஏற்படுத்திக் கொடுங்கள்.

- இந் நாடகத்தின் பிரதான மோதுகை ''இயற்கைக்கு மனிதனுக்கும் இடையிலான போராட்டம்'' ஆகும்.
- மாயனின் வாழ்க்கை இயற்கையின் சீற்றத்திற்கு (புயல்) உள்ளானது போன்று அவனது வாழ்வும் தாக்கத்திற்கு உள்ளாகி உள்ளது என்பதாகும் (வாழ்க்கைப் புயல்).
- எழுத்துருவிற்கு ஊடாக மேற்கிளம்பும் கட்புலனாகக் கூடிய அம்சங்கள் குறித்துக் கலந்துரையாடலைக் கட்டியெழுப்புங்கள்.

## முதன்மைப் பதங்கள்

- ஆடலாக்கம்.
- மேடைக் காட்சிகள்.

## தரவிருத்தி உள்ளீடுகள்

- புதியதொரு வீடு நாடக எழுத்துரு.
- நாடக ஒளிப்படங்கள்.
- A4 தாள்கள்.

## கணிப்பீடும் மதிப்படும் :

- பல சம்பவங்கள் பின்முன்னாக இணைக்கப்பெற்றே நாடக எழுத்துரு உருவாக்கப்பெற்றுள்ளது என்பதை விளக்குவார்.
- நாடகத்தின் பிரதான மோதுகையை இனங்காண்பார்.
- நாடகத்தின் புரிந்து கொள்ளலுக்கு மேடைக்குறிப்புக்கள் துணைபுரியும் விதத்தை முன்வைப்பார்.
- இதனோடிணைந்த பல்வேறு நாடக எழுத்துருக்களைத் தேடியறிந்து வாசிக்கும் ஆர்வத்தை வெளிப்படுத்துவார்.
- இந் நாடக அனுபவத்தை ஏனையோருடன் கலந்துரையாடிப் பகிர்ந்து கொள்வார்.

## உசாத்துணைகள் :

- வேதாளம் சொன்ன கதை - அம்பி.
- கோடை - மஹாகவி து. உருத்திரமூர்த்தி.
- கடுழியம் - இ. முருகையன்.
- மகாகவியின் மூன்று நாடகங்கள் - மஹாகவி து. உருத்திரமூர்த்தி.

| | | |
|---|---|---|
| **தேர்ச்சி** | **5.0 :** | **நாடகத் தோற்றப்பாடுகளை அழகியல் ரீதியில் நயக்கும் மானுட நேயராகச் சமூகமயமாகும் திறனை வெளிக்காட்டுவார்.** |
| **தேர்ச்சி மட்டம்** | **5.2 :** | **விதந்துரைக்கப்பெற்ற அன்றேல் பிறிதொரு நாடகத்தை ஆற்றுகை நிலையில் நயப்பார்.** |
| **செயற்பாடு** | **5.2.1:** | **"புதியதொரு வீடு நாடகத்தின் மோடியை அறிந்து கொள்வோம்".** |

**பாடவேளைகள்** **:** 01

**கற்றற் பேறுகள்** **:**

- 'புதியதொரு வீடு' நாடக எழுத்துருவை நாடகமாக்கும் போது கையாளத்தக்க மோடியை (Style) விளங்கியிருப்பார்.
- ஆற்றுகை நிலையில் குறித்த நாடகத்தின் மோடியை நயந்து கூறுவார்.
- நாடக எழுத்துருவிற்கும் நாடக ஆற்றுகைக்கும் இடையிலான நாடக மோடி நிலைப் பட்ட தொடர்பை இனங்காண்பார்.

## பாடத்திட்டமிடல் தொடர்பான அறிவுறுத்தல்கள் :

- 'புதியதொரு வீடு' நாடக எழுத்துருவின் ஆற்றுகை நிலை நயத்தலின் வழியான மோடியைப் புரிந்து கொள்ளல் தொடர்பாகப் பின்வரும் விடயங்கள் எதிர்பார்க்கப் பெறுகின்றன.
  - யதார்த்த மோடி, யதார்த்த விரோத மோடி என இரு வகைப்பட்ட மோடிகளில் இது யதார்த்த விரோத மோடி வகையைச் சார்ந்தது என்பது.
  - இது கவிதைப் (பா) பாணியில் அமைந்த நாடகம் என்பது.
  - எழுத்துருவை நாடகமாக்கும் போது பிரதான பாத்திரங்கள் அணியும் வேட உடை யதார்த்தப் பாணியிலும் பாடகர், மீனவர், இடி, மின்னல், புயல் என்போரின் உடை யதார்த்தமற்ற குறியீட்டுத் தன்மையிலும் அமையலாம் என்பது.
  - பாத்திரங்கள் சித்திரிக்கப்பெறும் முறைமை, காட்சிகள் கட்புலனாகும் தன்மைகள் கவிதைப் பாணி, சொல்லாடற் தன்மை, பாடல்கள் என்பன மோடிமைப் பாணியில் அமைந்துள்ளன என்பது.
- ஆற்றுகை நிலையில் மோடிமைப் பண்பு எவ்வாறு வெளிப்படுகின்றது என்பது குறித்து விளக்கமளியுங்கள். சொல்லாடற் பாங்கு, செயலியக்கம், காட்சி விதானிப்பு, அசைவு வடிவாக்கம், கோரஸ் என்பவற்றில் காணப்பெறும் மோடிமைத் தன்மை பற்றித் தெளிவுபடுத்திக் கருத்தாடலை நிகழ்த்துங்கள்.
- இவ்வாறான விடயங்களை முதன்மையாகக் கொண்டு நாடகத்தை மேடையிட ஒழுங்குகள் செய்யுங்கள்.

## முதன்மைப் பதங்கள்

- கவிதை நாடகங்கள்.
- மோடி.
- சொல்லாடல்கள்.

## தரவிருத்தி உள்ளீடுகள்

- புதியதொரு வீடு - ஒளிப்படங்கள், காணொளி இறுவட்டு.
- நேரடி ஆற்றுகை.
- கவிதைப் பாணியில் அமைந்த ஏனைய ஆற்றுகைகளில் ஒன்று (காணொளி இறுவட்டு).

## கணிப்பீடும் மதிப்பீடும் :

- ‘புதியதொரு வீடு’ நாடகத்தை மோடிமைப் பாணியில் ஆற்றுகை செய்வார்.
- ஆற்றுகை நிலையில் நாடகத்தை நயந்து கருத்துரைப்பார்.
- நாடகத்தின் மோடி தொடர்பாக எழுத்துரு நிலையிலும் ஆற்றுகை நிலையிலும் காணப்படும் தொடர்பை விவரிப்பார்.
- மோடிமைப் பாணி நாடகங்களின் இயல்புகள் பற்றி விளக்கமளிப்பார்.
- மோடிமைப் பாணி நாடகங்களை நடிப்பதிலும் பார்ப்பதிலும் விருப்பம் காட்டுவார்.

## உசாத்துணைகள் :

- ஸ்ரனிஸ்லவஸ்கியின் பார்வையில் ஒரு நடிகனின் உருவாக்கம் - கணேசன் மேகநாதன்.
- பேட்டோல்ற் பிரக்ஃட் - நாடகக் கலை (தமிழில் மு. இராமசாமி).
- நடிப்பு முறைமைகளின் எண்ணக்கருக்கள் (கட்டுரை) அரங்கியல் - சி. மௌனகுரு.
- அரங்க ஆட்டம் - அ. அஷ்வகோஸ்.

| | | | |
|---|---|---|---|
| **தேர்ச்சி** | **5.0** | **:** | **நாடகத் தோற்றப்பாடுகளை அழகியல் ரீதியில் நயக்கும் மானுட நேயராகச் சமூகமயமாகும் திறனை வெளிக்காட்டுவார்.** |
| **தேர்ச்சி மட்டம்** | **5.2** | **:** | **விதந்துரைக்கப்பெற்ற அன்றேல் பிறிதொரு நாடகத்தை ஆற்றுகை நிலையில் நயப்பார்.** |
| **செயற்பாடு** | **5.2.2** | **:** | **"புதியதொரு வீடு நாடகத்தில் பாத்திரங்கள் சித்தரிக்கப் பெறும் முறைமையினை நயப்போம்".** |

**பாடவேளைகள்** : 02

**கற்றற் பேறுகள்** :

- நாடகப் பாத்திரங்களை இனங்காண்பார்.
- பாத்திரச் சித்திரிப்பு வழியாகத் தெரியவரும் பாத்திரக் குணாம்சங்களை நயப்பார்.
- பாத்திரங்களுக்கிடையிலான ஊடாட்டத்தினை நயப்பார்.
- பாத்திரங்கள் சித்திரிக்கப்பெற்ற விதத்தினைச் சிலாகித்துக் கூறுவார்.

**பாடத்திட்டமிடல் தொடர்பான அறிவுறுத்தல்கள் :**

- தேர்ச்சி மட்டம் 3.2 முதல் 3.4 வரையிலான செயற்பாடுகளை நினைவுபடுத்துங்கள்.
- புதியதொரு வீடு எழுத்துருவில் இருந்து எடுத்துக்காட்டாகச் சில பாத்திரங்களைச் சித்திரிக்கச் செய்யுங்கள்.
- நாடகத்தின் மையக்கரு, பாத்திரச் சித்திரிப்பு ஊடாக வெளிப்படும் விதத்தை அவதானிக்கச் செய்யுங்கள்.
- மனிதப் பாத்திரங்களின் சித்திரிப்பு முறைமைக்கும் ஏனைய பாத்திரங்களின் சித்திரிப்பு முறைமைக்கும் கவிதை நடைப்பாணி முக்கிய இடம்பெறுகின்றது எனக் கூறுங்கள்.
- பாத்திரச் சித்திரிப்பு என்பது பௌதிக, உளவியல், சமூக இயல்பிசைக் குணாம்சங்களை அடிப்படையாகக் கொண்டது என்பதைக் கலந்துரையாடுங்கள்.
- இயற்கையின் தாக்கங்கள் பாத்திரத்தின் சித்திரிப்பு முறைமைக்கு உதவியுள்ளதா என வினவுங்கள்.
- பாத்திரங்கள் சொல்லாடும் முறைமைகள் எவ்வாறு சித்திரிப்பு முறையில் மாற்றங்களை ஏற்படுத்துகின்றன என்பதைக் கலந்துரையாடுங்கள்.
- நாடக ஆற்றகையின் பின்னர் மாணவர்களுக்குப் பிடித்த பாத்திரம் எது என வினவுங்கள்.
- அவ்வாறு குறிப்பிட்ட பாத்திரம் பிடித்தமைக்கான காரணங்களைக் கேட்டறியுங்கள்.
- பாத்திரச் சித்திரிப்பை எவ்வெவ்வகையில் மேம்படுத்தலாம் என்கின்ற விடயத்தை எழுதிவரச் சொல்லுங்கள்.
- மாயன், மாசிலன், மயிலி போன்ற பாத்திரங்களின் நாடக முரணணி (Dramatic Irony) நிலைமைகளை எடுத்துக் கூறுங்கள்.

**முதன்மைப் பதங்கள்**

- பாத்திரவாக்கம் (Dramatization).
- நாடக முரணணி (Dramatic Irony).

## தரவிருத்தி உள்ளீடுகள்

- நாடக ஆற்றுகை.
- மாணவரது சுயவெளிப்படுத்தல்கள்.
- காணொளி இறுவட்டு (நாடகத்துடன் தொடர்பானவை).

## கணிப்பீடும் மதிப்பீடும் :

- புதியதொரு வீடு நாடகத்திலிருந்து தமக்குப் பிடித்த பாத்திரத்தைக் கூறுவார்.
- பாத்திரச் சித்தரிப்பு ஒன்றின் போது கவனிக்க வேண்டிய விடயங்களை முன்வைப்பார்.
- பாத்திரச் சித்திரிப்பை மேம்படுத்துவதற்கான வழிவகைகளைக் கூறுவார்.
- நாடகத்தில் வரும் பாத்திரங்களைச் சித்திரிப்பார்.
- பாத்திரச் சித்திரிப்பை நயந்து கூறுவார்.

## உசாத்துணைகள் :

- ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டிகள் - தரம் 10, 11 (2007, 2008)
- அரங்கியல் - சி. மௌனகுரு

| | | |
|---|---|---|
| தேர்ச்சி | 5.0 : | நாடகத் தோற்றப்பாடுகளை அழகியல் ரீதியில் நயக்கும் மானுட நேயராகச் சமூகமயமாகும் திறனை வெளிக்காட்டுவார். |
| தேர்ச்சி மட்டம் | 5.2 : | விதந்துரைக்கப்பெற்ற அன்றேல் பிறிதொரு நாடகத்தை ஆற்றுகை நிலையில் நயப்பார். |
| செயற்பாடு | 5.2.3: | "புதியதொரு வீடு நாடகத்தில் நால்வகைச் சித்திரிப்புக்கள் பிரயோகிக்கப் பெற்ற முறைமையினை நயப்போம்". |

**பாடவேளைகள்** : 02

**கற்றற் பேறுகள்** :

- "புதியதொரு வீடு" நாடக ஆற்றுகையிற் பயன்படுத்தப்பெற்ற நால்வகைச் சித்திரிப்புக்களை இனங்கண்டுரைப்பார்.
- நாடக ஆற்றுகைகளின் சிறப்பிற்கு நால்வகைச் சித்திரிப்புக்கள் பங்களித்த விதத்தை முன்வைப்பார்.
- நாடக நயப்பின் ஊடாக நால்வகைச் சித்திரிப்பு அம்சங்கள் பற்றிக் கருத்துரைப்பார்.
- நால்வகைச் சித்திரிப்பின் முழுமையால் மகிழ்வுறுவார்.

## பாடத்திட்டமிடல் தொடர்பான அறிவுறுத்தல்கள் :

- நால்வகைச் சித்திரிப்புக்கள் புதியதொரு வீடு நாடகத்தில் பயன்படுத்தப்பெற்றுள்ள முறையினைப் பகுப்பாய்வு செய்து நாடக நடிப்பிற்கு அது வழங்கிய பங்களிப்பை அறிந்து கொள்வதே இங்கு எதிர்பார்க்கப் பெறுவதாகும்.
- இதன்படி பின்வரும் விவரங்கள் முக்கியமானவை.
  - நால்வகைச் சித்திரிப்புக்கள் எவை என்பதை நினைவுபடுத்திக் கொள்வது
  - புதியதொரு வீடு நாடகத்தில் நால்வகைச் சித்திரிப்புக்களின் பிரயோகத்தை இனங்கண்டு கொள்வது
  - நாடக நடிப்பிற்கு நால்வகைச் சித்திரிப்புக்களின் பங்களிப்பினை அறிந்து கொள்வது
  - நயப்பின் காரணமாக மாணவர்களுக்கு ஏற்பட்ட உணர்வுகளைப் பகிர்ந்து கொள்வது
- இந்த விடயங்களை மனங்கொண்டு இரண்டு (02) பாடவேளைகளுக்கான கற்றல் - கற்பித்தற் செயற்பாட்டைத் திட்டமிடுங்கள்.
- தேர்ச்சி மட்டம் 2.2, 3.4 மீது மீண்டும் ஒரு தடவை கவனத்தைச் செலுத்துங்கள்.
- புதியதொரு வீடு நாடகச் சொல்லாடல்கள், பாத்திரச் சித்திரிப்பு அரங்கப் பொருள்கள், வேட உடைகள், ஒப்பனை, பாடல்கள் என்பவற்றின் காட்சி முன்வைத்தலுக்கு ஏற்பாடு செய்யுங்கள்.
- புயலுக்கு முந்திய வாழ்வு, புயலுக்குப் பிந்திய வாழ்வு எனக் காட்சிகளை வேறுபடுத்த முடியுமா எனக் கலந்துரையாடுங்கள்.
- பின்வரும் விவரங்களைக் கருத்திற் கொண்டு நாடகத்தின் நால்வகைச் சித்திரிப்பின் பிரயோகம் தொடர்பில் கவனம் செலுத்துங்கள்.
  - உடல் சார்ந்த சித்திரிப்பிற்காக உடற்பிரயோகம், மெய்நிலைகள், மெய்யசைவுகள், மட்டங்கள், பரப்புக்கள் (Choriography) பற்றியும்.
  - குரல் வழிச் சித்திரிப்புக்காகப் பேச்சு, பாடல் என்பவற்றில் கையாளப் பெற்ற குரலின் ஓசை, வீச்சு, அசைவு, நெகிழ்வு, லலிதம், லாவகம், கவர்ச்சி, அழகு, ஏற்ற இறக்கம் புறத்தெறிகை பற்றியும்

- உணர்ச்சி வழிச் சித்திரிப்புக்காக வேட உடைகள், காட்சி விதானிப்பு, ஒளியூட்டம், மேடைப் பொருள்கள், கைப்பொருள்கள், நடிகர், பாடகர் குழு மற்றும் இசைக் கருவிகள் பற்றியும் கவனம் செலுத்துங்கள்.
- மாயனின் தூண்டில் மற்றும் பொருள்கள் மன்னவனின் தூண்டில் மற்றும் வானொலி, கண்ணாத்தையின் மீன் கூடை எனப்பல பொருட் பயன்பாடு மற்றும் பாடகர் குழு, மீனவர்களின் அபிநயங்கள், ஆட்ட முறைகள் என்பன காண்பிய வழிச் சித்தரிப்பில் முக்கியமானவை.
- இந் நாடகத்தின் முதன்மை அம்சம் உணர்ச்சி வழிச் சித்திரிப்புக்கானது.

- இவற்றின் வழியாகப் பின்வரும் விடயங்களை வலியுறுத்துங்கள்.
  - நால்வகைச் சித்திரிப்புக்கள் மூலமே நடிகர் - பார்ப்போர் தொடர்பு வலுப்பெறுகிறது.
  - ஒரு நாடக ஆற்றுகையின் வெற்றி தோல்வியில் இந்த நால்வகைச் சித்திரிப்புக்கள் செல்வாக்குச் செலுத்துகின்றன.
  - நால்வகைச் சித்திரிப்புக்களின் பொருத்தமான பிரயோகத்தால் ஆற்றுகையின் முழுமையான அழகியலை நயக்க முடியும்.
  - பார்ப்போர் ஆற்றுகையில் ஒரு மனநிறைவையும் திருப்தியையும் பெறுவதற்கு இச் சித்திரிப்புக்கள் துணை செய்கின்றன.

## முதன்மைப் பதங்கள்

- மெய்நிலை (Body Position).
- மெய்யசைவு (Body Movement) .
- ஏற்ற இறக்கம் (Modalation).
- புறத்தெறிகை (Projection).

## தரவிருத்தி உள்ளீடுகள்

- புதியதொரு வீடு நாடக ஆற்றுகை.
- தேர்ச்சி மட்டம் 2.2, 3.4 க்கு உட்பட்ட பாடவிடயங்கள்.
- வேட உடைகள்.
- கைப்பொருள்கள்.

## கணிப்பீடும் மதிப்பீடும் :

- புதியதொரு வீடு நாடகத்திற் பயன்படுத்தப்பெற்ற நால்வகைச் சித்திரிப்புக்களையும் இனங்கண்டு கூறுவார்.
- ஆற்றுகைக்கு நால்வகைச் சித்திரிப்புக்கள் எவ்விதம் உதவின என்பதை எடுத்துரைப்பார்.
- உடல், குரல், உணர்ச்சி மற்றும் காண்பிய வழிச் சித்திரிப்புக்களின் பிரதான கூறுகளை முன்வைப்பார்.
- நாடக நயப்பிற்கு நால்வகைச் சித்திரிப்புக்களின் பங்களிப்பை எடுத்துக் கூறுவார்.
- நால்வகைச் சித்திரிப்புக்களாற் கிடைத்த அழகியல் உணர்வால் மகிழ்வுறுவார்.

## உசாத்துணைகள் :


- அரங்கியல் - முனைவர் சக்திப் பெருமாள்
  முனைவர் வே. சரோஜா.
- அரங்கவியல் - சி. மௌனகுரு.
- நாடக வழக்கு - (தொகுப்பு) கந்தையா ஸ்ரீகணேசன்.

| | | |
|---|---|---|
| **தேர்ச்சி 5.0** | **:** | **நாடகத் தோற்றப்பாடுகளை அழகியல் ரீதியில் நயக்கும் மானுட நேயராகச் சமூகமயமாகும் திறனை வெளிக்காட்டுவார்.** |
| **தேர்ச்சி மட்டம் 5.3** | **:** | **படைப்பை முழுமையான நயத்தல் நிலையில் நின்று விமர்சிப்பார்.** |
| **செயற்பாடு 5.3** | **:** | **"புதியதொரு வீடு நாடக எழுத்துருவை ஆற்றுகை நிலையில் விமர்சிப்போம்."** |

**பாடவேளைகள்** : 02

**கற்றற் பேறுகள்** :

- புதியதொரு வீடு ஆற்றுகையின் வலிவு, நலிவுகளை அரங்கக் கூறுகளின் பங்களிப்புப் பற்றிய விமர்சன நோக்கில் அணுகுவார்.
- படைப்பைப் பல்வேறு அர்த்தப்பாடுகளுடன் நயப்பார்.
- படைப்பைப் பல்வேறு அர்த்தப்பாடுகளுடன் விமர்சிப்பார்.
- வெளிப்படையாக விமர்சிப்பார்.
- விமர்சனத்தை ஏற்றுக் கொள்வார்.

## பாடத்திட்டமிடல் தொடர்பான அறிவுறுத்தல்கள் :

- நாடக எழுத்துரு நயத்தலுக்கும், நாடக ஆற்றுகை நயத்தலுக்கும் இடையே வேறுபாடு உண்டென்பது.
- நாடகமொன்றை நயக்கும் போதும் விமர்சிக்கும் போதும் நாடகத்தின் கூறுகளைக் கவனத்திற்கொள்ள வேண்டுமென்பது.
- நாடகத்தின் கதை, கதைப்பின்னல், கரு, பாத்திரங்கள் மற்றும் துணைக் கலைகளின் பயன்பாட்டு முக்கியத்துவம் என்பன நயத்தலின் போதும் விமர்சனத்தின் போதும் முக்கியமானது என்பது.
- படைப்பொன்றை நயக்கும் போதும் விமர்சிக்கும் போதும் பல்வேறு அர்த்தப்பாடுகள் உண்டென்பதை அறிந்திருத்தல் வேண்டும் என்பது.
- படைப்பொன்றை விமர்சிக்கும் போது அப் படைப்பின் அத்தனை விடயங்களையும் மிக ஆழமாகக் கற்றே விமர்சிக்க வேண்டும் என்பது.
- விமர்சனம் என்பது ஆக்கபூர்வமானதாகவும் ஆரோக்கியமானதாகவும் இருக்க வேண்டும் என்பது.
- ஒவ்வோர் விமர்சனமும் படைப்பொன்றினை ஆக்குவதற்கான சத்தியாக விளங்க வேண்டும் என்பது.
- இவ்வாறு நயத்தலும் விமர்சனமும் சமூகத்தின் பல்வேறு வள்ச்சிக்கான உந்து சக்தியாக விளங்க வேண்டும் என்பதைக் கலந்துரையாடுங்கள்.

## முதன்மைப் பதங்கள்

- படைப்பாக்கம்.
- விமர்சனம்.
- வெளிப்படைத் தன்மை.

## தரவிருத்தி உள்ளீடுகள்
- புதியதொரு வீடு நாடக ஆற்றுகை.
- கவிதை நாடக ஆற்றுகைகள் (காணொளி இறுவட்டுக்கள்).
- விமர்சனம் தொடர்பான ஆக்கங்கள்.

## கணிப்பீடும் மதிப்பீடும் :
- புதியதொரு வீடு நாடகத்தினை நயக்கும் முறை பற்றி அறிந்து கூறுவார்.
- எழுத்துரு நிலையில் நயத்தலுக்கும் ஆற்றுகை நிலையில் நயத்தலுக்குமிடையேயுள்ள வேறுபாடுகளை இனங்காண்பார்.
- நாடக விமர்சனம் ஒன்றைச் செய்யும் போது கவனிக்கப்பட வேண்டிய விடயங்களைப் பட்டியற்படுத்துவார்.
- ஒவ்வொரு பார்ப்போனும் விமர்சகன் என்பதை உணர்வார்.
- பார்த்த நாடகங்களுக்கு ஆக்கபூர்வமாக விமர்சனம் செய்வார்.

## உசாத்துணைகள் :
- புதியதொரு வீடு, கோடை } மஹாகவி து. உருத்திரமூர்த்தி.
- கடூழியம், பொய்க்கால், உயிர்த்த மனிதர் கூத்து } இ. முருகையன்.